தர்மசக்கரம்



ரக்தாக்ஷி ௵ புரட்டாசி மீ சக்கரம் 33 ஆரம் 9

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115 திருச்சி ஜில்லா

சேலம் ஸ்ரீ ஸாரதா ஸமிதியில் அந்தர்யோகம்

சேலம் ஸ்ரீ ஸாரதா ஸமிதியில் 25—9—84 முதல் 27—9—84 முடிய மூன்று நாட்கள் சக்தி பூஜை அந்தர்யோகம் ஸ்ரீ ஸாரதா வித்யாலயத்தில் நடைபெறும். இதில் கலந்துகொள்ள விரும்பும் தாய்மார்கள் மட்டும் செப்டம்பர் மாதம் 24ஆம் தேதி திங்கட் கிழமை இரவே நேரில் வந்து நாள் ஒன்றுக்கு ரூபாய் 9-00 வீதம் ரூபாய் 27-00 மட்டும் உணவுக்காகச் செலுத்திப் பெயர்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். அமைதியைக் காக்க 12 வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுமிகளும் கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும் இதில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள்.

வாழ்க்கை முறை

காலை

	மணிமுதல்	மணிவரை
துயிலெழுதல்	4-30	
நாம ஜபம்	5-00	5-30
ஸ்நானம்	6-00	7-30
ஆரதி	7-30	
சிற்றுண்டி	7-45	
பஜனை	8-30	9-30
ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம விளக்கவுரை	10-00	11-00
அர்ச்சனை	11-30	12-30
உணவு, ஓய்வு	1-00	3-00

மாலை

	மணிமுதல்	மணிவரை
ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம விளக்கவுரை	3-00	3-45
நாம ஜபம்	4-00	4-30
சிற்றுண்டி	4-30	
ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம அர்ச்சனை, ஆரதி, பிரார்த்தனை	6-00	7-00
தியானம்	7-00	7-30
உணவு	7-45	
ஸத் ஸம்பாஷணை	8-30	9-30

குறிப்பு:- 1. செப்டம்பர் 25, 26 ஆகிய இரண்டு தினங்களிலும் ஸ்ரீ ஸாரதா கல்லூரி பிரார்த்தனைக் கொட்டகையிலும், செப்டம்பர் 27ஆம் தேதி ஸ்ரீ ஸாரதா வித்யாலயத்திலும் காலை 10-00 மணி முதல் 11-00 மணி வரை ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்களால் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம விளக்கம் நடைபெறும். இவைகளில் அன்பர்களும் கலந்துகொள்ளலாம். மேற்படி மூன்று தினங்களிலும் மாலை 3-00 மணி முதல் 3-45 மணிவரை ஸ்ரீ ஸாரதா வித்யாலயத்தில் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம விளக்கவுரை யதீஸ்வரிகளால் நடைபெறும். இவைகளில் தாய்மார்கள் மட்டும் கலந்து கொள்வார்கள்.

2. ஸ்ரீ ஸாரதா வித்யாலயத்தில் செப்டம்பர் 27ஆம் தேதி மாலை அர்ச்சனை 4-30 மணி முதல் 5-30 மணிவரை நடைபெறும். அன்று மாலை 6-00 மணிக்கு ஸ்ரீ ஸாரதா கல்லூரியில் ஸ்ரீ ஸாரதா ஸ்தாபனங்களின் மாணவிகளால் கலாநிகழ்ச்சிகள் நடைபெறும். அன்பர்களும் இதில் கலந்துகொள்ளலாம்.

இங்ஙனம்
யதீஸ்வரி சாரதாப்ரியா

தர்ம சக்கரம்

Acc. No. 38682

மாத சஞ்சிகை

சக்கரம் 33	ரக்தாக்ஷி ஸு புரட்டாசி மீ	ஆரம் 9

பொருளடக்கம்

வருட சந்தா: உள்நாடு	ரூ.	15-00	வெளிநாடு	ரூ.	45-00
தனி இதழ் ,,	ரூ.	1-50	,,	ரூ.	4-00

அந்தர்யோக விவரங்கள்

சேலம் ஜில்லா—ஓமலூரில் 23—9—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: குப்புசாமி செட்டியார் ஆரம்பப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

கோவை ஜில்லா—அன்னூரில் 23—9—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி குஹானந்தர்

காமராஜ் மாவட்டம்—விருதுநகரில் 23—9—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பெரிய காளியம்மன் கோவில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் 12-00 மணிவரை. மாலை 5-00 மணிமுதல் 7-30 மணிவரை லலிதா சஹஸ்ரநாம அர்ச்சனை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஸதானந்தர்

இராமநாதபுரம் ஜில்லா—பள்ளத்தூரில் 23—9—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ சாரதா சேவாஸ்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி போதானந்தர்

அந்தர்யோக விவரங்கள் (தொடர்ச்சி)

மதுரை ஜில்லா—கம்பத்தில் 23—9—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ முக்தி விநாயகர் பள்ளி ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்
உணவு வசதி: பகல் உணவிற்கு ரூ. 1-50 நேரில் செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

கோவை ஜில்லா—ரெட்டியாரூரில் 27—9—84 வியாழக்கிழமை

இடம்: தத்துவ ஞானசபை
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

இராமநாதபுரம் ஜில்லா—சாத்தூரில் 30—9—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: S. H. N. எட்வர்ட் மேல்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்

மதுரை ஜில்லா—சுருளிமலையில் 6—10—84 சனிக்கிழமை

இடம்: சுருளித் தீர்த்தத்துக்கு அருகில்
நேரம்: காலை 10-90 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

மதுரை ஜில்லா—தேனியில் 10—10—84 புதன்கிழமை

இடம்: ஸ்ரீ கணேச கந்தபெருமாள் ஆலயம், தியாகராஜ நகர்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்
உணவு வசதி: பகல் உணவிற்கு ரூ.—2-00 நேரில் செலுத்திச் சீட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

பெங்களூர்—கண்டோன்மெண்டில் 14—10—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: அஜந்தா டாக்கீஸ் எதிரிலுள்ள ஒடுக்கத்தூர் சுவாமிகள் மடம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—முக்கூடலில் 14—10—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: அருள்மிகு பத்ரகாளி அம்மன் திருக்கோவில்
நேரம்: காலை 10-90 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

மதுரை ஜில்லா—திருவேடகத்தில் 14—10—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: விவேகானந்த கல்லூரி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
உணவு வசதி: பகல் உணவிற்கு ரூ. 2-00ம் மாலைச் சிற்றுண்டிக்கு ரூ. 1-50 நேரில் செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 33 | ரக்தாக்ஷி ௵ புரட்டாசி ௴ | ஆரம் 9

பிரார்த்தனை

भिद्यते हृदयग्रन्थिः छिद्यन्ते सर्वसंशयाः ।
क्षीयन्ते चास्य कर्माणि तस्मिन् दृष्टे परावरे ॥

— मुण्डकोपनिषद्

பித்யதே ஹ்ருதயக்ரந்தி: ச்சிந்தன்தே ஸர்வஸம்சயா: ।
க்ஷீயன்தே சாஸ்ய கர்மாணி தஸ்மின் த்ருஷ்டே பராவரே ॥

— முண்டகோபநிஷதம்

ஒருவனுக்கு ஞானோதயம் வரும்பொழுது அனைத்துமாய் இலங்கும் பெரிய பொருளின் காட்சியை அவன் அடையப்பெறுகிறான். அவன் உள்ளத்தைக் கட்டியுள்ள முடிச்சு அவிழ்ந்து போகிறது. சம்சயங்களனைத்தும் அகலுகின்றன. கர்ம விகாரங்களனைத்தும் அகன்று போகின்றன.

'வார்த்தை யறிபவர் மாயவற் காளன்றி யாவரோ?
போர்த்த பிறப்பொடு நோயொடு மூப்பொ(டு) இறப்பிவை
பேர்த்துப் பெருந்துன்பம் வேரற நீக்கித்தன் தாளின்கீழ்ச்
சேர்த்(து) அவன்செய்யும் சேமத்தை எண்ணித் தெளிவுற்றே.'

— திருவாய்மொழி

அருள் விருந்து

சத்தியவிரதம் ஒப்புயர்வற்றது.

ஈசனை உபாசிப்பவன் எதற்கும் அஞ்சுவதில்லை.

சுயநல நாட்டத்தைச் சௌபாக்கியமாக்க வல்லது அன்பு.

இறைவனுடைய மகிமையே இவ்வுலகாகக் காட்சி தருகிறது.

உள்ளன்பு படைத்திருப்பவனே உண்மையில் வாழ்ந்திருக்கிறான்.

தன்னைத்தானே ஆள்கின்றவன் உலகை ஆள்பவனைவிட மேலோன்.

உள்ளத்தினுள்ளே இறைவனை உணர்பவனுக்குத் தௌர்பாக்கியம் ஏதும் இல்லை.

தூய அன்பானது மதக்கொள்கைகளையும் கோட்பாடுகளையும்விட மேலானது.

ஆத்ம ஞானம் அடையப்பெற்றுள்ளவன் உயிர்கள் அனைத்தையும் தன்மயமாக உணர்கிறான்.

அன்புக்கு அலுப்பு இல்லை; ஆயாசமில்லை; குழப்பமில்லை; விக்கினங்களை அது வெல்லுகிறது.

மனிதனிடமிருந்து மனிதனைப் பிரித்து வைத்திருப்பவைகள் மதக்கோட்பாடுகள் ஆகமாட்டா.

ஈசனுடைய சாந்நித்தியத்தை உள்ளத்தினுள்ளே உணர்கிறவன் பேராற்றல் படைத்தவனாகிறான்.

தான் கற்றுள்ளது கைம்மண் அளவே என அறிகிறவன் மேலும் கற்கத் தகுதியுடையவன் ஆகிறான்.

பரம்பொருளின் மகிமைகளை அறியாது நெடுநாள் வாழ்ந்திருப்பதைவிட அவைகளை அறிந்து ஒருநாள் வாழ்ந்திருப்பது மேல்.

மரம் ஒன்று தன்போக்கில் வளர்கிறது. அதே பாங்கில் மதத்தை அனுஷ்டிப்பவனும் வளர்கிறான். மதமாற்றம் அவனுக்குப் பொருளற்றது.

பௌதிக விஞ்ஞானி ஐம்பூதங்களை அடக்கியாளும் வல்லமையைப் பெறுகிறான். ஆனால் மனம் அடங்கியிருத்தல் பொருட்டு நாம் அன்னவனை நாடுவதில்லை.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பரமஹம்ஸதேவர் பக்தர்களோடு உரையாடிக் கொண்டிருக்கின்றார்.

மகிமசரண்: "வாழ்வுக்குரிய கடமைகள் எங்கள் தலைக்கு மேல் இருக்கின்றன. அவைகளுக்கு இடையில் நாங்கள் எங்ஙனம் ஆத்ம சாதனங்களில் ஈடுபட முடியும்?"

பரமஹம்ஸதேவர்: "நீ இங்ஙனம் சொல்வது பொருந்தாது. உன்னுடைய சொல்லுக்கும் செயலுக்கும் இடையில் பொருத்தம் ஏதும் இல்லை. இவ்வுலகம் வெறும் கனவுக்கு நிகரானது என்று நீ பகர்கின்றாய். அத்தகைய கனவுலகில் நீ மாட்டிக்கொண்டதாக நினைத்துக்கொள்கின்றாய். இவ்வுலகைக் கனவாகக் கருதுபவனுக்கு ஆத்ம சாதனத்தில் ஈடுபட ஏராளமான நேரம் கிடைக்கும்." இக்கூற்றுக்குப் பதில் ஒன்றும் கூறாது மகிமசரண் மௌனமுற்று இருந்துவிட்டார். உலகில் பல அலுவல்களை அவர் மனமுவந்து ஏற்றுக்கொண்டிருந்தார். பிறருக்குத் தொண்டு புரிதற்பொருட்டு அண்மையில் பள்ளிக்கூடம் ஒன்று தொடக்கி வைத்து அவர் நடாத்தி வந்தார்.

சம்பு ஒருமுறை இயம்பியதாவது: "என்னிடம் செல்வம் கொஞ்சம் இருக்கிறது. நல்ல காரியங்களில், நல்வழியில் அந்தச் செல்வத்தைப் பயன்படுத்த நான் விரும்புகிறேன். பள்ளிக்கூடம் வைத்தல், ஆஸ்பத்திரி நடாத்துதல், ஓர் ஊரில் இருந்து மற்றோர் ஊருக்கு மக்கள் போகும் பாதையைத் திருத்தி அமைத்தல் ஆகிய சத் காரியங்களில் அச்செல்வத்தைப் பயன்படுத்துவது என்னுடைய நோக்கமாகிறது."

இதற்கு நான் கொடுத்த விடையாவது: "இவையாவும் சத்காரியங்களேயாம். கீர்த்தி, புகழ் முதலிய சுயநல எண்ணங்களை அறவே ஒதுக்கி வைத்துவிட்டுச் சுயநலமற்ற பாங்கில் இவைகளை நிறைவேற்றுவது முற்றிலும் நல்லது. ஆயினும் அத்தகைய பற்றற்ற கர்மத்தை ஈசுவர ஆராதனைக்கு நிகராகக் கருதி, நிறைவேற்றுவது மிகவும் கடினம். மானுடன் ஒருவன் தான் புரிகின்ற சத்கர்மத்திற்குக் கைம்மாருகப் பேரும் புகழும் தனக்கு வந்தமைய வேண்டும் என்கின்ற எண்ணம் அவனுடைய உள்ளத்தில் தானகவே உதிக்கிறது. இதற்குக் காரணம் யாது என்று கண்டுபிடிக்க யாருக்குமே இயலுவதில்லை. உன்னிடம் நான் கேள்வி ஒன்று கேட்கிறேன். கடவுள் மனமுவந்து உன்முன் தோன்றுகிறார் என்று வைத்துக்கொள். அப்படி அவர் தோன்றி வரும்போது நீ அவரிடம் என்ன கேட்பாய்? பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி போன்று பொதுநல சேவையில் நீ ஈடுபடும்படி அனுக்கிரகம் செய்ய வேண்டும் என்று நீ கேட்பாயா?"

ஒரு பக்தர்: "ஐயனே, உலக வாழ்க்கையில் உழன்று கிடப்பவர்கள் உய்வடைவதற்கு உற்ற உபாயம் யாதோ?"

பரமஹம்சதேவர்: "சத்சங்கத்தில் வாழ்வது ஒன்றே உய்வடைவதற்கு உற்ற உபாயமாகிறது. உலகப்பற்றுடையவர்கள் கடவுளைப் பற்றிய கருத்துக்களைச் சான்றோர்கள் சொல்லக் கேட்கவேண்டும். உலகத்தவர்கள் காசு ஆசையிலும், காமத்திலும் மூழ்கிப் பித்துப் பிடித்தவர்கள் போன்று இருக்கின்றனர். கள் வெறியில் இருப்பவனுக்கு அரிசியைக் கழுவிய கழுநீரைச் சிறிது சிறிதாக அருந்தும்படி செய்யவேண்டும். அப்படி அருந்துவதன் விளைவாக அவனுடைய போதை படிப்படியாகத் தெளிவடைகிறது."

"உலக வாழ்வில் ஈடுபட்டிருக்கும் ஒருவன் பாரமார்த்திகப் பெருவாழ்வு வாழ்கின்ற சத்குரு ஒருவரிடமிருந்து தெய்விக விஷயங்களைப் பற்றி அறிந்துகொள்ள முயலவேண்டும். காசிக்குப் போகவேண்டும் என்று விரும்புகிற ஒருவன் அதைப்பற்றிப் படித்தவனிடம் இருந்து காசி நகரைப்பற்றிய முழு விவரத்தை அறிந்து கொள்ள முயலலாகாது. காசி சென்று அதைப் பார்த்துவந்த ஒருவனிடமிருந்தே அதைப்பற்றி அறிந்துகொள்ளுதல் உசிதம். கடவுள் விஷயத்தில் ஏட்டுக்கல்வி உதவமாட்டாது. பண்டிதன் ஒருவன் இருக்கின்றான்.

ஏட்டுக்கல்வியால் பெற்ற ஞானம் அவனிடம் ஏராளமாக இருக்கிறது. ஆயினும் இவ்வுலக வாழ்வு அநித்தியமானது என்னும் விவேகம் அவனுக்கு இன்னும் வரவில்லை. அத்தகைய பண்டிதனிடம் இருந்து பாரமார்த்திக விஷயம் எதையும் ஆத்மசாதகன் ஒருவன் அறிந்து கொள்ள முற்படல் ஆகாது. விவேகம், வைராக்கியம், பக்தி முதலிய தெய்விக சம்பத்துக்கள் வாய்க்கப்பெற்றவனிடம் இருந்தே சத் விஷயத்தைப்பற்றிக் கேட்டு அறிந்து கொள்ளுதல் வேண்டும்.''

சமத்தியாயி என்னும் பிரம்ம சமாஜத்தின் அங்கத்தினர் ஒருவர் இயம்பியதாவது: "கடவுளிடத்துப் பாராட்டுதற்கு உரிய நயம் ஏதும் இல்லை. நயம், நலன், இனிமை ஆகிய அனைத்துக்கும் உறைவிடமாய் இருப்பவன் ஈசன். அத்தகைய ஈசனிடம் நயம் ஏதும் இல்லையென்று இயம்புவதில் உள்ள விபரீதத்தை எண்ணிப்பாருங்கள். விஷயம் அறியாத இளைஞன் ஒருவன் தன் மாமா வீட்டில் மாட்டுத் தொழுவத்தில் குதிரைகள் ஏராளமாகக் கட்டப்பட்டிருந்தன என்று இயம்பியதற்கு ஒப்பானது அல்லவா இக்கூற்று!" இதைக்கேட்ட எல்லாரும் நகைத்தார்கள்.

"உலகப்பற்றுடைய மனிதன் ஒருவன் பந்தபாசம் என்னும் மயக்கத்தில் ஆழ்ந்து மூழ்கி இருக்கிறான். 'நான் பெரிய பொறுப்பு எடுத்துக் கொண்டிருக்கின்றேன்' என்னும் உணர்ச்சியில் ஊறி இருக்கிறான். வீடு, வாசல், மனைவி, மக்கள் ஆகிய எல்லாரும் தனக்குச் சொந்தம் என்று தன் பொறுப்பைக் குறித்து அவன் பெருமையடித்துக் கொள்கிறான். 'நான் இல்லாவிட்டால் என் மனைவி மக்களுடைய கதி என்னவாகும்?' என்று அவன் பல்லைக்காட்டிப் பேசுகிறான். நான் இல்லாவிட்டால் அவர்கள் கதி என்னவாகும்? என் மனைவி மக்களை நான் இல்லாதபோது யார் காப்பாற்றுவார்கள்?'' இந்தப் பாங்கில் ராக்கால் ஒருதடவை இயம்பியதாவது:

"என் மனைவியின் கதி என்னவாகும்?''

ஹரமோகன்: "ராக்காலும்கூட இத்தகைய பந்தபாசத்தில் ஈடுபட்டவராக இருந்தாரா?" என்று வினவினான்.

பரமஹம்சதேவர்: ''அதைத் தவிர அவன் இயம்புவதற்கு வேறு யாது உளது? பிரபஞ்ச வாழ்க்கையில் ஞானம், அஞ்ஞானம் ஆகிய இரண்டும் கலந்தே இருக்கின்றன. 'தன் மக்களுடைய மரணத்தைக் குறித்துத் தீர்க்கதரிசியாகிய வசிஷ்டரும்கூடப் பெரும் வேதனைக்கு ஆளானார். இது ஆச்சரியம் அல்லவா" என்று லட்சுமணன் ஸ்ரீ ராமனிடம் எடுத்துரைத்தான். அதற்கு ஸ்ரீ ராமன் கொடுத்த விடையாவது: 'தம்பி, எவனொருவன் இவ்வுலக சம்பந்தமான அறிவில் ஊறி இருக்கின்றானோ அன்னவன் உள்ளத்தில் அறியாமையும் இடம்பெறுகிறது. ஆகையினால் இவ்வுலக சம்பந்தமான ஞானம், அஞ்ஞானம் இரண்டையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு அதீதத்தை நாடிப்போதல் வாழ்க்கையின் குறிக்கோள் என்பதை மறந்துவிடாதே.'

"மனிதன் ஒருவனுடைய காலில் முள் ஒன்று தைத்திருக்கிறது என வைத்துக்கொள்வோம். மற்றொரு முள்ளை எடுத்து அதைக் களைந்து எடுக்கிறான் அம்மனிதன். பிறகு இரண்டு முட்களையும் புறக்கணித்துவிடுகிறான். அதற்கு நிகரானது மனிதன் செய்யவேண்டிய உலகக் கடமை. அஞ்ஞானம் என்னும் முள் அவன் காலில் தைத்திருக்கிறது. ஞானம் என்கின்ற முள்ளைக்கொண்டு அதைக் களைந்து எடுக்க வேண்டும். பிறகு இவ்வுலக சம்பந்தமான ஞானம், அஞ்ஞானம் ஆகிய இரண்டையும் புறக்கணித்துவிட்டுப் பரத்தை அடைவது மனிதனுடைய கடமை ஆகிறது".

"பரஞானம் என்பது யாது? மெய்ப்பொருளாகிய ஈசன்தான் இப்பிரபஞ்சத்தில் உள்ள யாவுமாகக் காட்சி கொடுத்துக் கொண்டிருக்கிறான். அப்படிக் காட்சி கொடுக்கிற அவனை மறந்துவிட்டு இவ்வுலகில் பற்று வைத்திருப்பது அஞ்ஞானம். ஈசனுக்குப் புறம்பாகப் பிரபஞ்சம் என்பது ஒன்றுமில்லை என்று அறிந்து கொள்வது இவ்வுலக சம்பந்தமான ஞானம். பிறகு சாதனங்கள் புரிந்து ஈஸ்வர சாக்ஷாத்காரம் பண்ணுவது பரஞானம் ஆகிறது. அப்படிப் பரஞானம் அடையப் பெற்றவனுக்குப் பிரபஞ்சத்தைப் பற்றிய மயக்கம் ஒன்றும் வருவதில்லை. பிரபஞ்சமாகக் காட்சி கொடுத்துக்கொண்டிருக்கின்ற பரஞானத்தில் அத்தகைய நிறைஞானி யாண்டும் நிலைத்திருக்

கிறுன். ஆதலால்தான் கிருஷ்ண பரமாத்மா அர்ஜுனனிடம்,

गुणानेतानतीत्य त्रीन्देही देहसमुद्भवान् ।
जन्ममृत्युजरादुः खैर्विमुक्तोऽमृतमश्नुते ॥

குணநேதானதீத்ய த்ரீந்தேஹீ தேஹஸமுத்பவான்
ஜன்மம்ருத்யு ஜராதுःகைர்விமுக்தோऽம்ருதமச்னுதே

'பிரபஞ்சம் முக்குணமயமானது. அர்ஜுனு, நீ முக்குணத்திற்கு அப்பால் இருக்கிற பரமனேச் சாக்ஷாத்கரிப்பாயாக' என்று போதித்துள்ளார். இதுவே மானுட ஜன்மத்தின் முடிவான குறிக்கோளாகும்.

"பரம்பொருளே அடைதற்குப் பாரமார்த்திக வாழ்வை மனிதன் முறையாகக் கையாள வேண்டும். மாயையில் இரண்டு பகுதிகள் உள. அவித்யா மாயை என்றும் வித்யா மாயை என்றும் அவை இரண்டும் பாகுபடுத்தப்படுகின்றன. இவ்வுலகுக்கு இறைவன் மூல காரணம் என்பதை அறிந்து கொள்ளாது இவ்வுலகம் தான் அனைத்தும் என்னும் எண்ணத்தில் ஊறிக்கிடப்பவன் அவித்யா மாயையில் கட்டுண்டவனுகிறுன். பின்பு, மாறியமையும் பாங்குடைய பிரபஞ்சத்துக்கு மாறுப்பொருளாகிய பரமன் மூலகாரணமாயிருக்கிறுன் என்பதை விசாரித்துப் பார்த்து அறிந்துகொள்ளுதல் வித்யா மாயையாகின்றது. காலில் தைத்துள்ள முள்ளைக் களைந்தெடுப்பதற்கு மற்றொரு முள் பயன்படுவது போன்று அவித்யா மாயையைக் களைதற்கு வித்யா மாயையை ஆத்ம சாதகன் தீவிரமாகக் கையாளுதல் வேண்டும். நித்திய அநித்திய வஸ்து விசாரம் செய்தல் வித்யா மாயையின் முதற் பகுதியாகிறது. பிரபஞ்சம் அநித்யமானது. பரம்பொருளே நித்திய வஸ்துவாய் இலங்குகின்றுர். இதற்குச் சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். கயிறு பாம்பாகத் தென்படுகின்றது. பாம்பாகத் தென்படுவது பொய்க்காட்சி என்றும் உண்மையில் கயிறுதான் பாம்பாகக் காட்சி கொடுத்துக் கொண்டிருக்கிறது என்றும் யுக்தி பூர்வமாக அறிவது வித்யா மாயை.

"பாம்பு, கயிருகிய இரண்டையும் மனிதன் ஏககாலத்தில் காண்பதில்லை. அதே பாங்கில் ஈசுவர சாக்ஷாத்காரம் அடையப்பெற்றவனுக்கு நன்மை, தீமையோடு கூடிய உலகக் காட்சி மேலும் இல்லவே இல்லை. அதை அனுபூதியில் அடைதற்கு அவன் ஓயாது சாதனங்கள் புரியவேண்டும். சாதனை முறைகள் பலவகை உண்டு. ஈசனுடைய நாமத்தை இடையருது உச்சரிப்பது ஒரு சாதனம். ஈசன் சொருபத்தைத் தியானம் பண்ணுவது மற்றொரு சாதனம். பரம்பொருளைக் குறித்துப் பக்தி பூர்வமாக வேண்டுதல் இன்னும் ஒரு சாதனமாகிறது. பரத்தை அடையப் பெற்றுள்ள சான்றோருடன் சத்சங்கம் செய்வது மேலும் ஒரு சாதனம் ஆகிறது. சாதகன் தனக்கு ஞானக்கண் வாய்க்க வேண்டும் என்று பரமனிடத்துக் கசிந்துருகிப் பிரார்த்தனை பண்ண வேண்டும். பொறிபுலன்கள் இதற்குப் பயன்படமாட்டா. இவை யாவற்றையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு அந்தர் முக திருஷ்டியிலேயே சாதகன் வாழ்ந்திருந்து பழகவேண்டும். பகிர் முக திருஷ்டியில் இதுநாள் வரையிலும் மனம் சென்று பழகியிருக்கிறது. திடீரென்று அதை அந்தர்முக திருஷ்டியில் திருப்புவது சற்றுக் கடினமாகத்தான் இருக்கும். ஆனல் இடைவிடாத அப்பியாசத்தின் மூலமாகவும், வைராக்கியத்தின் மூலமாகவும் மனதை அந்தர்முகமாகத் திருப்பலாம். இச்சாதனையை நம் முன்னேர்கள் செய்து சாதித்திருக்கிருர்கள். அவர்கள் காட்டியுள்ள வழியை ஒருவன் பின்பற்றிச் சாதனை பழகிவரவேண்டும். அப்படிப் பழகப்பழக அவன் காலம், தேசம், நிமித்தம் ஆகிய மூன்றையும் கடக்க வல்லவனுகின்றுன். பிறகு, ஈசனுடைய அனுக்கிரகத்தால் பரஞானம் வாய்க்கப்பெறுமிடத்து அவன் மனம் அடியோடு ஒடுங்குகிறது. மனுதீதத்தில் உள்ள மெய்ப்பொருளின் காட்சி பெறும் வாய்ப்பு அவனுக்குத் தெய்வ சங்கல்பத்தால் வந்து அமைகிறது.

"தரையிலிருந்து மாடிக்குப் போகப் மனிதன் படிக்கட்டில் ஏறிச் செல்கின்றுன். தரையில் வாழ்ந்திருப்பதற்கு நிகர் இப்பிரபஞ்ச வாழ்வு. படியில் படிப்படியாக மேலேறுவதற்கு நிகர் மேலே இயம்பிய சாதனங்கள் புரிவது. மாடிக்குப் பக்கத்தில் உள்ள படிகளுக்கு நிகர் ஆழ்ந்து தியான நிஷ்டனுவது, பிரபஞ்சத்தை மறந்திருப்பது முதலியன. மாடியை எட்டுதற்கு நிகர் மனுதீதத்தில் பரமனேடு இரண்டறக் கலந்திருத்தல்."

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

11-16. கல்குணத்தைப் போன்றவஞ்சக் காரர்கள்கை கோவாமல்
நல்குணத்தார் கைகோத்து நான் திரிவது எந்நாளோ.

கல்குணம்-வல்லியல்பு; தீயகுணம். நல் குணம்-நல்லியல்பு.

ஆத்ம சாதகன் ஒருவனுக்குச் சூழ்நிலை பெரிதும் பயன்பட்டு வருகிறது. பொருத்தமான சூழ்நிலையில் வாழ்ந்திருப்பவனுக்குச் சாதனம் எளிதில் கைகூடுகிறது. பொருந்தாத சூழ்நிலையில் வாழ்ந்திருப்பவனுக்குச் சாதனம் எளிதில் கைகூடுவதில்லை. பொருந்தாத சூழ்நிலையில் வாழ்ந்திருப்பவன் பெரும் சிரமம் எடுத்துக் கொள்ளவேண்டும். ஓர் உபமானத்தால் இவ்விரண்டுக்கும் இடையிலுள்ள வேற்றுமையை அறிந்துகொள்வது சாத்தியம். ஓடுகிற நதியை எதிர்த்து நீந்துதற்கு நிகர் பொருந்தாத சகவாசம். நதிபோகும் போக்கிலேயே நீந்துதற்கு நிகர் நல்ல சகவாசம். ஆத்ம சாதகர்களுக்குப் பொதுவாக ஏற்பட்டுள்ள நியதி இதுவாம். ஆனால் சிலசமயங்களில் அரிதிலும் அரிதாக இந்த நியதிக்கு விலக்கு வந்து அமைகிறது. இதற்குச் சான்றாக விவேகானந்த சுவாமிகளை எடுத்துக்கொள்ளலாம். அவர் பிறவியிலிருந்து ஒரு சுத்த புருஷர். சூழ்நிலை எதுவானாலும் அது அவரை வந்து பாதிக்கவில்லை. மாணக்கனாய் இருந்தபொழுது தம்முடைய குருநாதராகிய ராமகிருஷ்ணபரமஹம்சரை அவர் வந்து சந்தித்தார். அவருடைய நுண்ணறிசயங்களைப் பார்த்துப் பரமஹம்சதேவர் திகைத்துப்போனார். லெளகிகம் நிறைந்துள்ள கல்கத்தா நகரிலே இத்தகைய சுத்த புருஷன் ஒருவன் தோன்றியிருப்பது அரிதிலும் அரிது என்று அவர் இயம்பினர். நரேந்திரன் துஷ்டர்களோடும் அன்னியோன்னியமாகப் பழகி வருகிறான் என்ற புகாரைப் பரமஹம்சரிடம் சிலர் கொண்டு வந்தார்கள். அதற்கு அவர் விடுத்த விடையாவது: "எந்தச் சூழ்நிலையிலும் நரேந்திரனுடைய மேலான இயல்பு மட்டும் ஒருபொழுதும் பாதிக்கப்படாது. துஷ்டர்களோடு அவன் பழகுவானகில் அத்தகைய துஷ்டர்கள் நரேந்திரனைப் பார்த்து நல்லார்களாகத் திருந்துவார்கள். நரேந்திரன் மட்டும் தன் மேலான இயல்பினின்று ஒருபொழுதும் கீழ்நிலைக்கு இறங்கான்."

ஆத்ம சாதனம் புரிய விரும்புகின்றவர்க்கு ஆத்ம சாதனத்தில் தீவிர நாட்டம் உடைய நல்லார்கள் இணக்கம் ஏற்படுமாகில் அது கிடைத்தற்கரிய பேருதவியாகிறது என்பதே இக்கண்ணியின் உட்பொருளாம்.

11-17. துஷ்டனைமா மாயைச் சுழல்நீக்கி அந்தரமே விட்டனையோ என்று வியக்குநாள் எந்நாளோ.

இறைவனுடைய அருள் என்னும் தென்றல் சர்வகாலமும் வீசிக்கொண்டிருக்கிறது. அதைப் பயன்படுத்த வல்லவன் பாக்கியவான் ஆகிறான். அப்படியல்லாது தன் சிற்றியல்பிலேயே சர்வகாலமும் உழன்று கொண்டிருப்பவன் தௌர்பாக்கியவான் ஆகிறான். ஓர் உபமானத்தைக் கொண்டு பரமஹம்ஸதேவர் அத்தகையவனைச் சுட்டிக்காட்டுகின்றார். சாணத்திலே பிறந்து சாணத்திலே உழன்று கொண்டிருக்கும் புழுவொன்றைச் சந்தனத்தில் வைத்தால் அது உடனே அழிந்துபட்டுப்போம். அத்தகைய பாங்குடையவன் கீழான இயல்புடையவன். நல்லியல்பு ஆத்ம சாதனத்திற்கு இன்றியமையாதது ஆகும்.

யாண்டும் இறைவனுடைய சாந்நித்தியத்திலேயே திளைத்திருப்பவர்களுக்கு உலகத்தவர் செய்யும் உதவி பொருளற்றதாகிறது. ஆகையினால் உலகத்தவர் செய்கின்ற உதவிக்குச் சான்றோர்கள் நன்றியோ, ஆசிமொழியோ கூறுவிட்டால் அதைப்பற்றி அவர்கள் ஏமாற்றம் அடைய வேண்டியதில்லை. இவ்விஷயத்தில் மேல் நாட்டுப் பண்புக்கும், கீழ் நாட்டுப் பண்புக்கும் வேற்றுமை ஒன்று உள்ளது. பிறர் செய்கின்ற ஒவ்வோர் உபகாரத்திற்கும் நன்றி கூறுதல் மேல் நாட்டுப் பழக்கம். இந்தியப் பழக்கமோ அத்தகையதன்று. நன்றி உணர்தல் இந்தியப் பழக்கம். நன்றி நவிலுதல் மேல் நாட்டுப் பழக்கம். நன்றி உணர்கிறவன் நன்றி நவிலுபவனைவிட மேலோன். ஏன் என்றால் நவிலுவதோடு அவனுடைய கடமை முடிந்து

விடுகிறது. அதை உணர்கிறவன் யாண்டும் அதைத் தன் மனதில் வைத்திருக்கிறான். ஒவ்வொரு ஜீவனும் கணக்கற்ற பிறவி எடுத்துப் பிரபஞ்ச வாழ்வில் படிப்படியாகப் பண்பாடு அடைந்து மேல்நிலைக்கு வருகிறான். அப்படி வந்த ஜீவன் கடைசியாக எடுப்பது மானிடப் பிறவி. அது விவேகத்தோடு கூடியது. மேற்கொண்டு பிறவிகள் எத்தனைதான் எடுத்தாலும் பிரபஞ்ச வாழ்க்கையானது ஒரே தன்மையானது; யாண்டும் அது இன்பமும் துன்பமும் கலந்துள்ளது. இத்தகைய விவேகம் அடைந்தான பிறகு பிரபஞ்சவாழ்வில் அன்னவனுக்கு இயல்பாகவே விரக்தி அல்லது பற்றின்மை உதயமாகிறது. ஆதலால் அவன் இதை ஒதுக்கிவிட்டுப் பரத்தை நாடுகிறான். அந்நாட்டத்திற்கு ஏற்பப் பரமனும் அனுக்கிரகம் பண்ணுகிறான். அத்தகைய அனுக்கிரகத்திற்கு ஏற்ற கைம்மாறு பிரபஞ்சத்தில் ஒன்றும் இல்லவே இல்லை.

தாயுமானவருக்கு வாய்த்த மௌனகுரு போன்று உடல் தாங்கியுள்ள பரமன் புன்னகை படைத்தவராக அனுக்கிரகம் பண்ணுகின்றார். தாயுமானவர் போன்ற தகுதி வாய்ந்த மாணக்கன் அதற்கு நன்றி கூற இயலாதபடி பேருணர்வில் மூழ்கி இருக்கின்றான். இதுவே பிறவிப் பெருங்கடலைத் தாண்டிச் செல்கின்றவர் கடைசியாகக் காட்டும் நன்றி அல்லது வியப்பாம்.

ஸ்ரீ தேவீ மஹாத்மியம்

या देवी सर्वभूतेषु बुद्धिरूपेण संस्थिता ।	யா தேவீ ஸர்வபூதேஷு புத்திரூபேண ஸம்ஸ்திதா
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥	நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:
या देवी सर्वभूतेषु शक्तिरूपेण संस्थिता ।	யா தேவீ ஸர்வபூதேஷு சக்திரூபேண ஸம்ஸ்திதா
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥	நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:
या देवी सर्वभूतेषु क्षान्तिरूपेन संस्थिता ।	யா தேவீ ஸர்வபூதேஷு க்ஷாந்திரூபேன ஸம்ஸ்திதா
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥	நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:
या देवी सर्वभूतेषु शान्तिरूपेण संस्थिता ।	யா தேவீ ஸர்வபூதேஷு சாந்திரூபேண ஸம்ஸ்திதா
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥	நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:
या देवी सर्वभूतेषु श्रद्धारूपेण संस्थिता ।	யா தேவீ ஸர்வபூதேஷு ச்ரத்தாரூபேண ஸம்ஸ்திதா
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥	நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:
या देवी सर्वभूतेषु कान्तिरूपेन संस्थिता ।	யா தேவீ ஸர்வபூதேஷு காந்திரூபேண ஸம்ஸ்திதா
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥	நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:
या देवी सर्वभूतेषु दयारूपेण संस्थिता ।	யா தேவீ ஸர்வபூதேஷு தயாரூபேண ஸம்ஸ்திதா
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥	நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:
या देवी सर्वभूतेषु तुष्टिरूपेण संस्थिता ।	யா தேவீ ஸர்வபூதேஷு துஷ்டிரூபேண ஸம்ஸ்திதா
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥	நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:
या देवी सर्वभूतेषु मातृरूपेण संस्थिता ।	யா தேவீ ஸர்வபூதேஷு மாத்ருரூபேண ஸம்ஸ்திதா
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥	நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:

புத்தி, சக்தி, பொறுமை, சாந்தி, சிரத்தை, காந்தி, தயை, திருப்தி, தாய் வடிவங்களாக எந்தத் தேவி எல்லா உயிர்களிடத்தும் உறைகின்றாளோ அவளுக்கு நமஸ்காரம், நமஸ்காரம், நமஸ்காரம்.

விவேகானந்தர் கடிதத்தில் கூறியருளிய கருத்து-8

1893 ஆம் ஆண்டு மே மாதம் 23ஆம் தேதி பாலாஜிராவ் என்னும் அன்பருக்கு சுவாமிஜி அவர்கள் எழுதிய கடிதத்தில் உள்ள கருத்துக் களாவன:

இந்த மாயப் பிரபஞ்சத்தில் நலன், கேடு சேர்ந்தே அமைந்திருக்கின்றன. ஒரு சிலர் பெரிதும் நலன்களையே அனுபவிக்கின்றனர். கேட்டினின்று அவர்கள் யாண்டும் தப்பித்துக் கொள்கிறார்கள். ஆனால் வேறு சிலருக்குக் கேடே வந்து சூழ்ந்து அவர்களை அலைக்கழிக் கிறது. அன்னவர்கள் படும் துன்பத்திற்கு ஓர் எல்லையில்லை. பிரபஞ்ச வாழ்வும் ஒரு வாழ்வா என்று அவர்கள் பெரிதும் ஏங்கிக் கொண்டிருக்கின்றனர். இவ்வுலகம் நலமும் கேடும் சூழ்ந்துள்ளதைப் பார்த்து எல்லாம் ஈசனுடைய திருவிளையாடல் என்று சான்றோர் கள் கருதுகின்றனர். சமுத்திரத்தின் மேற் பகுதியில் அலை உருண்டோடுகிறது. மற்று, கீழ்ப்பகுதியோ அமைதியுற்று யாண்டும் தன் மயமாய் இருக்கிறது. இதுவே மனித னுடைய நிஜநிலையாம். இதை மறந்துவிட்டு மனிதன் நிலையற்ற உலக வாழ்வில் மிகை பட்ட பற்று வைக்கின்றான். அந்தப் பற்றின் விளைவாகவே ஒரு சிலர் இன்பத்தையும் வேறு பலர் துன்பத்தையும் அனுபவிக்கின்றனர்.

துன்பத்தில் துயருற்றுக் கிடக்கின்றவர்கள் ஆழ்ந்து கடலுக்குள் மூழ்கியதற்கு நிகராகத் தங்கள் உள்ளத்தினுள்ளேயே கருத்துச் செலுத்துவார்களாகில் ஆங்கு அமைந்திருக்கும் அற்புதம் அவர்களுக்கு வெளியாகிறது. பர ஞானத்திற்கு உரிய மனிதன் அதற்கு மாறாகப் பிரபஞ்சப்பற்றைத் தூக்கித் தலையில் போட் டுக்கொண்டு அல்லலுக்கு ஆளாகின்றான். இன் பம், துன்பம் ஆகிய இரண்டுக்கும் உண்மை யான இருப்பிடம் ஈஸ்வரனுடைய சாந்நித்தி யம். அவ்வுண்மையை அறிய வருகின்றவனுக் குத்தான் பிரபஞ்சப்பற்றை ஒதுக்கித் தள்ளி விட்டுப் பரத்தின்கண் தன் கருத்தைச் செலுத் தும் திறமை வந்தமைகிறது. அங்ஙனம் தன் நிஜநிலையை அறியப்பெறுகின்றவன் தான் பட்ட துயரத்தையெல்லாம் விமர்சனம் செய்து பார்த்துவிட்டுத் தன்மீது அனுதாபம் காட்டிக் கொள்கிறான். தானே தனக்குச் சுற்றம், தானே தனக்கு விதி வகை என்னும் உண் மையை அவன் அறிகிறான். கனவு கண்டு கொண்டிருக்கும் பரியந்தம் கனவுலகம் நிஜமா னது. அதை விட்டு விழித்துக்கொண்டபிறகு அதை ஒதுக்கித் தள்ளுதலில் அவனுக்குச் சிரமம் ஏதும் இல்லை. கனவிலே எல்லாவிதச் சுகங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கிற வன் விழித்தெழுந்தானவுடனே அவை கை நழுவிப்போய்விட்டனவே என்று வருந்துவ தில்லை. அதே விதத்தில் கனவுலகிலே சித்திரவதைக்கு ஆளாயிருக்கின்றவன் விழித் தெழுந்தானவுடனே தான்கண்ட கனவு வெறும் கற்பனை என்று அதை ஒதுக்கித் தள்ளி விட்டுப் பிறகு அதை மறந்துவிடுகின்றான். கனவுலகுக்கு நிகரானது நனவுலகம். இதை அறிபவனே நல்ல விவேகி ஆகிறான். விவே கம் அடையப்பெற்ற மானுடன் ஒருவன் வாழ் வில் தனக்கு வந்து அமையும் நலனையும் கேட் டையும் பொருட்படுத்துவதில்லை. யாண்டும் அவன் ஈசனுடைய அருளைச் சார்ந்திருக்கின் றான். 'ஈசா, நீ கர்த்தா; நான் கருவி; செயல் கள் அனைத்தும் உனக்கே சொந்தம். கருவி யாக என்னை வைத்துக்கொண்டு நீ நலனைச் செய்யலாம்; அல்லது கேட்டைச் செய்யலாம். அதற்கெல்லாம் பொறுப்பாளி நான் அல் லன்' என்கின்ற எண்ணம் தன் உள்ளத்தில் உறுதி அடைகின்றபொழுதுதான் பிரபஞ்ச வாழ்க்கைக்கு அவன் முற்றிலும் தகுதியுடைய வன் ஆகின்றான். நன்றாக விளையாடத் தெரி கின்ற ஒருவனுக்கு வெற்றியைப் பற்றியோ தோல்வியைப் பற்றியோ எண்ணம் இல்லை. நன்றாக விளையாடுவதோடு அவன் கடமை முடி வடைகிறது. விளையாடுவதில் முழுச்சக்தியை யும் பயன்படுத்துகிறான். அதே பாங்கில் ஈச னைச் சார்ந்திருக்கும் ஒருவன் அவன் கையில் கருவியாக அமைகிறான். வெற்றி தோல்வி யைப்பற்றிய எண்ணம் அவனுக்குச் சிறி தேனும் கவலை இல்லை. ஈசனுக்குக் கருவியாய் அமைவதற்கு ஏற்றவாறு மகிழ்வுடன் பிர பஞ்ச வாழ்வை அவன் முடிவுக்குக் கொண்டு வருகிறான்.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (423) தியானம் எப்படிச் செய்வது?

காலையிலும் மாலையிலும் சிறிதுநேரம் பொருத்தமான இடத்தில் அமைதியுடன் நிமிர்ந்து உட்கார்ந்திருந்து தியானம் பழகுவது முற்றிலும் நன்று. பல்லாயிரம் ஆண்டுகளாக நம் நாட்டு மக்கள் கையாண்டு வந்துள்ள ஆன் மீகப் பயிற்சி இதுவாம். ஒவ்வொரு ஜீவனும் தன் வாழ்நாளிலே ஏதோ சிறிது நேரமாவது பேருணர்விலும் ஆனந்தத்திலும் மூழ்கியிருப்பது அன்னவனுக்கு வந்தமையும் ஈசுவரப் பிரசாதமாம். எண்ணிப் பார்த்தால் ஒவ்வொருவனும் தான் ஏதோ சிறிது நேரமாவது அடைந்துள்ள இந்த அரிய வாய்ப்பைப் பற்றிய எண்ணம் தனக்கு வரும். பிறகு இந்த அனுபவத்தையே பற்றித் தியானம் பண்ணுவது மிக நன்று. இயற்கையிலுள்ள கவர்ச்சிகரமான நல்ல காட்சிகளைக் குறித்துத் தியானம் பண்ணலாம். கேட்டுள்ள அல்லது படித்துள்ள மேலாம் கருத்துக்களைக் குறித்துத் தியானம் பண்ணலாம். ஒவ்வோர் ஆத்ம சாதகனும் தான் போற்றிவரும் பெரு மக்களுள் யாராவது ஒருவருடைய வாழ்க்கை வரலாற்றைக் குறித்துத் தியானம் பண்ணலாம். ஈண்டு இயம்பியுள்ள கோட்பாடுகளுள் தனக்கு உகந்ததைத் தானே தீர்மானம் செய்து தேர்ந்தெடுத்துக் கொள்வது அவசியம் ஆகிறது.

தியானத்தில் அமர்ந்தவுடன் உலகில் உள்ள உயிர்கள் அனைத்தும் இன்புற்றிருக்க வேண்டுமென்று முதலில் அவர்களை வாழ்த்துதல் அவசியமாகிறது. பிறகு கண்மூடி அமர்ந்து கொண்டு உள்ளத்தின் உள்ளே பேர் ஆனந்தத்துடனும் பேரொளியுடனும் கூடி எழுந்தருளியுள்ள மூர்த்தியைக் குறித்து எண்ணுங்கால் அது நல்ல தியானமாகிறது.

இதற்குமேல் அவரவர்க்குத் தோன்றும் வேறு பல உபாயங்களைக் கையாண்டும் தியானத்தில் முன்னேற்றமடைவது சாத்தியம்.

கேள்வி: (424) வீட்டில் அனுமனை வைத்து வணங்கலாகாது என்பது சரியா?

'எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.'

அனுமன் குரு தத்துவம். அவன் ஸ்ரீ ராமனுடைய பரம பக்தன். இலங்கை வேந்தனாகிய இராவணன் உட்பட அனுமன் சந்தித்தவர்கள் அனைவருக்கும் அவன் நலனே செய்து வந்துள்ளான். 'நன்றுடையான் தீயதில்லான் என்று அவனைப்பற்றிப் பகர்வது முற்றிலும் பொருந்தும். ஆற்றலில் அவன் தலைசிறந்தவன். தனக்கு வாய்த்துள்ள தெய்விகக் கடமைகளை எல்லாம் இனிது நிறைவேற்றுகிறவன் ஆஞ்சநேயன். அத்தகைய மூர்த்தியை வீட்டில் வைக்காவிட்டால் அதற்கு நிகரான மற்றொரு மூர்த்தியை எங்குத் தேடிக் கண்டு பிடிப்பது?

கேள்வி : (425) கடவுளின் குழந்தைகள் என்பவர்கள் நம்முடன் விளையாடுவார்களா?

குழந்தையும், தெய்வமும் கொண்டாடும் இடத்தில் என்பது பழமொழி. குழந்தைகள் கள்ளம் கபடம் அற்றவர்கள். அகங்காரத்திற்கும் அவர்களுக்கும் வெகுதூரம். குழந்தைகளின் முன்னிலைக்கு வருகின்றபொழுதோ ஒரு மனிதனுக்கு ஆனந்தமும் அமைதியும் தாமே வந்து அமைகின்றன. ஆதலால் இன்னும் குழந்தைப் பருவத்தில் இருக்கும் சிசுக்கள் அனைத்தும் கடவுளுக்குரிய குழந்தைகளாம். அவர்களுடன் நெருங்கிப்பழகுவது சத்சங்கத்திற்கு நிகர்; தெய்வத்தோடு இணக்கம் கொள்வதற்கு நிகர். ஆகவே குழந்தைகள் அனைவருடனும் நாம் ஒட்டி உறவாடக் கடமைப் பட்டிருக்கின்றோம். அதனால் நாம் எல்லா நலன்களையும் அடைகிறோம் என்பது வெளிப்படை.

கேள்வி : (426) 'ஸ்வபாவத்தினால் நீ போர் புரிந்தாகவேண்டும்' என்று கீதையில் அர்ஜுனனுக்குக் கூறப்படுகின்றது. ஸ்வபாவத்தை அறிந்துகொள்வது எப்படி?

அந்தந்த மனிதனுக்குரிய இயல்பு ஸ்வபாவம் எனப்படுகிறது. ஸ்வபாவத்தை அனுசரித்தே ஸ்வகர்மம் அல்லது ஸ்வதர்மம் மனிதனுக்கு வந்து அமைகிறது. ஸ்வபாவத்திற்கும் ஸ்வகர்மத்திற்கும் இரண்டொரு சான்றுகள் எடுத்துக் கொள்வோம். பரம்பரையாக நெசவுத் தொழில் செய்து வந்த மனிதனுக்கு மகனாகப் பிறப்பவனிடத்து அமைகிற ஸ்வபாவம் நெசவுத் தொழில் சம்பந்தமானது ஆகிறது. அதே

விதத்தில் கிருஷி பண்ணுகிற ஒருகுடும்பத்தில் பிறந்திருப்பவனுக்குக் கிருஷிஸ்வதர்மம் ஆகிறது. அவனவனுக்கு அமைந்துள்ள ஸ்வதர்மத்தை ஒவ்வொருவனும் எளிதில் செய்கிறான். அப்படிச் செய்வதன் மூலம் சமுதாயத்துக்கு அவன் புரிய வேண்டிய கடமை நன்கு நிறைவேறுகிறது. அதற்கிடையில் ஆத்ம சாதனம் பழக முயன்றால் அவனுடைய கருத்தை எளிதில் அதில் செலுத்துதல் சாத்தியமாகிறது. தன் ஸ்வபாவத்தைஅனுசரித்து அர்ஜுனனுக்கு அமைந்திருந்த ஸ்வகர்மம் அறப்போர் புரிதலாம். பாட்டனாரையும், ஆச்சாரியரையும், எதிர்த்துப் போர் புரிய அவனுக்கு விருப்பமில்லை. ஆகையினால் அதை முன்னிட்டுக் காட்டில் தவம் புரியப் போதல் உசிதம் என்று அவன் கருதினான். அந்த மனநிலையில் அதை முன்னிட்டு அவன் செய்யத் துணிந்த புதிய கர்மமும் அவனுக்கு ஒவ்வாது என்று கிருஷ்ண பரமாத்மா அவனுக்கு எடுத்துக் காட்டினார். விருப்பையோ வெறுப்பையோ முன்னிட்டு எந்த மனிதனும் தன் ஸ்வதர்மத்தைப் புறக்கணிக்கக் கூடாது. ஈஸ்வர அர்ப்பணமாக அதைச் செய்தல் பொருத்தமாகிறது. அதன் மூலம் மனிதகுலத்துக்கு அவன் புரிகிற கடமை நன்கு நிறைவேறுகிறது. அதே வேளையில் அவன் புரிகிற அந்தக் கர்மத்தின் வாயிலாகப் பரத்தை அடைய அவன் தகுதி உடையவனாகிறான். இதுவே அர்ஜுனன் மூலம் உலகத்தவர் அனைவருக்கும் கிருஷ்ண பரமாத்மா கொடுத்துள்ள சீரிய செய்தியாம்.

விதி என்பது எது என்பதை நாம் முதலில் ஆராயவேண்டும். இயற்கையின் நியதியே விதி எனப்படுகிறது. எந்த மனிதன் தன்னை எதற்குத் தகுதி வாய்ந்தவனாகச் செய்துகொள்கின்றானோ அது தற்செயலாக அவனுக்கு வந்தமைகிறது. கூலி வேலை செய்து பிழைப்பதற்குத் தகுதி உடையவனாக ஒருவன் தன்னைச் செய்திருக்கிறான். அத்தகையவன் எங்குச் சென்றாலும் அவனுக்குக் கூலி வேலை கிடைக்கும். அதற்கிடையில் அவன் தன்னை ஆத்ம சாதனத்துக்குத் தகுதியுடையவனாக அமைத்துக் கொள்ளுதல் சாத்தியம். அத்துடன் ஈஸ்வர கிருபையும் தற்செயலாக அவனுக்கு வந்து வாய்க்குமாகில் கூலிவேலை செய்து பிழைக்கும் விதியைத் தாண்டி அவன் மேல்நிலைக்குப் போகக்கூடும். இதற்கு நல்ல சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். லாட்டு என்னும் இளைஞன் ஒருவன் கூலிவேலை செய்து பிழைப்பதற்காகச் சென்ற நூற்றாண்டில் பீகார் மாகாணத்தில் இருந்து சல்கத்தா வந்து சேர்ந்தான். நல்ல குடும்பத்தில் அவனுக்கு வேலை கிடைத்தது. தன் கடமையை அவன் நன்கு நிறைவேற்றி வந்தான். அந்தக் குடும்பத்தாருடன் தொடர்பு வைத்திருந்த ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரோடு இந்த இளைஞனுக்கும் தொடர்பு கிட்டியது. இவ்விளைஞனுடைய நல்ல மனப்பான்மையை அறிந்துகொண்ட பரமஹம்சதேவர் அவனை ஆட்கொண்டார். அப்படி ஆட்கொண்டதன் விளைவாக அவன் அவருடைய சிஷ்யனானான். பரமஹம்சருடைய திருக்கூட்டத்தில் அவனும் முக்கியமான இடம் பெற்றான். பகவான் அருள் வரும்போது அதை விதி தடுக்காது என்பதற்கு இச்செயல் சான்றாகிறது.

கேள்வி : (427) 'சிவன்', 'விஷ்ணு' என்று கூறுகின்றோம். கடவுள் ஒருவரா? பலரா? தயவுசெய்து விளக்க வேண்டுகிறோம்.

மெய்ப்பொருள் ஒன்று; அதற்குப் பெயர்கள் பல வாய்த்துள்ளன. உலகெங்கும் உள்ள நீர் ஒன்று. அது கடல் நீர், ஆற்று நீர், கிணற்று நீர், குளத்து நீர், மழை நீர் என்றெல்லாம் பெயர் பெற்றுள்ளது. அதே பாங்கில் மெய்ப்பொருள் ஒன்று; அந்த மெய்ப்பொருளைச் சைவ சமயத்தவர்கள் சிவன் என்றும், வைஷ்ணவ சமயத்தவர்கள் விஷ்ணு என்றும் அழைக்கின்றனர். அதே பொருளுக்கு ஹரிஹரன் என்பது மற்றொரு பொதுப் பெயர். ஹரி என்னும் சொல் விஷ்ணுவைக் குறிக்கிறது. ஹரன் என்னும் சொல் சிவனாரைக் குறிக்கிறது. 'ஹரி' என்னும் வேர்ச் சொல்லிலிருந்து இவ்விரண்டு பெயர்களும் வந்துள்ளன. தீமையை அகற்றி நலத்தை நிலைநாட்டுபவன் என்பது இந்த நாமத்தின் பொருள். ஆகவே, மெய்ப்பொருளை ஹரி என்றோ ஹரன் என்றோ அழைக்கலாம். இதற்குமேல் அந்தந்தச் சமயக் கோட்பாடுகளுக்கேற்ப அப்பொருளுக்குப் பெயர்கள் பல வேண்டியவாறு வந்தமைந்திருக்கின்றன.

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம ஸ்தோத்ரம்

81 க்ருதக்ஞ: க்ருதக்ஞ:—ஜீவர்களின் செயல்களை உள்ளபடி அறிய வல்லவன்.

நெஞ்சை ஒளித்து ஒரு வஞ்சகமில்லை என்பது கோட்பாடு. மனிதன் செய்கின்ற செயல்கள் நல்லவைகளாக இருக்கலாம் அல்லது கெட்டவைகளாக இருக்கலாம். மக்களுள் பெரும்பான்மையோர் தாங்கள் புரிகின்ற நல்ல செயல்களை வேண்டியவாறு விளம்பரம் பண்ணுகின்றனர். அதேவேளையில் கெட்ட செயல்களை அவர்கள் மறைத்து வைக்க முயலுகின்றனர். அம் முயற்சியில் அவர்கள் உலக மக்களுக்கு இடையில் வெற்றி பெறலாம். ஆனல் உள்ளத்தினுள்ளே வீற்றிருக்கின்ற இறைவனுடைய மேற்பார்வையினின்று அவைகளை மறைத்துவைக்க மக்களுக்கு இயலாது. இவ்வுண்மையை உள்ளபடி அறிகின்ற ஆத்ம சாதகன் இறைவனுக்கு உகந்த நல்ல எண்ணங்களிலும் செயல்களிலும் யாண்டும் ஈடுபட்டிருக்கக் கடமைப்பட்டுள்ளான்.

இறைவன் பெரிய பொருள். மக்கள் அணுவிற்கு நிகரானவர்கள். மஹத்தாகிய பெரிய பொருளுக்கு அணுமயமாக இருக்கின்ற ஜீவன் பெரிய செயல் எதையும் செய்யத் தகுதியற்றவனய் இருக்கிருன். ஆதலால்தான் இறைவன் பகவத் கீதையிலே, பக்தன் ஒருவன் தனக்கு நீர், பச்சிலை, பூ ஆகிய எளிதில் அகப்படக்கூடிய எதையேனும் எடுத்து உள்ளன்போடு படைப்பானகில் அதைத் தான் மனம் உவந்து ஏற்றுக்கொள்வதாகக் கூறுகின்ருர்.

'நன்றி மறவேல்' என்பது பரந்த கோட்பாடு. நன்றி உடைய மனிதன் ஒருவன் மற்ரெருவர் செய்கின்ற உபகாரத்தையும் பெரிய உதவியாகக் கருதி மனதில் வைக்கின்ருன். அன்னவன் இறைவனிடம் படைத்துள்ள பக்திக்கு இது அறிகுறியாகிறது. ஏனென்ருல் மனமுவந்து மனிதன் ஒருவன் மற்ற உயிர்களுக்குச் செய்கின்ற உபகாரம் பேருதவியாகக் கருதப்படுகிறது. இவ்வுண்மையை ஆத்மசாதகன் ஒருவன் நன்கு ஞாபகத்தில் வைத்துக்கொள்வானக. சிற்றுயிரின் உதவியைப்பகவான் ஒருபொழுதும் நாடி இருப்பவன் அல்லன். அப்படியிருந்தும் அவன் நன்றியுடையவனக இருந்து காட்டுவது உயிர்களுக்கு நல்ல எடுத்துக்காட்டாகும். எனவே க்ருதக்ஞனக இலங்குகின்ற சர்வேஸ்வரனிடமிருந்து மனிதன் கற்றுக்கொள்ளவேண்டிய இரண்டு பெரிய பாடங்கள் உள. முதலாவது ஈசனைத் திருப்திப் படுத்துவது மிகச் சுலபம். பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும் ஈசனுக்கே சொந்தம். அதில் ஏதேனும் ஓர் அற்பப் பொருளை எடுத்து இறைவனிடத்துப் படைக்கின்றபொழுது அதில் அவன் பரமதிருப்தி அடைகின்ருன் எனவே வழிபடு தெய்வத்தைத் திருப்தி பண்ணுவது மிகச் சுலபமாக அமைகிறது. மனிதன் கற்றுக்கொள்ளவேண்டிய இரண்டாவது பாடம் ஒருவன் தனக்குச் செய்யும் உபகாரத்துக்கு என்றைக்கும் நன்றி உடையவனக இருத்தலாம். அப்படி இருப்பதன் மூலம் அதிவிரைவில் அவன் ஆத்மபரிபாகம் அடைகின்ருன்.

82. க்ருதி: க்ருதி: முயற்சி உடையவன்.

ஒவ்வொரு மனிதனும் அடைகிற பேறுகள் அவன் எடுத்துக்கொள்கின்ற முயற்சியைச் சார்ந்திருக்கின்றன. எந்த முயற்சியும் வீண் போவதில்லை. ஆற்றலிலே அற்பனய் இருக்கின்ற மனிதன் பரமனை அடையப் பெருமுயற்சி எடுத்துக் கொள்கின்ருன். அவன் எடுத்துக் கொள்ளும் முயற்சியை உள்ளத்தினுள் வீற்றிருக்கும் இறைவன் உள்ளபடி அறிகின்ருன். அவன் எடுத்துக்கொள்ளும் முயற்சியில் மேலும் முன்னேற்றம் அடைவதற்கான சூழ்நிலைகளை இறைவன் தானே செய்து வைக்கின்ருன். தளராத முயற்சி உடையவனுக்குப் புத்தியோகம் என்னும் பெரிய பண்பை இறைவன் கொடுத்து உதவுகிருன். அதன் விளைவாக நல்லான் ஒருவன் எடுத்துக்கொள்கின்ற பிரபஞ்ச சம்பந்தமான இயக்கங்கள் அனைத்தும் தன் பெருமையின் பொருட்டல்ல. இறைவனுடைய மகிமையின் பொருட்டே அரிய பெரிய செயல்களை அவன் எடுத்துக் கொள்கின்ருன். அங்ஙனம் அவன் எடுத்துக் கொள்ளும் முயற்சியில் வெற்றி அடையும் பொருட்டு இறைவன் தானே அனுக்கிரக மூர்த்தியாய் இருக்கின்ருன்.

83. आत्मवान् ஆத்மவான் — தன் நிஜ சொரூபத்தில் நிலைத்திருப்பவன்.

அக்ஞானத்தில் உழலும் ஜீவன் ஒருவன் தான் அல்லாத பிரகிருதியைத் தானாகக் கருது கிறான். அப்படிக் கருதுவதே அகங்காரம் எனப்படுகிறது. பரம்பொருளை உபாசிப்ப தற்கு ஏற்ப அல்லது பரமனைச் சார்ந்திருப்ப தற்கு ஏற்ப அத்தகைய அகங்காரம் ஜீவாத்ம னிடம் இருந்து மறைந்துபட்டுப்போகிறது. அதன் விளைவாக ஜீவாத்மன் பரம்பொரு ளிடத்து அதிக பக்தி பூணுகிறான். ஆத்ம வான் என்னும் பதத்திற்கு விளக்கமாக ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா இலங்குகின்றார். சரீரம் எடுத்திருந்த தான் ஒருபொழுதும் சரீரத்தைத் தன் மயமாக அங்கீகரிக்கவில்லை. தன் நிஜ சொரூபத்திலேயே அவன் யாண்டும் நிலைத்திருந்தான். அவனிடமிருந்த இந்த மகிமையை அறிந்துகொள்ளும் ஆத்மசாத கனும் ஸ்ரீ கிருஷ்ணன் நடந்துள்ள பாங்கி லேயே நடந்துகொள்ள முயலுகிறான். அதன் விளைவாக அவனிடமிருக்கும் விருப்பும், வெறுப்பும் அகன்றுபோகின்றன. ஜீவன் ஒருவனிடமிருந்து விருப்பும் வெறுப்பும் ஆகிய இந்த இரண்டு கூறுகளும் அகலுங்கால் ஜீவாத் மனும் நல்ல ஆத்மவான் ஆகின்றான். ஆத்ம சாதகன் இக்கோட்பாட்டைத் தீவிரமாக அனுஷ்டிக்கக் கடமைப்பட்டிருக்கிறான்.

84. सुरेशः — ஸுரேச: தேவர்கள் எல்லா ருக்கும் அதிபதியாய் இருப்பவன்.

மக்கள் மூன்று கணங்களாகப் பிரிக்கப்படு கின்றனர். அவையாவன: தேவகணம், நர கணம், அசுரகணம். அவர்கள் இங்ஙனம் பிரிக்கப்பட்டிருப்பது அவர்களுடைய குணம், பரிபாகம், செயல் ஆகியவைகளை முன்னிட் டாம். இந்த மூன்று கணங்களுள் தேவகணம் தலை சிறந்ததாக இலங்குகிறது. நல்லியல்பே வடிவெடுத்திருப்பவர்கள் அவர்கள். உயிர்கள் அனைத்துக்கும் நலனை எடுத்து அவர்கள் வழங்குகின்றனர். இந்த மூன்று கணங்களுக் கும் தலைவனாக இறைவன் இலங்குகின்றான் எனினும் தேவகணமே இங்குச் சிலாகித்து இயம்பப்படுகிறது. பரமன் நலமுடையான் தீதில்லான். அத்தகைய பரமன் சுரர்களுக்கு ஈசனாய் இருப்பது பொருத்தமானது.

85. शरणम् சரணம்—துயர் உற்று இருப்ப வர்களின் துயரை நீக்குபவன்.

பிரபஞ்சத்தின் அமைப்பில் நலம், கேடு இரண்டும் நிறைந்திருக்கின்றன. ஆகையினால் கேட்டை அறவே தவிர்ப்பது யாருக்கும் சாத் தியப்படுவது இல்லை. துயரத்தில் அகப்பட் டுக் கொண்டவர்கள் இயல்பாகவே தங்களை உய்விக்க வேண்டுமென்று பரமனிடம் அடைக் கலம் புகுகின்றனர். அங்ஙனம் தம்மை வந்து அடைந்தவர்களை அவர் காத்து அருள்கின்றார். ஆதலால் அவருக்குச் சரணம் என்னும் நாமம் வந்துள்ளது.

86. शर्म சர்ம — பேரானந்த வடிவினன். பிரபஞ்சத்தில் உள்ள உயிர்வகைகள் ஏதே னும் ஒருவிதத்தில் ஆனந்தத்தை நாடுகின் றனர். பெரும்பாலான உயிர்கள் ஆனந்தத்தி லேயே திளைத்திருக்கின்றன.

இறைவன். தானே சர்மன் அல்லது ஆனந்த சொரூபி. ஆகையால் அத்தகையவ னிடம் இருந்து தோன்றி வந்துள்ள உயிர்கள் யாவும் ஆனந்தத்தையே நிலைநாட்ட முயலு தலில் வியப்பு ஏதும் இல்லை. உயிர்வகைகள் தாங்கள் வாழ்ந்து வரும் பிரபஞ்சத்தின் இயல்பை மறந்திருப்பதற்கு ஏற்ப அவைகள் அனைத்தும் பரம்பொருளில் நிலைத்திருப்பவை களாகின்றன. அப்படி நிலைத்திருக்கும்பொழுது அவையாவும் இன்புற்றிருக்கின்றன. பரமன் பேரின்ப சொருபி என்பதற்கு அவன் எடுத் துள்ள வடிவங்களே அத்தாட்சி ஆகின்றன.

87. विश्वरेत விச்வரேத உலகிற்கு வித் தாகியவன்.

பிரபஞ்ச அமைப்பில் காரணமின்றிக் காரியம் இல்லை. பிரபஞ்சத்தில் தோன்றியுள்ள உயிர் களனைத்தும் எடுக்கின்ற வடிவங்களுக்கேற்ற காரணங்கள் இருக்கின்றன. மஹத் என இயம்பப்படுகின்ற மூலப்பிரகிருதியின்கண் அனைத்துக்கும் வித்தாயிருக்கின்ற பரம புருஷன் வித்தை விதைக்கின்றான். அந்தந்தக் கர்ப்பத்துக்கேற்ற வடிவங்களை எடுத்து உயிர் கள் தோற்றத்துக்கு வருகின்றன. ஆதலால் பரமனும் அவனுடைய சக்தியாகிய மாயப்பிர பஞ்சமும் ஒன்று சேர்ந்து கணக்கற்ற உயிர் வகைகளை யாண்டும் தோற்றுவித்துக் கொண் டிருக்கின்றார்கள்.

ஞான வெட்டியான்-9

பொருமை பொல்லாதது

பொருமை என்னும் தீயகுணம் ஒருவனுடைய செல்வத்தைத் தேய்க்கும் படையாகவும் அவனை வேதனைக்கு உட்படுத்துவதாகவும் உள்ளது. பஞ்ச பாண்டவர்கள் தங்கள் இயல்பிலேயே க்ஷத்திரிய வம்சத்திற்கு உரிய பெருந்தன்மையும் கம்பீரமும் தியாக மனப் பான்மையும் பெற்றிருந்தார்கள். இதற்கு நேர்மாருக அவர்களுடைய தாயாதிகளாகிய கௌரவர்கள் பொருமை வசப்பட்டவர்களாகப் பாண்டவர்களுக்குப் பலவிதத்தில் இடையூறு செய்யக்கூடிய மனப்பான்மை உடையவர்களாக இருந்தார்கள். பாண்டவ சகோதரர்கள் ஐவரும் தம் தாயாதிகள் நூறு பேருடனும் இனிது ஒட்டி உறவாடினர். யாண்டும் வேடிக்கையிலும் ஊக்கம் ததும்பிய பலப்பல விளையாட்டுகளிலும் காலம் கழிந்தது. அவர்கள் வசித்து வந்த அரண்மனையும் கலகலப்புடன் திகழ்ந்தது. சகோதரர்களுக்கிடையில் தான் யாண்டும் தலைமை தாங்கி இருக்க வேண்டும் என்று துரியோதனன் விரும்பினன். ஆனல் தற்செயலாகப் பீமன் ஒவ்வொரு படித்தரத்திலும் அவனுக்கு மிக்கானுக விளங்கினன். தன்னிடம் இருந்த அசாதாரணமான ஆற்றலை மறந்து விட்டு அவன் தன் கூட்டாளிகளுடன் விளையாடிக்கொண்டிருக்கும்போது அவன் கையில் அகப்பட்டுக்கொண்டவர்கள் பாடு பெரும் திண்டாட்டமாக இருந்தது.

தான் இளவரசனுக வேண்டும் என்பது துரியோதனன் கொண்டிருந்த பேர் அவா ஆகும். ஆனல் இளவரசப் பதவிக்கு உரியவன் அவனுக்கு மூத்தவனுகிய யுதிஷ்டிரன். அது துரியோதனனுக்கு இடைஞ்சலாக இருந்தது. மேலும் பீமனுடைய சிறுபிள்ளைத்தனமான விளையாடல்கள் அவனுக்குப் பெரும் துன்பத்தை விளைவித்து வந்தன. ஆதலால் முரடனுய் இருந்த பீமன் மீது நாளுக்கு நாள் அவன் பொருமையையும் வெறுப்பையும் வளர்த்து வந்தான். பீமனை எப்படியாவது ஒழித்துவிடத் துரியோதனன் திட்டமிட்டான்.

ஒருநாள் நதிக்கரையில் வனபோஜனம் பண்ண ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அப்போது துரியோதனன் தானே பீமனுக்கு விஷம் கலந்த உணவை எடுத்து வழங்கினன். சாப்பிட்டு முடித்த அனைவரும் வனத்தில் ஆனந்தமாக விளையாடிக்கொண்டிருந்தார்கள். விஷம் கலந்த உணவைச் சாப்பிட்டதன் விளைவாகப் பீமன் நதிக்கரையில் படுத்து ஆழ்ந்த நித்திரையில் மூழ்கிவிட்டான். அப்பொழுது துரியோதனன் அங்கு வந்து பீமனுடைய கைகளையும், கால்களையும் காட்டுக் கொடிகளால் கட்டி அவனைத் தூக்கி நதிக்குள் போட்டுவிட்டான்.

விளையாடி ஓய்ந்துபோன இளைஞர்கள் அனைவரும் அரண்மனைக்குத் திரும்பினர்கள். தன் மகன் பீமன் திரும்பி வராதது குறித்துக் குந்திதேவி கவலைமிகக் கொண்டாள். நதிக்குள் வீழ்ந்த பீமனை ஆங்கிருந்த விஷப் பாம்புகள் தீண்டின. பாம்பின் விஷம் மூலிகையின் விஷத்தைமுறியடித்தது. விழித்தெழுந்த பீமன் காட்டுக் கொடிகளையெல்லாம் ஒதுக்கித் தள்ளி விட்டுப் பாம்புகளைக் கொன்ருன். அவனுடைய துணிச்சலைக் கண்ட பாம்புகளின் அரசன் வாசுகி அவனுக்கு அமிர்தத்தை வழங்கி உடல் திட்பம் உடையவனுகச் செய்தது. முன்பிருந்ததைவிடத் திண்ணியனுகத் திரும்பிவந்த பீமனைப் பார்த்த துரியோதனன் ஏமாற்றமடைந்தான்.

ஆயுதப் பிரயோகங்களின் அற்புத மூர்த்தியாகிய துரோணர் ராஜகுமாரர்கள் பலருக்குத் தனுர்வேதப் பயிற்சி அளித்துவந்தார். அவர்களுள் குருவம்சத்தைச் சேர்ந்த பாண்டுவின் புதல்வர்களும் திருதராஷ்டிரனுடைய புதல்வர்களும் தலைசிறந்தவர்களாகத் திகழ்ந்தார்கள். அந்தந்த மாணக்கனுடைய பான்மைக்கேற்றவாறு போர்க்கலை அவனவனுக்குப் புகட்டப்பட்டது. குருபக்தியில் ஒப்பற்றவனுன அர்ஜுனன் தலைசிறந்தவனுகத் திகழ்ந்தான்.

துரோணுச்சாரியர் பெரிய விளையாட்டுப் போட்டி ஒன்று வைத்தார். தம் சிஷ்யர்களின் விதவிதமான ஆற்றல்களை மக்களுக்கிடையில் விளம்பரப்படுத்துவதே அச்செயலின் நோக்கமாயிற்று. அன்னவர்கள் காட்டிய பயிற்சித் திறமைகளைப் பார்த்தவர்கள் திகைத்துப்

போயினர். துரியோதனனுக்கும் பீமனுக்குமிடையில் நிகழ்ந்த கதாயுதப் போராட்டம் எல்லார் உள்ளத்தையும் பதைபதைப்புடன் கவர்ந்தது. விளையாட்டாக அவர்கள் துவக்கிய அப்போராட்டம் வம்புச் சண்டையாக வடிவெடுக்கும்போல் தோன்றியது. அசுவத்தாமன் இருவருக்குமிடையில் புகுந்து அவர்களைப் பிரித்து வைத்தான். கடைசியாக அர்ஜுனன் வில்வித்தையில் தன் திறமையை மிக அற்புதமாக விளக்கிக் காட்டினான். அவனைப் பாராட்டி வானளாவ எழுந்த கூக்குரலின் காரணத்தைத் திருதராஷ்டிரனுக்கு விதுரர் எடுத்து விளக்கிய போது அவருக்குத் தம் தம்பியாகிய பாண்டுவின் புதல்வர்களைக் குறித்துப் பொறாமை உண்டாயிற்று.

அப்பொழுது ராஜ சபையின்கண் தோன்றிய கர்ணன் அர்ஜுனன் செய்து காட்டிய அத்தனை விதமான வில்வித்தைத் திறமைகளையும் திறம்படச் செய்து காட்டினான். அவனுடைய நண்பனான துரியோதனனுக்கு மட்டில்லா மகிழ்ச்சி உண்டாயிற்று. பிறகு கர்ணன் தன்னுடன் தனியாகப் போட்டி போடும்படி அர்ஜுனனைத் தூண்டினான். கிருபாச்சாரியர், ராஜகுமாரனாகிய அர்ஜுனன் ஒரு பாமரனுடன் போட்டி போட மாட்டான் என்று தெரிவித்தார். தன் தோழனின் இக்கட்டான நிலையைக் கவனித்த துரியோதனன்குதித்தெழுந்து கூறியதாவது. "பராக்கிரமத்தை முன்னிட்டு இந்த இளைஞன் அரசனாக அங்கீகரித்துக் கொள்ளத் தகுதி வாய்ந்தவன். ஆனால் தன்னுடன் போட்டியிட வந்திருப்பவன் ஒரு நாட்டிற்குரிய அரசனாகவே இருந்து ஆகவேண்டும் என்று அர்ஜுனன் வற்புறுத்துவானாகில் அந்த நிபந்தனை இதோ இப்போதே நிறைவேறுகிறது. அரசன் இல்லாத அங்க நாட்டிற்குக் கர்ணனைக் கோமானாக முடிசூட்டுகிறோம்."

முடிசூட்டு விழா அப்பொழுது அவ்விடத்திலேயே பொருத்தமாக நிறைவேற்றப்பட்டது. எல்லாராலும் ஒரு முகமாகப் பாராட்டப்பெற்ற இத்தகைய அரிய செயலுக்கும் துரியோதனன் பாண்டவர்கள்பால் கொண்டிருந்த பொறாமையே காரணமாக இருந்தது.

பீஷ்மர், விதுரர், துரோணர் ஆகிய பெருமக்கள் ராஜகுமாரர்களுக்கு இடையில் யுதிஷ்டிரர் மூத்தவனாய் இருந்ததால் அவனே ராஜ பதவிக்குத் தகுதி வாய்ந்தவன் என முடிவு கட்டினார்கள். பொதுமக்களுடைய ஆதரவும் யுதிஷ்டிரனுக்கே இருந்தது. தன் மகன் துரியோதனன் யுவராஜனாக ஆக வேண்டுமென்று விரும்பிய குருட்டு அரசனான திருதராஷ்டிரன் இதை அறிந்து மனம் புழுங்கினார். யுதிஷ்டிரனுடைய பங்காளிகளுக்கும் அவன் யுவராஜனாவது பிடிக்கவில்லை. ஆயினும் அதைப் பகிரங்கமாக எதிர்க்க அவர்களுக்கு இயலவில்லை.

நாட்டு மக்கள் அனைவரும் கொண்டிருந்த அபிப்பிராயம் தனக்கும் தன் தந்தைக்கும் பிரதிகூலமானது என்று துரியோதனன் அறிய வந்தான். யுதிஷ்டிரன் யுவராஜனாக முடிசூட்டிக் கொள்ளத் தன் தந்தை திருதராஷ்டிரனும் சம்மதம் தெரிவித்து விட்டதை அறிந்து துரியோதனன் ஆத்திரம் கொண்டான். நேரே தன் தந்தையிடம் சென்று அவன் தெரிவித்ததாவது. "அப்பா, யுவராஜன் ஆவதற்கு நான் முற்றிலும் தகுதியுடையவனாக இருக்க எல்லாரும் சேர்ந்து யுதிஷ்டிரனுக்கு முடிசூட்ட முடிவு செய்திருக்கிறார்கள். அதற்குத் தாங்களும் அனுமதி கொடுத்து விட்டீர்கள். என் எதிர்காலத்தைப் பற்றித் தாங்கள் ஒரு சிறிதும் சிந்தித்ததாகத் தெரியவில்லை."

திருதராஷ்டிரன் அதற்குக் கொடுத்த விடையாவது: "மகனே, நான் செய்த முடிவைக் குறித்து நீ கவலைப்பட வேண்டியதில்லை. இந்தச் சமயத்தில் அரண்மனை வாசிகளின் விருப்பமும், பொதுமக்களின் அபிப்பிராயமும் யுதிஷ்டிரனுக்குச் சாதகமாக இருக்கின்றன. நாம் இப்பொழுது முரண்பாடாக ஏதாவது செய்தோமானால் அது நமக்குப் பிரதிகூலமாகவே முடியும். ஆகவே தக்கதருணம் வரும் வரை அமைதியுடன் பொறுத்திருப்பாயாக."

தர்மபுத்திரனாகிய யுதிஷ்டிரனின் யுவராஜப் பட்டாபிஷேகம் குறித்து நாடு நகரமெங்கும் ஒரே கோலாகலமாக இருந்தவேளையில், பொறாமை வசப்பட்டிருந்த திருதராஷ்டிரனும், தந்தைக்கேற்ற தனயனாக இருந்த துரியோதனனும் வருந்திக் கொண்டிருந்தார்கள். பொறாமை பொல்லாதது என்பது இவர்களுடைய வாழ்க்கையிலிருந்து தெளிவாகிறது.

சமுதாய முன்னேற்றம்

(சகோதரி நிவேதிதையின் ஆங்கிலக் கட்டுரையை யதீஸ்வரீ கிருஷ்ணப்பிரியா தமிழில் மொழி பெயர்த்தது)

இவ்வுலகில் உடல் வாழ்க்கையை நன்கு நடத்துவதற்குத் தேவையான வசதிகளைப் பெருக்கிக்கொண்டு சுகமாக வாழவேண்டும் என்று பெரும்பாலான மக்கள் கருதுகின்றனர். ஐம்புலன்களால் உணரப்படும் இப்பிரபஞ்ச வாழ்வை உண்மையென நினைக்கும் மக்கள், அந்தப் பிரபஞ்ச வாழ்வைச் சுகமாகவே நடத்த விரும்புகிறார்கள். இத்தகையவர்களை லோகாயதர்கள் என்று சொல்ல வேண்டும். இந்த உலகிற்கு அப்பால் ஒன்றும் இல்லை என்பது அவர்கள் கருத்து.

லோகாயதர்களுக்கு இடையிலும் பலவித மக்களைக் காணலாம். தங்கள் வாழ்வில் சௌகரியங்களைப் பெருக்கிக்கொண்டு தாங்கள் சுகமாக வாழ்ந்திருந்தால் போதும் என்று நினைக்கின்ற சுயநலக்காரர்கள் இருக்கிறார்கள். இந்திரிய சுகபோகங்களுக்காக அதர்மத்தில் இறங்கத் தயங்காதவர்கள் உள்ளனர். தர்மத்திற்குக் கட்டுப்பட்டு வாழ்க்கை வசதிகளைப் பெருக்க முயல்பவர்களைக் காணலாம். இனி, லோகாயதர்களுள் பண்பில் தலைசிறந்து விளங்கும் ஒரு கூட்டத்தார் இருக்கின்றனர். உடல் வாழ்க்கையை நன்கு நடத்தத் தேவையான வசதிகளையும், மனப்பண்பாட்டை உயர்த்துவதற்கு வேண்டிய கல்வி, அறநெறிக்கொள்கைகள் முதலியவற்றையும் மக்களுக்கு வழங்குவது அவசியம் என்று அத்தகைய சிறு கூட்டத்தார் நினைக்கின்றனர். சமுதாய முன்னேற்றத்திற்காகப் பாடுபடுவது, மனித குலத்திற்குச் சேவை செய்வது இதுவே வாழ்வில் மிக உயர்ந்த லட்சியம் என்று இவர்கள் கருதுகிறார்கள். அதன் பொருட்டுச் சுயநலத்தியாகம் செய்யவும் தயாராக இருக்கிறார்கள்.

இனி, மேற் சொன்னவகைகள் எதிலும் சேராத மக்களும் இருக்கின்றார்கள். இந்த உலகை மாற்ற முயல்வது நாய் வாலை நிமிர்த்த முயலுவது போலத்தான். இந்த உலகம் இப்படித்தான் இருக்கும் என்று சொல்லிக்கொண்டு, முயற்சிகள் ஏதும் செய்யாமல் இருக்கின்றனர் ஒரு சாரார். தம்மையோ, சமுதாயத்தையோ முன்னேற்றப் பாடுபட வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இல்லை. சோம்பித் திரிவதில் அவர்கள் சுகம் காண்கிறார்கள். தம்முடைய செயலின்மையை உலகைப் பற்றிய உண்மையை அறிந்துகொண்டதன் விளைவு என்று கருதுகிறார்கள்.

'இவ்வுலகை மாற்ற, மேம்படுத்த முடியும்; அதற்காக உழைத்தாகவேண்டும்' என்ற கருத்துக்கும், 'இவ்வுலகை மாற்றுவது சாத்தியமல்ல; அதற்காக எடுத்துக்கொள்ளும் முயற்சிகளெல்லாம் வீண்' என்ற கருத்துக்கும் இடையில் முரண்பாடு இருப்பது தெளிவு. இனி, உண்மை என்ன என்று நாம் ஆராய வேண்டும்.

இந்த உலகத்தை முற்றிலும் மாற்ற, சீர்திருத்தமுடியாது என்பது உண்மையே. மனிதகுலம் முழுமைக்கும் ஒரு சேர முன்னேற்றம் ஏற்படமுடியாது. சுகபோகங்களுக்கும் ஆடம்பரத்திற்கும் உரிய வசதிகள் பெறுவதில் ஒரு வகுப்பினர் முன்னேறிக்கொண்டிருக்கும் அதே வேளையில் இன்னொரு வகுப்பினர் வறுமையிலும் இழிவிலும் தாழ்வுறுகின்றனர். ஐரோப்பாவில் எழுச்சி ஏற்படும் சமயம் ஆசியாவில் வீழ்ச்சி ஏற்படுகிறது. ஒரு பக்கம் வரும் லாபம் இன்னொரு பக்கத்தில் வரும் நஷ்டத்தினால் ஈடு செய்யப்படுகிறது. ஒரு பக்கம் முன்னேற்றத்தின் காட்சி, இன்னொருபுறம் பிற்போக்கின் காட்சி. அவ்வாறே, எந்த ஒரு நாடும், எந்த மக்களும், எப்போதும் துயரத்தையோ அல்லது மகிழ்ச்சியையோதான் அனுபவித்துக்கொண்டிருக்கவேண்டும் என்றில்லை. நன்மை, தீமை என்னும் தோற்றங்கள் மாறிமாறி வருகின்றன.

கருணையினால் தூண்டப்பட்டு, 'பிறர்துயர் துடைக்க வேண்டும்' என்ற சேவை மனப்பான்மையோடு செயல் புரிவதில் இன்னொரு குறை ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. விவேகத்தோடு செயல்படாவிட்டால் இந்த உலகம் நம் உதவியை எதிர்பார்த்துக் காத்திருக்கிறது என்ற செருக்கிற்கு அது நம்மை இட்டுச் சென்றுவிடும். உண்மையைப் பார்க்கப்

போனால் உலகிற்கு உதவி செய்வதற்கு நாம் இங்கு வரவில்லை. மக்கள் சேவையை மகேஸ்வர பூஜையாகச் செய்யவே வந்துள்ளோம். ஆத்மபோதம் பெறுதல் என்னும் லட்சியத்தை அடைய ஒரு மார்க்கமாக மட்டுமே சமுதாய சேவை இருக்கிறது.

சேவை செய்து உலகை மாற்றிவிட முடியாது என்பதற்காகப் பிறருடைய முன்னேற்றத்திற்காகப் பாடுபடுவது அவசியம் இல்லை என்றும் முடிவு செய்துவிடக்கூடாது. சோம்பித்திரிபவர்களும் சுயநலக்காரர்களும் தான் அப்படிப்பட்ட முடிவிற்கு வருவார்கள். வேதாந்த தத்துவத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாத அவிவேகிகளின் முடிவு அது. தமோ குணத்திற்கு வசப்பட்டிருப்பவர்களே தம் சோம்பலை ஸத்வகுணத்தின் அறிகுறி என்று தவருக மதிப்புப் போடுகிருர்கள். ஆனல் ரஜோகுணத்தின் மூலமாகத்தான் தமோ குணத்தை வென்று, பின் ஸத்வகுணத்திற்கு உயரமுடியும். செய்யவேண்டிய கடமைகளை முறையாக ஆற்றிய பிறகுதான் ஓய்வு பெற உரிமை உண்டு. சமுதாய முன்னேற்றத்திற்காகப் பாடுபடுதல் என்னும் லட்சியத்தில் முழுமையாக ஈடுபட்டு உழைத்தவனுக்கே, சமுதாயத்தில் முழு முன்னேற்றம் ஏற்படாது என்பது விளங்கும். நன்மை தீமைகள் மாறி மாறி அமைவதுதான் உலக இயற்கை என்பது புரியும். பிறர் நலனுக்ககாகத் தம் வாழ்வையே அர்ப்பணித்தவர்களுக்குத்தான் சேவை செய்து உலகை முன்னேற்றி விடமுடியாது என்பது தெளிவாகும். அந்த ஞானம் வரும் வரை முன்னேற்றத்திற்காக முறையாக உழைப்பது நம் கடமை ஆகும்.

“வேதாந்தத்தை உன் ஆடையின் நுனியில் முடிபோட்டுக் கொண்டு உலகக் கடமைகளைக் கவனி” என்று ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் சொல்லியிருக்கிருர். பரிபூரணத்தை எட்டாத வரையில் அதாவது காலதேசவர்த்தமானத்தில் கட்டுண்டிருக்கும் பரியந்தம் சமுதாய முன்னேற்றம் நமக்கு மிக மிக உண்மையானது ஆகும். உதாரணமாகப் பரமஹம்ச நிலை அடைந்த ஒரு ஞானிக்குப் பெற்ருேரின் அன்பைத் துறந்து வெளியேகுவது இயல்பான செயலாகிறது. சத்தியப் பொருளாகிய ஆத்மாவைப் பற்றி அவர் பெற்ற அனுபூதியின் முன் பெற்ருேர்களின் அன்பு மெய்யானதன்று என்ருகிவிடுகிறது. ஆனல் குறும்பு செய்யும் ஒரு குழந்தையிடம், தாய் தந்தையர் கொள்ளும் அன்பில் அர்த்தமில்லை என்று யாராவது சொல்வார்களா? ஞானி ஒருவன் பந்தபாசம் என்று வெட்டிவிட்ட அதே அன்புக் கயிற்றைப் பிடித்துக்கொண்டுதான் அக்ஞானி ஒருவன் முன்னேற வேண்டும். அவ்வாறே இவ்வுலக வாழ்வை நடத்த வேண்டியவர்களுக்கும் முன்னேற வேண்டும் என்ற துடிப்பானது சரியாக இருக்கவேண்டிய துடிப்பு ஆகும். இவ்வுலகம் ஜீவர்களுக்குப் பள்ளிக்கூடம் ஆகின்றது. பள்ளியில் படிக்கும் மாணவனுக்கு வாழ்வு முழுவதும் பள்ளியிலேயே முடிந்து விடாது. பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் போதே வீட்டிலும் வாழ்வு தொடர்கிறது. பள்ளியில் பயிலும் காலம் முடிந்த பின் தனி வாழ்வு இருக்கிறது. ஆனல் பள்ளிப்படிப்பு இருக்கும்வரை அதற்குரிய வேலையிலும் விளையாட்டிலும் முழுமனதோடு ஈடுபட்டு அதனல் பயனடைந்தவனே பள்ளியை விட்டு வெளியே வரும் போது, காத்துக் கொண்டிருக்கும் புதிய வாழ்வை வெற்றிகரமாக நடாத்துவான். இவ்வுலக வாழ்வு என்னும் பள்ளியில் இயல்பாக அமைந்துள்ள மாயைகளைப் பயன்படுத்தினல்தான் நாமும் இவ்வுலகிற்கு அப்பாற்பட்ட பெருவாழ்வு வாழமுடியும். சந்நியாச ஆசிரமத்திற்குப் பயிற்சிக் கூடமாக இருப்பது கிரஹஸ்தாச்ரமம். முறையற்ற வாழ்க்கை வாழும் இல்லறத்தான் ஒரு மாண்புமிக்க சந்நியாசியை உருவாக்க முடியாது. இதையெல்லாம் நன்கு அறிந்திருந்ததால்தான் நம் முன்னேர்கள் உலகை மாற்ற முடியாது என்ருலும் பஞ்ச மகாயக்ஞங்களில் இல்லறத்தான் ஒருவன் ஈடுபட வேண்டும் என்று நியமித்தார்கள்.

எனவே தமோ குணத்தை ரஜோகுணத்தால் வெல்வோம்; ரஜஸிலிருந்து ஸத்துவத்திற்கு உயர்வோம். பின்னரே ஸத்துவத்திலிருந்து குணதீதத்திற்குச் செல்வது சாத்தியமாகும். வாழ்வின் இந்த லட்சியத்தை அடைய, யக்ஞ மூர்த்திகளாய் இருந்து முழு மூச்சுடன் உழைப்போமாக. நம் வாழ்வு யக்ஞ, தான, தவக் கர்மங்கள் நிறைந்தது ஆகுக.

யக்ஞம்

(ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 1970ல் விருதுநகர் அந்தர்யோகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

[292ஆம் பக்கத் தொடர்ச்சி]

கோவிலுக்கு வெறுங்கையோடு போகக் கூடாது. தெய்வத்துக்கு நைவேத்தியமாகப் படைப்பதற்கு நம்மிடத்திலுள்ள நல்லபொருள் ஒன்றைக் கொண்டுபோக வேண்டும். நைவேத்தியமாகப் படைத்த பொருளைப் பிரசாதமாக அனைவருக்கும் வழங்க வேண்டும். எல்லார்க்கும் வழங்கியான பிறகுதான் நாம் அருந்த வேண்டும். நமக்குக் கிடைக்கும் பொருள் ஒன்றைப் பொது உடைமை ஆக்குவது யக்ஞ தத்துவமாகும். நம் வாழ்வு தெய்வத்துக்குரியதாக அமையவேண்டும். கடவுள் வழிபாட்டில் கர்மகாண்டம் புகுந்துவிடக் கூடாது. நமக்கு என்று தேடுகிற இடத்து நாம் கர்ம பந்தத்தை வளர்க்கின்றோம். கோவிலுக்கு நைவேத்தியமாகப் படைப்பதற்குக் கொடுக்கின்ற அரிசியில் கற்களைக் கலந்துவிடுகிறார்கள். சுயநலம் புகுந்துள்ள அச்செயல் கர்மகாண்டமாகிறது.

இன்றைக்குக் கோவிலில் அர்ச்சகராக இருந்து வருபவர்கள் பரிதாபகரமான வறுமை நிலையில் இருக்கின்றார்கள். இதற்குக் காரணம் அவர்கள் தாங்கள் செய்கின்ற ஆராதனையை யக்ஞமாகச் செய்யாததேயாகும். வழிபாட்டுக்கு வரும் பக்தர்கள் பூஜைத் தட்டில் தட்சிணை போடுவார்கள். தட்சிணையாகப் பெறும் பொருளுக்கேற்ப சேவை செய்யவேண்டும். அப்பொழுதுதான் அது முறையாகச் சம்பாதித்ததாகும். பக்தர்களிடம் குருட்டு நம்பிக்கையை வளர்த்துப் பொருள் சம்பாதிப்பார்களானால் அது யக்ஞ வாழ்வாகாது. "நான் கோவிலுக்குப் போவதில்லை. கோவிலுக்குப் போனால் பண்டாக்கள் காசுக்காகச் செய்கின்ற உபத்திரவம் பொறுக்க முடியாததாக இருக்கின்றது." இங்ஙனம் மகாத்மா காந்தி கூறியுள்ளார். அர்ச்சகர்கள் யக்ஞ தத்துவத்திலிருந்து பிறழ்ந்ததால் அவர்கள் இன்றைக்குப் பரிதாபகரமான நிலையில் இருப்பதைக் காண்கின்றோம். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அர்ச்சகர் பணியை ஏற்றுக்கொண்டார். பள்ளிப் படிப்பு வயிற்றுப் பிழைப்புக்காகப் பயன்படுமேயன்றி ஹிருதயத்தை மலரச் செய்யப் பயன்படாது என்பதை அறிந்த ஸ்ரீ ராமகிருஷ்ணர் அதை அறவே புறக்கணித்தார். கல்வியில் அவர் மந்த புத்தியுடையவரல்லர்; ஞாபக சக்தியும், புத்திக் கூர்மையும் உடையவர். அன்று அவர் ஆராய்ந்து பயனற்றது என்று ஒதுக்கிய கல்வியை இன்றைக்கு நாம் நாடு முழுவதும் பின்பற்றி வருகின்றோம். அதன் விளைவாக மனப்பான்மை மாணவர்களிடையே கெட்டு வருகின்றது. விலங்குகளும் பறவைகளும் கல்வி கல்லாது உணவு தேடிக் கொள்கின்றன. கல்லூரி வரை படித்துவிட்டு வயிற்றுப் பிழைப்புக்காக வேலை தேடி அலைகின்றோம். வயிற்றுப் பிழைப்புக்காகப் பயன்படும் கல்வி தனக்கு வேண்டாமென்று ஒதுக்கிவிட்டுக் கடவுள் வழிபாட்டில் தீவிரமாக ஈடுபட்டார். அவர் தமயனார் கல்கத்தாவில் இருந்து கொண்டு வாழ்க்கை நடாத்திவந்தார். கமார்ப்புகூரில் தன் தம்பிகதாதரன் வீண் காலம் போக்கிக்கொண்டிருக்கிறான் என்று எண்ணிக் கல்கத்தாவுக்கு அழைத்துப் போனார். சில வீடுகளில் பூஜை செய்யும் பணியை அவரிடம் ஒப்படைத்தார். ஒரு நாளைக்கு ஒரு வீட்டில்தான் அவருக்குப் பூஜை பண்ண நேரம் இருக்கும். பூஜை பண்ணும்போது அதிலேயே தோய்ந்து விடுவார். அவர் அங்ஙனம் ஆழ்ந்து பூஜை செய்ததால் வாரத்துக்கு ஒரு நாளைக்குத்தான் ஒருவீட்டுக்குப் பூஜைபண்ணப் போக முடிந்தது. அவர் பூஜை பண்ணினால் அதைப் பார்ப்பவர்களுக்குப் பக்தி உண்டாகும். "கதாதரன் எங்கள் வீட்டுக்கு வாரத்துக்கு ஒருநாள் பூஜைக்கு வந்தால் போதும். அவர்தாம் எங்கள் வீட்டுக்குப் பூஜைக்கு வரவேண்டும்" என்று மக்கள் கூறினார்கள்.

மதுரநாதர் அவர் செய்த பூஜையைப் பார்த்து விட்டுத் தம் மாமியார் அமைத்த தக்ஷிணேசுவர ஆலயத்துக்கு அவரை அர்ச்சகராக இருக்கும்படி கேட்டுக் கொண்டார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் சில நிபந்தனைகளை விதித்தார். "நான் அர்ச்சகர் பணியை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றால் சம்பளம் பெற

மாட்டேன். அம்பிகைக்கு அலங்காரம் பண்ணுவதற்காக வைத்திருக்கும் நகைகளுக்கு நான் பாதுகாப்பாக இருக்க முடியாது. நான் அதைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தினல் பக்தி குறைந்து போய்விடும். எனவே நகையைப் பாதுகாப்பதற்கு வேறு ஆள் வைத்து விடுங்கள்." இந்த நிபந்தனைகளை யெல்லாம் மதுரநாதர் நிறைவேற்றி வைக்கச் சம்மதம் தெரிவித்த பின்தான் கோயிலில் பூஜைப் பணியை ஏற்றுக்கொண்டார். அவர் பூஜை செய்யும்பொழுது அது பிறருடைய உள்ளத்தைக் கவர்வதாக இருக்கும். அவர் தம்மை மறந்து–இவ்வுலகை மறந்து—பூஜையில் ஈடுபட்டிருப்பார். அப்படி அவர் செய்கின்ற பூஜையைப் பார்ப்பவர்கள் அதில் ஈடுபட்டுத் தங்களையும் சுற்றுப்புறத்தையும் மறந்து விடுவார்கள்.

ஆலயத்தில் பூஜை செய்யும் அர்ச்சகரின் சமுதாயப் பொறுப்பு எத்தகையது என்பதை அவர் காட்டிக் கொடுத்துள்ளார். ஒரு சமயம் தக்ஷிணேசுவர ஆலயத்தைக் கட்டிய ராணி ராசமணி அம்மையார் வழிபாட்டுக்கு வந்திருந்தார். அவ்வம்மையார் ராமகிருஷ்ணரிடம் அம்பிகையின் மீது ஒரு தோத்திரம் பாடும்படி கேட்டுக் கொண்டார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் பக்திப் பரவசநிலையிலிருந்து அம்பிகையின் மீது ஒரு தோத்திரம் பாடினர். அத்தோத்திரத்தை ராணி ராசமணி அம்மையார் கேட்டுக் கொண்டிருந்ததற்கிடையில் கோர்ட்டிலிருந்த வழக்கு ஒன்று தனக்கு வெற்றிகரமாக முடிய வேண்டுமென்று எண்ணினர். அம்மையாருடைய உள்ளம் வழிபாட்டை விட்டு விட்டு வழக்கைப்பற்றி எண்ணியதை ராமகிருஷ்ணர் அறிய வந்தார். அவ்வம்மையாரின் கன்னத்தில் ராமகிருஷ்ணர் அறைந்து விட்டார். அறையை வாங்கிக்கொண்ட அவ்வம்மையார் கூறியதாவது: "எனக்குப் புத்தி வந்தது. நான் இனி இத்தகைய தவறு செய்யமாட்டேன்.'' இங்ஙனம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் வழிபாட்டுக்கு வருபவர்களுடைய மனதைத் திருத்தியமைத்தார். மனதைப் பண்படுத்துவதும் பக்தியை வளர்ப்பதும் தான் அவருடைய நோக்கம். பணம் சம்பாதிப்பது அவருடைய நோக்கமன்று. அர்ச்சகருக்காக உள்ள சம்பளத்தைத் தாம் பெற்றுக்கொள்ளவில்லை. அவர் சார்பாக வேறொருவர் கையெழுத்துப் போட்டு வாங்கிக் கொண்டார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அர்ச்சகர் தொழிலை யக்ஞமாகச் செய்தார். தாம் பக்தி பூர்வமாக அதில் ஈடுபட்டதோடு மற்றவர்களையும் பக்தியில் ஈடுபடும்படி செய்தார். இங்ஙனம் அவர் தமக்கு அமைந்த பணியை யக்ஞமாகச் செய்து பரமஹம்சரானர். பகவான் கீதையில்,

चातुर्वर्ण्यं मया सृष्टं गुण कर्म विभागशः

சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம்குண கர்ம விபாகச:

— என்று கூறியுள்ளார்.

யக்ஞம் செய்யத்தெரியாதவன் சூத்திரன். யக்ஞம் செய்யத் தெரிந்தவர்களுள் அவரவர் தரத்திற்கேற்ப பிராம்மணன், க்ஷத்திரியன், வைசியன் என மூன்று நிலைகளுள் வைக்கப் பட்டனர். தன் வாழ்க்கையைக் கடவுள் வழிபாட்டுக்காக ஒப்படைப்பவன் துவிஜன் அல்லது இருபிறப்பாளன் ஆகின்ருன். 'நான் வாழ்ந்திருப்பது எனக்காக அன்று; தெய்வத்துக்காக வாழ்ந்திருக்கின்றேன்' என்ற மனப்பான்மை படைத்திருப்பது மற்ரெரு பிறப்பு எடுத்ததற்கு நிகராகிறது. துவிஜர்களுள் சிறந்தவன் துவிஜோத்தமன் ஆகின்ருன். அவன் பிராம்மணன் எனப்படுகின்ருன். அவன் தன் வாழ்வு முழுவதையும் கடவுள் வழிபாட்டுக்கென்றே ஒப்படைக்கின்ருன். கடவுள் வழிபாட்டோடு நாட்டு நலனையும் ஆட்சி முறையையும் கருத்தில் கொள்பவன் க்ஷத்திரியன் ஆகின்ருன். அவன் துவிஜர்களுள் இடைத்தரத்தில் இருப்பவனுகின்ருன். இன்னெரு படி கீழ்நிலையில் இருப்பவன் நாட்டுக்காகவும் தனக்காகவும் பொருள் தேடுகின்ருன். அவன் வைசியனுகின்ருன். பிறர் நலத்தைச் சிறிதும் கருத்தில் வாங்காது தனக்காக மட்டும் வாழ்பவன் சூத்திரனுகின்ருன். சிலர் ஓட்டலில் திருப்தியாகச் சாப்பிட்டுவிட்டு வீட்டுக்குப் போவார்கள். ஆனல் வீட்டில் குழந்தைகள் பட்டினி கிடக்கும். குடும்பத்தைப் பற்றிச்சிறிதும் நினைக்காது தன் தேவைகளை மட்டும் பூர்த்தி செய்து கொள்பவன் எப்படி யக்ஞமூர்த்தியாக முடியும்?

வாழ்க்கை சூத்திர நிலையில் துவங்குகிறது. மரணகாலம் வரையிலும் சூத்திர நிலையிலேயே இருந்துவிட்டுப் பலர் மாய்ந்து போகின்றனர்.

சிலர் சூத்திர நிலையிலிருந்து தங்களை வைசிய நிலைக்கு உயர்த்திக்கொள்கின்றனர். இன்னும் சிலர் மரணம் வருவதற்குள் தங்களை க்ஷத்திர நிலைக்கு உயர்த்திக்கொள்கின்றனர். மிகச் சிலர்தான் பிராம்மண நிலையை அடைந்தபின் மரணமடைகின்றனர். குழந்தைப் பருவத்தில் எல்லாரும் சூத்திரர்களாக இருக்கின்றோம். நாமாகவே அப்பொழுது செயல்புரிவதற்குச் சிந்தனை அற்றவர்களாக இருக்கின்றோம். உடல் தேவையைப் பூர்த்தி செய்துகொள்வதற்குப் பிறருடைய உதவியை நாடுகின்றோம். வயது வரவரத்தான் சிந்தனை சக்தி உண்டாகிறது. சிந்தித்துச் செயல் புரியும் நிலையில் நாம் வளர்ச்சி அடைந்து வருகின்றோம்.

மனம் தூய்மையடைகின்றவளவு சிந்தனையில் தெளிவு உண்டாகிறது. தர்மம் எது? அதர்மம் எது? என்பதைப் பாகுபடுத்துவதற்குத் தெளிந்த சிந்தனை வேண்டும். மனதைத் தூய்மைப்படுத்தியவர்கள் அறநெறி இன்னதென்பதை நன்கு அறிகின்றார்கள். மற்றவர்கள் அறநெறி இன்னதென்பதை அறியாதவர்களாக இருக்கின்றார்கள்.

'மனத்துக்கண் மாசில னாதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற'

என்பது வள்ளுவர் வாக்கு. அறம் இன்னதென்பதை அறியாதமக்களுக்கு அறம் இன்னதென்பதை அறிந்த அந்தணர்கள் வழிகாட்டுகின்றார்கள். அறநெறி பிறழ்ந்து போகின்றவர்களைத் திருத்தி அமைப்பது அந்தணர்களுடைய கடமையாகின்றது. அவர்கள் சமுதாயத்தில் தலைத்தர மக்களாகின்றார்கள். அறநெறி செல்பவர்களையும், அறநெறியையும் பாதுகாக்க வேண்டிய பணியை க்ஷத்திரியர்கள் செய்து வருகின்றார்கள். அறத்தைப் பாதுகாத்து வளர்ப்பதுதான் க்ஷத்திரியர்களின் கடமை. அந்தணர்களுக்கும், க்ஷத்திரியர்களுக்கும் வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களை உற்பத்தி செய்து நியாயமான முறையில் தூய பொருள்களாக மக்களுக்குக் கிடைக்கும்படி செய்யவேண்டியது வைசியர்களுடைய கடமையாகும். பண்பாட்டில் கடைசி நிலையில் இருக்கும் சூத்திரர்கள், வைசியர்களுக்கு உதவியாகத் தங்களுக்கு அமைந்த கடமையைப் பொறுப்புடனும், சிரத்தையுடனும் செய்து வருவது சூத்திரர்களுடைய கடமையாகும். இங்ஙனம் நான்கு வருணத்தார்களும் தங்களுக்குரிய கடமைகளைப் பிறர் நலனை அடிப்படையாகக்கொண்டு சுயநலமற்றுச் செய்து வருவார்களானால் அவர்கள் செய்வது யக்ஞமாகும்.

சமுதாயத்தில் நான்கு வருணத்தார்கள் எப்பொழுதும் இருப்பார்கள். பண்பாட்டில் அந்தணர்களாக இருப்பவர்களுடைய தொகை அதிகரிக்கின்றபொழுது அதைக் கிருதயுகம் என்று சொல்லலாம். சமுதாயத்தில் பண்பாட்டில் சூத்திரர்களாக இருப்பவர்களுடைய தொகை அதிகரிக்கும் பொழுது அதைக் கலியுகம் என்று சொல்லலாம். இவ்விரண்டுக்குமிடையில் திரேதாயுகமும், துவாபரயுகமும் அமைகின்றன. அறநெறியைப்பற்றிக் கவலைப்படாது போக நெறியில் போகின்றவர்களிடத்தில் சுயநலம் ஓங்கி இருக்கும். சுயநலத்திலிருந்துதான் எல்லாக் கேடுகளும் தோன்றுகின்றன.

மற்றவர்கள் நலத்திலும் பக்தியிலும் மனதைச் செலுத்துபவர்கள் யக்ஞ மூர்த்திகளாகின்றார்கள். நாட்டில் யக்ஞமூர்த்திகள் அதிகரிக்கின்ற அளவு நாடு மேல் நிலையை அடையும். இன்று நாடு கீழ்நிலைக்குப் போனதற்குக் காரணம் சுயநலம் படைத்தவர்கள் பெருகியதேயாகும். ஆத்ம தத்துவம் இன்னதென்பதை அறியாவிட்டாலும் பொது நன்மையில் கருத்துச் செலுத்திவரும் அமெரிக்க நாடு முன்னேறியுள்ளது. ஆத்ம தத்துவத்தை அறிந்திருந்தும் அதைக் கடைப் பிடிக்கத் தவறியதன் விளைவாக நாம் அவர்களிடமிருந்து உதவிபெற்று வருகின்றோம்.

வாழ்க்கையை இறைவனுக்கென்றே ஒப்படைப்பது யக்ஞ தத்துவமாகும். நம்முடைய செயல்மூலம் நாம் அதிகம் பயனடைவதை விடச் சமுதாயம் அதிகம் பயனடையவேண்டும். இதைக் கருத்தில் கொண்டு வாழ்பவர்கள் யக்ஞ மூர்த்திகளாகின்றார்கள். யக்ஞசொருபமாக பரமாத்மா இருக்கின்றார். அவரை வழிபடுகின்ற நாம் நம் பண்பாட்டிற்கேற்ப மேலோர் ஆகின்றோம். பரமனுக்கும் சமுதாயத்துக்கும் நம்முடைய வாழ்க்கையை உரியதாக்கி வந்தால் அது நல்ல ஆத்ம சாதனமாகிறது. (முற்றும்)

குட்டித் திருவாசகம்

(வித்துவான் ஆதி. பாலசுந்தரன் M. A.)

தலைவனே! உனது அருளையே உணர்கின்றேன்:

"பெறுவது நினது திருவடிக் கமலம்!;
பேசுவது உன்திரு நாமம்;
உறுவது நினது திருஉரு வெளியாம்;
உணர்வதுஉன் அருள்அலாது உண்டோ?
மறுவறு சிறப்பின் மாசிலா மணியே!
வரதனே! சிவபெரு மானே!
குறுமுனி பரவக் களாநிழல் அமர்ந்த
கொடிமதில் கருவை ஆதிபனே!"

— குற்றம் எதுவும் இல்லாத மாசிலா மணியே! வரங்கள் யாவும் கொடுக்க வல்லவனே! சிவ பெருமானே! அகஸ்திய முனிவர் புகழ்ந்து துதிக்க, திருக்களாமர நிழல் அமர்ந்த, கொடி மரமும், மதிலும் அமைந்த திருக்கருவையம்பதி யில் எழுந்தருளியுள்ள தலைவனே! அடியேன் அடைவதாக இருந்தால், உனது திருவடித் தாமரைகளையே அடைவேன். உன்னுடைய திருநாமத்தையே நான் எப்போதும் பேசிக் கொண்டிருப்பேன். நான் அடைவது, உனது அகண்டாகார வடிவமான பரவெளியாகும். உன்னுடைய அருளைத் தவிர, நான் உணர்வது வேறு ஏதாவது உண்டா? —என வினவுகின் ருர் அதிவீரராம பாண்டியர்.

"பார்க்கின்றவன் மேன்மையடைந்து நன்மை யடைதற்பொருட்டு, அவனல் பார்க்கப்படு கிற பொருள் திருந்திய காட்சியாகவே அமை யும்" என்பது ஒரு கொள்கை,

இங்கே பார்க்கின்றவர் அதிவீரராமர். அவர் இன்னும் மேன்மையுற்று நன்மையடைதற் பொருட்டு, சிவபிரான் மாசிலாமணியாகவும், வரங்களையெல்லாம் வழங்குபவனுகவும் காட்சி தருகிருர்.

அங்கிய நிறம் பொருந்துதல், புள்ளி, பறவை யின் பாத வடிவாக உள்ள புள்ளடி, கீற்று, தராசம் போன்ற ஐந்து வகையானகுற்றங்களை நவமணிகளுக்குக் கூறுவார்கள். இத்தகைய குற்றங்கள் எதுவும் இல்லாத மணி மாசு இல் லாத மாணிக்கம். சிவபிரான், நிர்மல மூர்த்தி; மங்கள மூர்த்தி. சிவதரன் என்னும் பெயர் சிவனுக்கு உண்டு. தன்னை அடைந்தவர்களைச் சிவமாக்குகிறவன் சிவன். தன்னைச் சார்பவ னுக்கு அழிவு இல்லாத சிவபதவி தருபவனும் சிவனே. "கால தேச வர்த்தமானத்தால் பாதிக்கப்படாது இருப்பவன் 'ஸத் வஸ்து' அல்லது மெய்யன்; அவனைக் குற்றப்படுத்து வதற்கு எதுவும் இல்லையாதலின் விமலன்" என ஆன்ருேர் கூறுவர். எனவே, அதிவீரர், மாசிலாமணி எனக் கூறுகின்ருர்.

வரங்களையெல்லாம் வழங்குபவர் சிவன். எனவே, வரதனே! என்கிருர். வேதத்துக்கு உடன்பட்டு வருகின்ற ஆறு சமயங்களைக் கடைப்பிடிப்பவர்கள் அனைவருக்கும் வீடுபேறு என்னும் முக்தியைக் கொடுப்பவர் சிவபெரு மான். "இன்று எனக்கு எளி வந்து அருளி"— இன்று எளிதில் வந்து என்னை ஆட்கொண் டருளினை என்கிருர் மாணிக்கவாசக சுவாமி கள். இறைவனுடைய திருவருளுக்குப் பாத் திரமானவர்கள் அனைவரும் அவனுடைய ஞானப் பிரசாதம் பெற்றவர்கள் ஆவார்கள்.

"ஈறு இலான் அளித்த நல்ல வரம் எனக்கு இருக்க"— அழிவு இல்லாதவனுகிய சிவபெரு மான் எனக்கு அனுக்கிரகம் செய்த நல்ல வரம் என்னிடம் இருக்கையில்"...என்று சிவபெரு மான் தனக்கு வரமளித்ததை வாலாசுரன் இந் திரனிடம் கூறுவதாக, திருவிளையாடல் புரா ணம் சொல்லுகிறது. அசுரனுக்கு வரம் தரும் அரனர், அன்பர்களுக்கும் வரம் தருவார் அன்ருே!

"பெறுவது நினது திருவடிக் கமலம்"— நான் பெறுவது, சிவனே! உன்னுடைய திருவடிகளாகிய தாமரை ஆகும். ஜீவதேக மாக இருந்து வினைப்பயன்களை அனுபவித்த உடம்பு அதிவீரராமரின் உடம்பு ஆகும். இப் போது, சிவதேகமாக்கித் தன்னைத் சிவன டிக்கு ஆளாக்கிக் கொண்டவர் அவர்.

உயிர் என்னும் ஆன்மாவுக்கு மூன்று வகை நிலைகள் உண்டு. ஒன்று, உடம்பு எடுக்காத நிலையில், அந்தகாரப் பெருவெளியில் எங்கோ ஓரிடத்தில் நிற்கும் நிலை. இரண்டாவது, பிறவி எடுத்து, உடம்போடு கூடி அனுபவித்தல். மூன்ருவது அந்த ஆன்மா தான் செய்த நல் வினை தீவினைக்கு ஏற்ப, சுவர்க்கம் நரகங்

களில் இன்ப துன்பங்களை அனுபவித்தல், இந்த மூன்று நிலைகளில், ஆன்மாவுக்கு இயல்பாக உள்ள நிலை எது? இந்த மூன்று வகை நிலையிலிருந்தும் நீங்கி, ஆன்மா இறைவனுடைய திருவடி இன்பத்தைப் பெறுவதே இயல்பாக உள்ள நிலை ஆகும்.

அதைத்தான் இங்கே, அதிவீரராம பாண்டியர், "பெறுவது நினது திருவடிக் கமலம்" என்கிறார். பார்க்கும் இடம் எங்கணும் நீக்கமறச் சிவமாகவே தோன்றுவது இறைவனின் திருமுகம் ஆகும். இறைவனிடத்தில் விளங்கி நிற்கும் பேரின்பமே இறைவனின் திருமுடியாகும். ஆன்மாக்களிடத்திலுள்ள யான் என்னும் அகப்பற்றும், எனது என்னும் புறப்பற்றும் அறுந்து போகுமாறு, இறைவனின் திருவருள் உயிர்களிடத்தில் பொருந்தியிருப்பது இறைவனின் திருவடியாகும்.

இந்த உண்மைகளையெல்லாம் உணர்ந்த ஆன்மா, யாண்டும் நீக்கமற நிறைந்து நிற்கும் பரம்பொருளைத் தன்னுடைய அனுபவத்தால் கண்டு உடல், கருவி, உலகு முதலிய பந்தங்களிலிருந்து விடுபட்டுத் திருவருள் இன்பத்தைப் பெறுவது சிவக்காட்சி.

இவ்வாறு சிவனின் திருவருள் பதிவுபெற்று, சிவக்காட்சியை அனுபவித்தவர் அதிவீரராம பாண்டியர்.

"பேசுவது உன் திருநாமம்" சிவனே! நான் எப்பொழுதும் உச்சரித்துக்கொண்டிருப்பதெல்லாம் உன்னுடைய திரு நாமமே ஆகும்.

"நாவினுக்கு அருங்கலம் நமச்சிவாயவே"— நாவு படைத்தமைக்கு அழகு பஞ்சாட்சரத்தை இடையறாது ஓதிக்கொண்டிருத்தலாகும் என்பது அடியார் ஒருவர் வாக்கு. இறைவன் திருநாமத்தைச் சொல்லும்போது, கேட்ட மாத்திரத்தில், அன்பர்கள் அருள்தாகம் எடுத்துப் பரவசமடைகின்றனர் என்பது அடியார் ஒருவரின் அனுபவம் ஆகும்.

"உள்ளன்போடு இறைவனைக் கூவியழைப்பது, அவனுடைய அருளைப் பெறுதற்கு உற்ற உபாயம் ஆகும்" என்பதும் அனுபவவாக்கு.

திருநாமம் ஒன்றில்லா இறைவனுக்கு ஆயிரம் திருநாமங்கள் உண்டு. அவரவர்க்கு விருப்பமான திருநாமத்தைச் சொல்லி இறைவனைப் புகழலாம். இறைவழிபாடு செய்வதற்கு, இறைவன் திருநாமத்தைச் சொல்லிக்கொண்டிருப்பதைக் காட்டிலும் எளிமையான வழிபாடு வேறு எதுவும் இல்லை.

"ஆத்ம சாதனங்களுள் நாமஜபம் மிகவும் சுலபமானது. எப்பொழுது வேண்டுமானாலும் நாமத்தை ஓதிக்கொண்டே இருக்கலாம். வேறு பல அலுவல்களுக்கு இடையிலும் அதைச் சொல்லிக் கொண்டிருக்கலாம். நாமத்தை வாய்விட்டுச் சொல்வது ஸ்தூல ஜபம். அதற்கு வலிவு சாமானியமானது. நா அசைவதற்கிடையில் சொல் வெளியில் கேட்பதில்லை. அத்தகையது சூட்சும ஜபம். அதற்கு வலிவு இன்னும் அதிகம். நாவும் அசையாமல், மனதுக்குள்ளேயே நாமத்தைச் சொல்லிக் கொண்டிருப்பது ஜபத்தின் காரண நிலை அல்லது உச்ச நிலை. அதற்கு வலிவு மிக உண்டு. பக்தன் அடைகிற பரிபக்குவங்களுள் ஜபஸித்தி என்பது மிக முக்கியமானது. மற்ற மனவிருத்திகளுக்கிடையில், மனதில் ஒரு பகுதி இடையறாது இறைவன் நாமத்தை உச்சரித்துக்கொண்டே இருக்குமாகில் அது ஜபசித்தி எனப்படுகிறது"—இவ் அருள்வாக்கும் இவ்விடத்தில் சிந்திக்கத் தக்கது.

சொன்னதைச் சொல்லுவது கிளிப்பிள்ளை. கேட்டதைச் சொல்லுகிறது. ஆனால், அதற்குப் பொருள் தெரியாது. சொல்லால் வடித்துச்சொல்ல முடியாத நிர்வாணப் பொருளைக் குறித்துச் சான்றோர் பலரும் புகழ் மாலை சூட்டியிருக்கின்றனர். அவையாவும், "பொருள் சேர் புகழ் மொழிகள்" ஆகும். நாம ஜபத்தைச் சொல்லும்போதே, சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் செல்வர்" என்ற அருளுரைப்படி, பொருளை உணர்ந்து உச்சரித்துப் பழகினால், ஈஸ்வர தரிசனம் கிடைப்பதற்கு வாய்ப்பாக அமையும்.

"உறுவது நினது திருவுரு வெளியாம்" —நான் அடைவது, உனது அகண்டாகார வடிவமான பரவெளியாகும். தூய சிவ ஞானம் வாய்க்கப்பெற்றவர் அதிவீரராம பாண்டியர். நிலையில்லாத பொருளை நிலைத்து நிற்கும் என உணரும் புல்லிய அறிவினைப் போக்கியவர். எனவே, தன் முனைப்பு அகலுகிறது. இறைவனுடைய அருள் விளங்க அவர் வசத்தராய் விளங்கும் பேறு பெற்றவர். தாம்

எதைச் சாரவேண்டுமோ அதை உணர்ந்து, பற்றுகிய சார்பைக் கெடுத்தவர் அவர். ஆன்மா, ஞானத்தைப் பெறுவதால் படிப்படியாக மேல்நிலை அடைகிறது.

"உணர்வது உன் அருள் அலாது உண்டோ?" சிவனே! உன்னுடைய அருளை யன்றி நான் உணரத்தக்க வேறு உணர்வும் உண்டோ? என வினவுகிறார்.

இன்பதுன்பமாகிய இருவினைகளும், உபாதிகளும் நீங்கப்பெற்று இறைவன் அருளில் அழுந்தி நிற்கும் அடியவர்களை "அணைந்தோர்" என்று கூறுவார்கள். இவர்கள், மெய்ப் பொருளாகிய செம்பொருளைக் கண்டு மகிழும் காட்சி ஒன்றிலேயே திளைத்திருப்பர். வேறு செயலோ, காட்சியோ இவர்களுக்குப் புலனாவதில்லை. காண்பதெல்லாம் இவர்களுக்குச் சிவமே.

"ஒருவரை அன்றி உரு அறியாது என்றன் உள்ளமதே" — சிவனுரை அன்றி வேறு உருவத்தை என் உள்ளம் அறியாது என மணிவாசகர் கூறுவதுபோல, இங்கே இவர், உனது அருளைத்தவிர வேறு உணர்வு எனக்கு இல்லை என்கிறார். சிவானந்தத்தில் விளைந்த மன உறுதி இவ்வாறு இவரைக் கூறச்சொல்கிறது. நெறியில்லா நெறி சாராது, சிறு நெறிகளில் சேராமல் திருவருளே சார்ந்தவர் ஆதலின் மனத்தில் உறைப்பு உண்டாயிற்று.

அதிவீரராமருக்கு, மெய்ப்பொருள் விளங்கா வண்ணம் மறைத்திருந்த அஞ்ஞான மறைப்பை விலக்கி, தெரியாத சிவானுபூதிகளையெல்லாம் தெரியும்படி செய்து, பராசக்தியோடு ஞானப் பெருவெளியில் பழுத்த அருள் கனியை நல்கி, பிறவிப் பெருங்கடலில் இருந்து முக்தியாகிய கரை சேருவதற்குரிய பேரின்பக் காட்சிகளை யெல்லாம் காட்டிக் கொடுத்து அருள் செய்தவர் திருக்கருவைச் சிவபிரான்.

"அருள் நிறை தரும் என்அருட் பெருஞ் ஜோதி" என்கிறார் வடலூர் வள்ளலார். "அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே" என்கிறார் வாதவூரர். அருள் செல்வத்தை வாரி வழங்கிய சிவனுடைய அருள் உணர்வைத் தவிர வேறு உணர்வு எனக்கு இல்லை என்கிறார் அதிவீரராம பாண்டியர்.

ஜோதியே! உன்னை நான் எவ்வாறு உணர்வேன்?

"ஆதவன் மதிபார் அனல்வெளி புனல்கால்
அருமறை எச்சன்என்று எட்டுப்
பேதமாய் உருவாய் அருவமாய் நிறைந்த
பெற்றியால் உற்றுநான் உன்னை
ஏதினால் உணர்வேன்; உணருமாறு
அருளாய்!
இளநிலாப் பசுங்கொழுந்து அணிந்த
சோதியே! கருவை ஒப்பனை களபத்
துணைமுலை தழுவு காதலனே!"

—பிறைச் சந்திரனை அணிந்த ஜோதி வடிவானவனே! திருக்கருவை நகரில் எழுந்தருளியுள்ள உமையம்மைக்கு விருப்பமானவனே! கதிரவன், சந்திரன், பூமி, நெருப்பு, வானம், தண்ணீர், காற்று, ஆன்மா என்று அஷ்ட மூர்த்தியாக விளங்குகிறாய்! அதே சமயம் எங்கும் நிறைந்து திகழும் அருவ வடிவமாகவும் இருக்கிறாய்! இவ்வாறு முரண்பட்ட தன்மை உன்னிடம் உள்ளபடியால், எத்தன்மையால் நான் உன்னை உள்ளவாறு உணர்வேன்? உள்ளவாறே நான் உணர்ந்து கொள்வதற்கு எனக்கு அருள் செய்வாயாக! என அதிவீரராம பாண்டியர் இறைஞ்சுகின்றார்.

குணம் குறி கடந்த சிவபரம் பொருள் அஷ்ட மூர்த்தியாகவும், அருவமாகவும் உள்ள முரண்பாடு உடைய வடிவத்தை இங்கே குறிப்பிடுகின்றார்.

கதிரவன் ஒளி தருவது கதிரவன் கண்ணுக்குப் புறம்பாக நின்று பொருளை விளக்கிக் காட்டும். நமது கண் ஒளியோடு கூடியும் பிற பொருளை விளக்கிக் காட்டும்.

அதே போன்று, இறைவன் உயிருக்கு வேறாக நின்றும் எல்லாவற்றையும் உணர்த்தியருளுகின்றான். உயிருக்கு உடனாக இருந்தும் அனைத்தையும் உணர்த்தியருளுகின்றான்.

மதி—சந்திரன். இரவில் பூமிக்கு ஒளி தருவது சந்திரன். ஒரு மாதத்தில் பாதி நாள்கள் இருளில் மூழ்கிக்கிடக்கும் பூமியை மெல்ல மெல்ல ஒளி மயமாக்குகிறது சந்திரன்.

இறைவனும் ஆன்மாக்களிடத்தில் அமைந்துள்ள அஞ்ஞான இருளைச் சிறிது சிறிதாக அகற்றி, அவ்வுயிர்கள் செய்த நல்வினைகளுக்கு ஏற்றவாறு ஞான ஒளி தந்தருளுகிறான்.

பார் – பூமி – தன்னுடைய உருவத்தைப் பல்

லாயிரம்கோடி அண்டங்களும் அணுவாகப் போகும்படி பெரிதாக்கிக் கொண்டவன் சிவன். அணுக்கள் எல்லாம் அண்டங்களாகும்படி தன்னுடைய உருவத்தைச் சிறிதாக்கிக் கொண்டவனும் சிவன். அண்டங்களின் உள்ளும் புறமும் சாட்சியாக விளங்குபவனும் அவன்தான். சர்வ அண்டங்களையும் சித்சக்தியின் துணைகொண்டு படைப்பவனும் அவனே. பிரபஞ்சங்களையெல்லாம் படைக்கின்ற அவனே நிலமாகவும் காட்சி தருகிறான்.

"பலகோடி, அண்டம் உருவாகி அங்கம் சராசரமாய்" — இறைவன் பலகோடி அண்டங்களையும் தன் திருஉருவங்களாகவும், அவ் அண்டங்களில் உள்ள இயங்குவனவும், நிற்பனவும் ஆகிய பொருள்களை உறுப்புக்களாகவும் கொண்டு இலங்குவதைக் குமரகுருபரர் இவ்வாறு கூறுகின்றார்.

"உலகமே உருவமாக யோனிகள் உறுப்பாக"—இறைவன் உயிர்களுக்கு அறிவு நல்குவதற்காக, அண்டம் முதலியவற்றை உருவாகக் கொண்டுள்ளான். இவ்வாறு சிவஞான சித்தியார்-சுபக்கம் கூறுகிறது.

"இருநிலனாய்த் தீயாகி நீருமாகி" என்று அப்பர் சுவாமிகள், இறைவன் நிலமாக, தீயாக, நீராக விளங்குவதைக் குறிப்பிடுகின்றார்.

"வானாகி மண்ணாகி வளியாகி, ஒளியாகி", எனவும், "பிறருக்கு அரிய நெருப்பை, நீரை, காலை, நிலனை, விசும்பை" எனவும் திருவாசகம், சிவபிரான் வான், மண், காற்று, நெருப்பு, நீர் ஆகிய வடிவங்களாகப் பெற்றுத் திகழ்வதைக் கூறுகிறது.

"அது [பிரம்மம்] எங்கும் கை கால்களை உடையது; எங்கும் காதுகளை உடையது; உலகில் அனைத்தையும் அது வியாபித்துள்ளது"— பிரம்மம் பிரபஞ்ச வடிவமாகத் திகழ்வதை உபநிடதம் இவ்வாறு கூறுகிறது.

அனல்-நெருப்பு, தன்னைச் சார்ந்ததையெல்லாம் தூய்மையாக்குவது தீயின் இயல்பு. காமம், வெகுளி மயக்கம் முதலியன மன மாசுகளை அகற்றித் தன்னைச் சார்ந்தவர்களைத் தூய ஆத்மனாக ஆக்குவது இறை இயல்பு. இறைவனே அனல் நிறமாக, சோதியாக, சுடராக, ஒளி விளக்காகத் திகழ்பவன்; கையில் அனல் ஏந்தி ஆடுவான். அனல் தகிக்கும் சுடுகாட்டில் நடனம் ஆடுபவன்.

ஆகாயம்-எல்லாப் பூதங்களும் விரிவடைந்து நிற்பதற்கு இடம் கொடுக்கும். இறைவனும் தன்னிடத்துப் பிரபஞ்சப் பொருள்கள் அனைத்தும் சார்ந்து நிற்பதற்கு இடம் கொடுப்பவன்.

சூரபத்மனுக்கு முன்னால் முருகப்பெருமான் விசுவரூபம் கொண்டு காட்சி அளிக்கிறார். அப்போது, முருகப்பெருமான் திருவடியின் ஒரு மயிர்க்காலில், சூரன் தான் ஆளுகின்ற ஆயிரத்துஎட்டு அண்டங்களைக் கண்டு வியந்ததாகவும், அம்முருகன் திருமேனி முழுவதும் பல கோடிக்கணக்கான அண்டங்களைக் கண்டு வியந்ததாகவும் கந்தபுராணம் கூறுகிறது.

எனவே சர்வவியாபி, அருவ வடிவினன்; அதாவது உருவம் அற்றவன்.

வானம்-ஞான ஆகாயம்; ஞான ஆகாயத்தைத் தகர ஆகாசம்-என்று உபநிடதம் சொல்லுகிறது.

ஆகாயம்-சிற்சபை என்கிறார் வடலூர் வள்ளலார்.

புனல்-நீர். இறைவனுடைய அருள் வடிவத்துக்கு நீரை உவமை சொல்லுவார்கள். நீர் இல்லாமல் உலகில் உயிர்கள் எதுவும் வாழ முடியாது. இறைவனுடைய திருவருள் இன்றி உலகம் இல்லை.

பஞ்ச பூதங்கள் அனைத்திலும் இறைவன் நீக்கமற நிறைந்துள்ளான் என்பதை, "பூதங்கள் தோறும் நின்றாய்" என வாதவூரார் குறிப்பிடுகின்றார்.

கால்-காற்று. "உழிதரு கால்" என்று சொல்வது போல, எங்கும் இயங்கிக் கொண்டிருப்பது காற்று. உடம்போடு கூடிய எல்லா உயிர் இனங்களுக்கும், தாவர இனங்களுக்கும் மிகவும் இன்றியமையாதது காற்று. எல்லாவற்றையும் இயங்கச் செய்வது காற்று. தொடு உணர்ச்சிக்கு வெளிப்படுவது, அரு உருவ வடிவமாக இருப்பது.

இறைவனும் எல்லா ஆன்மாக்களிலும் புகுந்து ஆன்மாக்களை இயக்குகின்றான். அரு உருவமாய்த் திகழ்கின்றான்.

எச்சன்-ஆன்மா. இறைவனே ஒவ்வொரு உயிராகத் திகழ்கின்றான். "புவனம் நீர் தீ காற்று இயமானன்" என்பது திருவாசகம். பஞ்சபூதங்களும், சூரிய சந்திரர்களும்,

இயமானன் என்னும் உயிரும் உலகம் ஆகும். இவை தவிர உலகம் வேறு இல்லை. இவை எல்லா வடிவமாகவும் விளங்குகின்ற வன் இறைவன்.

எச்சன்—ஆன்மாவாக இறைவன் திகழ் கிருன் என்று அதிவீரராமர் கூறக் காரணம், அவருக்கு முன்பே ஆன்ருேர்கள், "இயமான னும் விமலா!" —விமலனுகிய சிவன் ஆன்மா என்று சொல்லியுள்ளதை ஆதாரமாகக் கொண்டுதான்.

"பார் உருவாய்ப் பிறப்பு" என்கிருர். பார் என்பது மண்ணுலகம். மண்ணுலகம் பஞ்ச பூதச் சேர்க்கையால் ஆனது. ஐம்பூதங்களின் கூட்டுறவால் உண்டான பலவேறு வடிவங் களை உடைய பிறப்புப் பஞ்சபூதங்களாக இறைவன் காட்சியளிக்கிருன் என்பதால், பல வேறு வடிவங்களை உடைய உடம்புகளுக்கும் அவனே காரணம் ஆகின்ருன்.

"இயற்கையும் அதில் உள்ள உயிர்களும் இறைவனுடைய மாய வித்தையாகும். அவை யாவையும், அவன் தன்னிடத்திருந்து தோற்று வித்துப் பின்பு தன்னுள்ளேயே ஒடுக்கிக் கொள்கிருன்" என்பது ஆன்ருேரின் அமுத வாக்கு.

எனவே, எச்சன் என்னும் ஆன்மாவாகவும் இறைவன் திகழ்கின்ருன் அல்லவா!

"ஊனுகி உயிராகி" என்பதும் சான்ருேர் வாக்கு. எச்சன் என்னும் ஆன்மா, இங்கே உயிர் என்று சொல்லப்படுகிறது.

"எட்டுப் பேதமாய் உருவாய்" என இப் பாடலில் அதிவீரராமர் குறிப்பிடுகின்ருர்.

சூரியன், சந்திரன், பூமி, நெருப்பு, ஆகாயம். நீர், காற்று, ஆன்மா என்னும் அஷ்ட மூர்த்தி யாகச் சிவபெருமான் திகழ்கின்ருன் என்கிருர் அவர்.

"நிலம் நீர் நெருப்பு உயிர் நீள் விசும்பு நிலாப்பகலோன் புலன் ஆய மைந்தனேடு எண் வகையாய்ப் புணர்ந்து நின்ருன்"-நிலம், நீர், நெருப்பு, காற்று, அகன்ற ஆகாயம், சந் திரன், சூரியன், அறிவு மயமான ஆன்மா என எட்டு வகையாகக் கூடி இருப்பவன் ஈசன் என்கிருர் மணிவாசகர்.

இறைவன் ஒருவனே இவ்வாறு அஷ்ட மூர்த்தியாக இலங்குகின்ருன். எட்டு வகைக் குணங்கள் இறைவனுக்குச் சொல்லப்படுவது போன்று, எண்வகை வடிவங்களும் ஈசனுக் குச் சொல்லப்படுகின்றன.

சந்திரசேகரர், உமாமகேசர், ரிஷபாருடர், சபாபதி, கல்யாணசுந்தரர், பிக்ஷாடனர், காமாரி, அந்தகாரி, திரிபுராரி, ஜலந்தராரி, விதித்தும்சர், வீரபத்திரர், நரசிங்கநிபாதனர், அர்த்தநாரீஸ்வரர், கிராதர், கங்காளர், சண் டேசானுக்கிரஹர், நீலகண்டர், சக்கிராபயப் பிரதர், கஜமுகானுக்கிரஹர், சோமாஸ்காந்தர், ஏகபாதர், அனந்தசுகபிருது, தக்ஷிணமூர்த்தி, லிங்கோபவர் ஆகிய இருபத்தைந்தும் பஞ்ச விம்சதி மூர்த்தங்கள் ஆகும்.

சிவபெருமான் ஏகமூர்த்தியாகவும், பஞ்ச மூர்த்தியாகவும், அஷ்ட மூர்த்தியாகவும், பஞ்ச விம்சதி மூர்த்தியாகவும் திகழ்கின்ருன்.

"அருவமாய் நிறைந்த பெற்றியால்" எங்கும் நிறைந்து திகழும் அருவ வடிவமாய் விளங்கும் தன்மையால்—என இறைவனுடைய அருவத் தன்மை பற்றிக் கூறுகின்ருர் அதிவீரராமர்.

"அருவாகி உருவாகி அருவுருவம் கடந்து உண்மை அறிவானந்த உருவாகி அளவிறந்த உயிராகி அவ்வுயிர்க்கோர் உணர்வாகி"— அருவம் ஆகியும், உருவம் ஆகியும், அருவுருவ மாகியும், இவைகளையெல்லாம் கடந்த சச்சி தானந்த உருவமாகியும், அளவு இல்லாத உயிர்களாகியும், அவ்வுயிர்களின் அறிவுக்கு ஓர் அறிவாகியும் —எனப் பரஞ்ஜோதி முனிவர் சிவபிரானுடைய இயல்புகளைச் சொல்லும் போது, "அருவ" வடிவத்தையும் குறிப்பிடு வதைக் காணலாம்.

சிவம், சக்தி, நாதம், விந்து ஆகிய நான்கும் இறைவனுடைய அருவ வடிவங்கள் ஆகும்.

மகேஸ்வரன், ருத்ரன், திருமால், பிரம்மன் என்னும் நான்கும் உருவ வடிவங்கள் ஆகும்.

சதாசிவம் என்னும் ஒன்று மட்டும் அரு உருவ வடிவம் ஆகும்.

"பிரபஞ்சத்தைப் படைத்து, எங்கும் நிறைந் திருக்கும் தெய்வம் அன்பினுலும் அறிவினுலும் எண்ணத்தினுலும் வரையறுக்கப்பட்டவனுய் ஜனங்களின் உள்ளத்தில் வீற்றிருக்கிருன். இதை அனுபூதியில் அறிகிறவர்கள் அமிர்த சொருபமாகிருர்கள்." என்னும் உபநிடதக் கருத்து இங்கு நினைவு கூறத் தக்கதாகும்.

ஸ்ரீமத் பாகவதம்

(சுவாமி ஸதானந்தர்)

கடவுள் யக்ஞ மூர்த்தியாக யக்ஞ சொரூபியாக இருக்கிறார். ஸ்ரீ ராமன் வாழ்க்கையில் அவன் செயல்கள் அனைத்தும் உலக நன்மைக்கென்றே அமைந்தன. அவனது செயல்கள் அனைத்திலும் கடவுளின் மகிமையே, தெய்வ சம்பத்தே வெளிப்பட்டது. ஆகவே அவன் யக்ஞ ராமன் எனப்படுகிறான். ராமனின் எல்லாப் பெயர்களிலும் யக்ஞராமன் என்கிற பெயரே மிகவும் சிரேஷ்டமானது. தியாகமே கடவுளுக்கு மிக விருப்பமான செயல் ஆகும். கடவுள் தியாகராஜன், தியாகப் பிரம்மம் எனப்படுகிறார். தியாகமே மானுட வாழ்வின் சிகரம் ஆகும். அதன் பொருட்டே வேள்வித் தீ அல்லது ஆகுதியில் நெய் சொரிதல் கடவுளுக்கு விருப்பமான கர்மம் எனப்படுகிறது. நீ பிரபஞ்ச மயமான அனைத்தையும் தியாகம் பண்ணிக் கடவுள் மயம் ஆவாயாக. அன்பே கடவுள், அன்பே தியாகமாக வடிவெடுக்கிறது. அரசே, இதுவரை தியானிப்பதற்கு விஷயமாகவும் பிரபஞ்சமாக வடிவெடுத்துள்ள கோலத்தை, தன்மையை விளக்கவும் அப்பரம புருஷனின் விஸ்வருபத்தை விளக்கினேன். கடவுளே இப்பிரபஞ்சமாக ஆகியிருக்கிறார். அவருக்கு அன்னியமானது ஒன்றுமில்லை. எல்லாம் அவனே. கனவு காண்கிற ஜீவன் எப்படிக் கனவில் காண்கிற எல்லாப்பொருள்களையும் தானே சிருஷ்டி செய்து கொண்டிருக்கிறானே அதே போன்று விராட்புருஷன் தன்னைப் பலவாகப் பார்க்கிறான், உணர்கிறான், அனுபவிக்கிறான். விராட்புருஷன் ஜீவர்களின் தொகை, ஜீவன் தனி வியக்தி. ஆகவே யோகியர்கள் எப்புருஷன் யாவற்றுக்கும் மூலப் பொருளோ, யாரிடத்திலிருந்து இவையாவும் வந்துள்ளனவோ அவனைத் தியானிக்கிறார்கள். அப்பரம புருஷனை ஸ்தூல வடிவிலும், சூக்ஷ்ம வடிவிலும் காண்கிறார்கள். யார் இவ்வுலகின் சத்தாக, இப்பிரபஞ்சத்தின் அறிவாக, ஜீவர்களின் ஆனந்தமாக இருக்கிறாரோ அவரைத் தியானிக்கிறார்கள். யாரிடத்திலிருந்து இப்பிரபஞ்சமும் ஜீவகோடிகளும் தங்கள் இருப்பை, அறிவை, ஆனந்தத்தைப் பெற்று நிலைத்திருக்கின்றனவோ அப்பெரிய பொருளைப் பணிகிறார்கள், தியானிக்கிறார்கள்.

ஸ்கந்தம் 2 அத்தியாயம் 2

சுகதேவர் சொன்னார்: அரசே, இப்பிரபஞ்சம் பிரளய காலத்தில் ஒடுங்கிப்போய் விடுகிறது. நாம் தினம் தூங்கும்போதும் இப்பிரபஞ்சம் இல்லை. அதனால் தூக்கத்துக்கு நித்தியப் பிரளயம் என்று ஒரு பெயர் உண்டு. இங்ஙனம் இவ்வுலகம் முடிவில்லாது ஒடுங்கவும் தோன்றவும் செய்கின்றது. இதற்கு வியக்தம், அவ்யக்தம் என்று பெயர். அங்ஙனம் ஒரு பிரளய காலத்தில் பிரம்மதேவர் முன்னைய சிருஷ்டி முறையை, சிருஷ்டிக் கிரமத்தை மறந்துபோனார். ஆண்டவனின் அருளினாலும் தியானத்தின் மூலமாகவும் பிரம்மதேவருக்கு மறுபடியும் சிருஷ்டிக்கிரமத்தைப்பற்றிய ஞாபகம் வந்தது. பிறகு முன் சிருஷ்டிகளில் படைத்தது போன்றே யாவற்றையும் படைத்தார். பற்றற்ற மனதுதான் நன்கு தியானிக்க முடியும். பற்றற்ற தன்மைக்கு வைராக்கியம் என்று பெயர். கடவுளிடத்துக் காமியப் பிரார்த்தனை ஏதும் இல்லாது நிஷ்காமியமாக வழிபட்டு வந்தால் விவேகமும் வைராக்கியமும் வளரும். கர்ம பலனில் பற்று வைக்காமல் நமது கடமையை நிறைவேற்றவேண்டும். அப்பொழுதுதான் வைராக்கியம் மனதில் வளரும். ஓசை, ஒலி எல்லாம் ஆனாய் நீயே என்று கடவுள் விளக்கப்படுகிறார். நாதப் பிரம்மம் என்று கடவுளுக்குப் பெயர். பதார்த்தம்—பதமும் அதன் அர்த்தமும்—சொல்லும் அதன் பொருளும் என்று நாம் வழக்கமாகப் பேசுகிறோம். இப்பிரபஞ்சம் ஏதோ ஒரு சொல்லின்—ஓசையின் அர்த்தம், பொருள் ஆகும். பரம்பொருளே அவ் ஓசை ஆகிறார். பரம்பொருளைக் குறிக்கும் பல சொற்கள்—ஓசைகள் வேதத்தில் உள்ளன. சொற்களின் ஓசையாலும் அதன் பொருளாலும் வேதம்ஆத்மசாதகனின் மனதைப் பண்படுத்துகின்றது, அவனை ஆத்ம சிந்தனையில் நிலைக்கச் செய்கிறது. நல்ல ஆத்ம சாதகன் அப்பொருளில் மகிழ்ந்து, விகசித்து அதில் தோய்ந்து தன்னை

மறந்து இருக்கிருன். அதனுல் ஆத்மபோதம் வளர்கிறது. இது வேதாந்தம். ஆனுல் வேதத்தின் முற்பகுதியில் ஏராளமான மனோரஞ்சிதமான பதங்கள்-சுவர்க்கம்-அதன் போகங்கள், இன்பங்கள் —போன்ற கற்பனைப் பதங்களையும் வேதம் உண்டாக்கியிருக்கிறது. உலகப்பற்று முற்றும் போகாத ஆத்ம சாதகன் இக்கற்பனைப் பதங்களில் இன்புறுகிருன், அவைகளில் ஆவல் கொள்கிருன். உலகப் பற்றுள்ள மனிதன் என்னென்னவோ இன்பங்களை நாடித்திரிகிருன். உலகில் நாம் நினைப்பன எல்லாம் வந்து வாய்த்துவிடாது. பற்றுள்ளவன் ஆசை மிகுதியால் அவ்வின்பங்களை அனுபவிப்பதாகக் கனவில் காண்கிருன், உணர்கிருன். வாஸ்தவமான அனுபவம் இல்லாவிட்டாலும் கனவு அனுபவத்தில் அவன் மகிழ்கிருன். இவை நிலைத்த இன்பமாகாது. திருப்தியைத் தராது. பல பிறப்புக்களுக்குப் பின் வாழ்வின் முடிவில் ஜீவன் இவ்வுண்மைகளைத் தெரிந்துகொள்கிருன். அப்போது அவனை இவ்வுலக சுகங்கள், சுவர்க்க போகங்கள் மயக்கமாட்டா. ஞானி ஒருநாளும் அல்ப சுகங்களில், உலக இன்பங்களில் இன்பம் காணமாட்டான். அவன் மனம் என்றும் பெரிய நாட்டத்தில், கடவுளை அடைதலிலேயே குறியாய், பிடியாய் இருக்கும். அவன் உடலில், உலகில் வாழ்வான், உணவு உன்பான், மானுட செயல்கள் எல்லாம் நிகழும். அவனது உண்ணுதல், உறங்குதல் ஆகிய உலகக் கிருத்தியங்கள் எல்லாம் இவ்வுடலில் உயிர் நிலைத்திருந்துஇவ்வுடலைக் கடவுளைஅடைவதற்கென்று பயன்படுத்தவேண்டும். தர்மம், சீலம், தெய்வ சம்பத் இதன்மூலம் விளங்கவேண்டும் என்பதற்காகவே ஆகும். பற்றற்று அந்தக்கரணம் உலகக் கிருத்தியங்களைச் செய்கிறது. இன்பம் அனுபவிக்கவேண்டும் என்கிற ஆவலே கிடையாது. இவ்வுலக இன்பங்களின் அல்ப தன்மை, நிலையற்ற தன்மை அவர்களுக்குஅனுபவ பூர்வமாக, உணர்ச்சிபூர்வமாக விளங்கிவிட்டதே இதற்குக் காரணம் ஆகும். உனைமறந்தால் உயிர் தரியேன், அன்னே இனி உன்னையல்லால் யாரை நினைக்கேனே என்பது அவர்கள் பாங்கு. கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவன் ஆண்டவன் ஒருவனே. இந்த அகண்ட பூமியில் பச்சைக் கம்பளம் விரித்தாற் போன்ற புல்வெளிகள் உள்ளன. இதைவிடப் படுப்பதற்குப் பாய் எதற்கு? இரண்டு கரங்கள் உள்ளன. இதைவிடத் தலையணை எதற்கு? இரண்டு கரதலங்கள் உள்ளன. உண்பதற்கும் பருகுவதற்கும் இவைகளைவிடப் பாத்திரம், பண்டம், இலை எதற்கு? அழகான மரப்பட்டைகளும் ஓலைகளும் உள்ளனவே. இவைகளைவிட ஆடைகள் எதற்கு? இவ்வுலகின் நன்மைக்கென்றே, பிறர் நன்மைக்கென்றே தாவர வர்க்கங்கள் வாழ்கின்றன. அவைகள் ஜீவர்களுக்கு எவ்வளவு கனி, காய், தான்யம், இளநீர், வகைகளை உண்பதற்கு நல்குகின்றன. ஆ! மனிதனே, அவைகளைப் பிரார்த்தித்தால் அவைகள் உனக்கு வேண்டுவன யாவற்றையும் நல்குமே. ஆறுகளில் நீர் வற்றிப் போய்விட்டதா? மலைகளில் உள்ள குகை வாசல்களை யாராவது அடைத்துவிட்டார்களா? ஆ! என் பிரபு ஸ்ரீ ஹரி எவ்வளவு கருணை மிக்கவன் ! தாயின் கர்ப்பத்தில் வாசம் பண்ணும் போதே குழந்தைக்கு வேண்டிய பாலையும், பேரன்பையும் தாயின் உள்ளத்தில் பொங்கி எழச்செய்கிருனே! தன் பக்தர்களைத் தான் எப்போதும் காத்து வருவதாக அவன் வாக்களித்துள்ளானே ! இங்ஙனம் இருக்க பக்தர், ஞானியர் இவ்வுலக சம்பத்து, செல்வம் இவைகளை எதற்காக நாடப்போகிருர்கள்? உலக சம்பத்துக்கடவுளை மறக்கச்செய்யும். தீய பிரவிருத்திகளை உண்டாக்கும். மானுட நல்லிணக்கத்தை, அன்பைப் பாழ்படுத்தும். அது ஆத்ம சாதனத்துக்கு உதவாது. அவனை அக் ஞானக் குருடனுக்கிவிடும்.

தொண்டர் உள்ளத்தோ நீ வீற்றிருப்பது! சேயர் உள்ளமே கோகுலம், பக்தர்கள் உள்ளமே கோகுலம் என்று பக்தன் மன முருகிப் பாடுகிருன். (योगीहृन्निवासाय) என்று பகவானுக்குப் பெயர். பக்தர்களைக் குறித்து அவன் பித்துப் பிடித்தவனுக இருக்கிருன். பித்தன் என்பது பகவானுக்கு மிகவும் பிடித்தமான பெயர். அவன் அருளால் அன்றோ அவனை அறியவும் வழிபடவும் நமக்கு இயலுகிறது. அவன் தானே விரும்பி நம் உள்ளத்தில் எழுந்தருளியுள்ளான். நமது வாழ்க்கை ரதத்தை நடத்தும் பார்த்த சாரதி அவனே.

நான் அறியாது எனை ஆண்டு அருள் தந்து எனை விடாத ஹரிநாமம், பக்தியிலாத எனக்கும் இசைந்தெனைவிடாத ஹரிநாமம், சதாஎன் நாவில் நிலாவியே எனை விடாத ஹரிநாமம் என்று பக்தன் உருகிப் பாடுகிருன். அவன் இருப்பதால் அன்றோ இவ்வுலகமும் வாழ்வும் நமக்குப் பொருள் நிறைந்ததாக இருக்கிறது, வாழ்வே நடைபெறுகிறது. ஆகவே நம் பேர் அன்புக்குரிய ஆருயிர்ப் பொருள் ஸ்ரீ ஹரியே ஆவார். இவ்வுலகப் பொருள் ஒன்றும் அவன் இல்லை, அவன் இன்றி ஒருபொருளும் இல்லை, ஆண்டவன் ஒருவனே சத்-பொருள்-மெய்ப் பொருள். ஆ மானுடரே! வழிபடத் தக்கவர் ஸ்ரீ ஹரியே. அவரே ஜீவனின் கதி, புகலிடம், அடைக்கலம், அடையத் தகுந்தவர். அவரை அடைய அவரில் முற்றும் ஒன்றுபட்டுவிடப் பூரணமாய்,தீவிரமாய், உண்மையாய்,இடையருது முயலுவீராக. இல்லாவிட்டால் உம்மானுட வாழ்வு பாழானதாகும். அவரை அடைந்தாலன்றிப் பிறப்பு, இறப்பு ஓயாது. அக்ஞானம், அவித்தை, துன்ப துயரம் ஒழியாது. நரகத்தைச் சுற்றி ஓடிக்கொண்டிருக்கும் கொதிநீர் நதியாகிய வைதரணி நதியில் தவறி விழுந்த ஜீவன் போன்று இவ்வுலகில் வினைப்பயனை அனுபவிக்க மீண்டும் மீண்டும் பிறப்பு எடுத்து உழலவேண்டும். இவற்றிற்கெல்லாம் ஆசையே காரணம். ஆசையினுல் தூண்டப்பட்டு நல்லறிவை இழந்து எத்தகைய செயல்களை எல்லாம் அவன் செய்கிருன். பிறர் படும் துன்ப துயரங்களிலிருந்து பாடம் கற்காதவன் மானுட வடிவெடுத்த விலங்கே ஆவான். இவற்றைப் புரிந்து கொள்ள அவனுக்கு அறிவு இல்லை. வீணுன உலக ஆசைகளில் தன் காலத்தை, வாழ்நாளைப் பாழாக்கும் மனிதனை வேறு எப்படி தான் சொல்லுவது? ஓ மானுடரே! ஸ்ரீ ஹரியைப் பஜனம் பண்ணுங்கள். கலியுகத்தில் ஔஷதமாய் இன்றே கருணை செய்யும். எமபயத்தை நீக்கவல்லவர் எம் பெருமான். ஆச்சரிய மாயை எல்லாம் அகற்றுகின்ற நாமம். ஆகையால் இப்பொழுதே எண்ணி எண்ணி ஹரிபஜனம் பண்ணுங்கள். சிலர் அப்பரமப் பிரபுவை வடிவத்தில் தியானம் பண்ணுவார்கள். அந்த ஆதிபகவன் ஒரு இடத்தில் அடங்கியவராகவும் தங்கள் ஹிருதய கமலத்தில் அவர் எழுந்தருளியுள்ளவராகவும் பக்தன் தியானிக்கிருன். சதுர்புஜம் உடையவராய், சங்குசக்கரதாரியாய், கதையும் பத்மமும் மற்ற இரு கரங்களில் உடையவராய், பீதாம்பரதாரியாய், மந்தஹாசம், சுந்தரவதனம்,கருணை விலாசம் உள்ளவராய் பக்தன் அவரைத் தியானிக்கிருன். இக்கோலத்தில் அவர் காட்சியளிக்கிருர். பக்தன் மனதை அவரது அழகில், பெருமையில், அருளில் பறிகொடுத்து விடுகிருன். அவரது காதில் தொங்குகின்ற குண்டலங்களும் மார்பில் விளங்குகின்ற கௌஸ்துபமும், தலையில் தரித்துள்ள கிரீடமும் என் பிரபுவுக்கு அழகு செய்து பெருமையடைகின்றன. லக்ஷ்மிதேவி என் பிரபுவிடம் பேரன்பு செலுத்தி அவரது ஹிருதயத்தில் இடம் பெற்று விட்டாள். என்றும் வாடாத வனமாலை அவரது கழுத்தில் அணி செய்து தொங்கிக் கொண்டிருக்கிறது. பவளச் செவ்வாயில் குமிண் சிரிப்புடன் அக்கார்மேக வண்ணன் மனதை எல்லாம் கொள்ளை கொண்டு போகிருன். அவ்வுள்ளம் கவர்கள்வனை, ஜகன்மோஹனனை, மனமோஹனனை யார்தான் விட்டுப் பிரிந்திருக்க முடியும்! அவனை மறந்தால் உயிர்தரியேன். அவனது கேசங்களின் அழகும், புருவங்களின் கமல நயனங்களின் நளினமும் அருள் நோக்கும் பக்தனுல் மறக்க முடியாதவை. இங்ஙனம் என் பிரபுவைத் தியானித்து உலக பந்தங்களை ஆசைகளைத் துறக்க வேண்டும். அதனுல் தியானம் மேலும் ஆழ்ந்தது ஆகிறது.

யசோதையும் மற்ற கோபிகாஸ்திரீகளும் கண்ணனின் பேரழகில் சொக்கிப் போனுர்கள்; பேரன்பு கொண்டார்கள். அவனது அறிவுச் சேஷ்டைகளோ அதனினும் அவனிடம் அன்பை வளர்த்தன. அவனது அன்பு உள்ளமோ யாவற்றிலும் மிக்கதாய் அவர்களை ஆட்கொண்டது. கண்ணு கண்ணு என்று அவர்கள் மூச்சுவிட்டார்கள், கண்ணு கண்ணு என்று அவர்கள் ஹிருதயம் துடித்தது. அவனையே சதாசர்வகாலமும் நினைத்திருந்தார்கள். தியான முறை இப்படி வளர்வதற்காகத் தான் ஸ்தூல வடிவில் ஆரம்பித்துப் பாதாதி கேசம் வர்ணித்துள்ளார்கள். ராமனின் அழகை மிதிலாபுரி ஜனங்கள் ரசித்தவாறு என்னே! தோள்கண்

டார் தோளே கண்டார். நயனங்களை வேறு அங்கங்களைப் பார்க்க மீட்க முடியவில்லை. ஒவ்வொரு அங்கமும் அவ்வளவு அழகானவை. கடவுள் அழகில் பறிகொடுத்த மனதில் உலக ஆசைகள் இடம் பெறமாட்டா. அவைகள் தாமே உதிர்ந்துவிடுகின்றன. ஆசையற்ற மனது சாந்தி அடைகிறது. இந்தப் பக்தி நாளுக்குநாள் வளரவேண்டும், உண்மையான தாக ஆகவேண்டும். பேருணர்ச்சியாக, பெரு வெள்ளமாக, பேரன்பாக வடிவெடுக்கவேண்டும். அதுவரையில் அவன் தன் உலகக்கடமைகளை, சாதன முறைகளை முறையாகச் செய்து வரவேண்டும். இந்தத் தியான முறைகள், நித்திய அனுஷ்டானங்கள் அவனுக்குப் பெரிய உதவியாக, அமைகின்றன. முறையாக அனுஷ்டித்து வந்தால் அவைகள் முடிவில் சாதகனை ஆண்டவனிடம் கொண்டுவந்து சேர்த்துவிடுகின்றன. நல்ல நேரத்தில் சாகவேண்டும், புனிதமான இடத்தில் சாகவேண்டும் என்றெல்லாம் பக்தன் நினைக்காது அவனது அந்திய காலத்தில் பண்பட்ட அவன் மனது ஸ்திர-சுக ஆசனத்தில் அமர்ந்து தன் இந்திரியங்களை அடக்கிப் பிராணனை வசப்படுத்தி ஹரி ஸ்மரணையில் இருக்கிறான். புத்தி தெளிந்திருப்பதால் உலக ஆசைகள் எழுவதில்லை. மனம் நன்கு கட்டுப்பட்டுக் கிருஷ்ண ஸ்மரணையில் நிலைநிற்கிறது. இந்த ஸ்மரணை, உணர்வு திரண்டது ஆக ஆகப் பேருணர்ச்சியாக வடிவெடுக்க வடிவெடுக்கத் திரைகள் அகற்றப்பட்ட தீபம்போல் ஜீவாத்மா பிரகாசிக்கிறது. பரமாத்மாவிற்குப் பக்கத்தில் வருகிறது. இரண்டு வேறு வேறு தனித்தனிப் பொருளாகக் கருதி வந்தது இப்போது இல்லை. கங்கா தீர்த்தத்தைக் குடத்தில் மொண்டு பூஜைக்கு எடுத்து வருகிறோம். குடதீர்த்தம் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் எவ்வளவு சிறியதாக இருந்தாலும் கங்கா தீர்த்தமே. பரமாத்மாவுக்கு அன்னியமாக ஜீவாத்மா வாழவே, இருக்கவே முடியாது. கடலுக்கு அன்னியமாக அலை இருக்க முடியாது. அதன் தோற்றம், இருப்பு, ஒடுக்கம் அனைத்தும் கடலிலேயே. அதன் நாம ரூபம் வெறும் பெயரளவேயாகும். நாம் புத்தியில் கிரஹித்த உண்மைகள் படிப்படியாக நமக்கு அனுபவபூர்வமாக, பிரத்யக்ஷ தத்துவங்களாக ஆகிவிடுகின்றன. எந்த மனதைக்கொண்டு உலக இன்பங்களை அனுபவித்தோமோ அதே மனது சிறிது பரிசுத்தமாகி, தர்மத்தில் பற்றுக்கொண்டு உத்தமமான வாழ்வு வாழ்ந்தது. அது மேலும் பரிசுத்தமாகி கடவுளை நேருக்கு நேர் தரிசிக்கிறது. இந்த நிலையில் இதுவே ஆத்மா ஆகிவிடுகிறது. ஆத்மா இரண்டன்று. ஜீவாத்மா, பரமாத்மா என்பன வெறும் விவகாரச் சொற்கள். ஆத்மா ஒன்றே. இந்த அனுபவம் மனதைத் தெளிந்த புத்தியால் அடக்கவேண்டும், தெளிந்த புத்தி நமது வீரியம், தேஜஸ், ஓஜஸில் அடங்கிவிடுகிறது, வீரியம் விசுத்தாத்மாவில் ஒடுங்குகிறது, விசுத்தாத்மா பரமாத்மாவில் லயமாகிவிடுகிறது என்று ஒரு படிப்படியான சங்கிலித் தொடர்பான விளக்கமாகச்சொல்லப்படுகிறது. இந்த உயர்நிலையில் கர்மங்கள் இல்லை, கர்ம பலன் இல்லை. அவன் சத்-சித்-ஆனந்தத்தில் நிலைநிற்கிறான். சாந்தியில் நிலைநிற்கிறான்.

நான் ஆத்மா, நான் கடவுளிடமிருந்து தோன்றி வந்தவன் என்கிற அனுபூதியைப் பெற்றான பிறகு அந்த ஞானி காலத்தைக் கடந்தவனாகிறான். காலம் அனைத்தையும் எடுத்து விழுங்குகிறது. அத்தகைய காலத்தைக் கடந்தவனைத் தேவர்களோ, பஞ்ச பூதங்களோ, வேறு எதுவுமே ஒன்றும் செய்ய முடியாது. ஜீவனை ஜீவநிலையில் கட்டிப் பிடித்து வைத்திருந்த முக்குணம், பிரகிருதி, அகங்கார மமகார தத்துவம், மஹத்தத்துவம் ஆகிய தத்துவங்கள் ஞானியைப் பந்தப் படுத்த முடியாதவை ஆகிவிடுகின்றன. சிருஷ்டிக்கு மூலப் பொருள்களாகிய இவைகள் ஞானியை மீண்டும் சிருஷ்டிக்க, பிறவிப் பெருங்கடலில் தள்ள முடியாது. இது ஆத்மா அன்று, ஆத்மா அன்று என்று அனைத்தையும் தள்ளிவிட்டு, ஒதுக்கிவிட்டு வந்தவன் முடிவில் ஆத்மபோதம் பெற்று விட்டான். அவன் சரீரக் கூறுகள், சரீர போதத்தில் கட்டுப்படாமல், ஜீவபோதத்தையும் தாண்டிப் பரபோதம் பெற்றுச் சதா சர்வகாலமும் ஹரியைத் தியானிக்கிறான். இதைத் தவிர அவனுக்கு வேறு மனோவிருத்தி இல்லை, வேறு எந்த விதமான பற்றுதலும் இல்லை. ஜீவன் சரணடைவதற்கு, உரிய ஒரே பொருள் ஆண்டவனே.

சுவாமி பிரேமானந்தர் வாழ்வும் வாக்கும்

(பிரம்மச்சாரி சேகர்)

[399 ஆம் பக்கத் தொடர்ச்சி]

50. உன் வாழ்வின் இலட்சியம் யாண்டும் உன் கண்களுக்கு முன்னுல் இருக்கவேண்டும்; அதை அடைவதற்காக நீ அல்லும் பகலும் அரும்பாடுபட்டாக வேண்டும்.

51. அறியாமையின் காரணமாகத் தவறு செய்பவனைவிட நல்லது கெட்டதைப் பாகு படுத்தத் தெரிந்துகொண்டிருக்கும் ஒருவன் செய்யும் தவறு மோசமானதாகும். அவனிடம் நேர்மையில்லாததால் அவன் திருந்துவதற்கு வழி ஏற்படுவதில்லை. அவன் ஞானம் பெறு வது ஒரு போதும் சாத்தியப்படாது.

52. ஒவ்வொருவரும் தமக்குத் தோன்றியபடி யெல்லாம் நடந்துகொள்வது என்பது எப் போதுமே நல்லதன்று. எதிலும் ஒரு கட்டுப் பாடு இருக்கவேண்டும். இளஞ்செடியொன்றை ஆடு மாடுகளினின்று காப்பாற்றி வளர்ப்ப தற்கு எங்ஙனம் வேலி அமைக்கின்றோமோ அங்ஙனம் ஆரம்ப நிலையிலுள்ள சாதகர்கள் கெட்டுப் போகாதபடி தங்களைச் சுற்றி நற் பண்பு என்னும் வேலியிட்டுக் கொள்ள வேண்டும்.

53. காமக் குரோதங்கள் தலைகாட்டும் பொழுதெல்லாம் நீங்கள் திரிபுரஸம்ஹார மூர்த்தியாகிய சிவபெருமானின் புதல்வர்கள் என்பதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். அப்பொழுது அந்த உணர்ச்சிகளால் நீங்கள் பாதிக்கப்படமாட்டீர்கள்.

54. அகண்ட சமுத்திரத்தில் துள்ளி விளை யாடும் ஒரு மீனைப் போல் நீ இருக்கவேண்டும். சாக்கடையில் சோம்பித் திரியும் மீனுக நீ இருக்கலாகாது.

55. யாராவது ஒருவனிடம் ஒரு பொறுப்பை ஒப்படைத்துவிட்டாயானுல் அதில் நீ ஒரு பொழுதும் குறுக்கிடாதே. அவன் தானே எப்படிச் செய்து முடிக்கவேண்டும் என்று அறிந்துகொண்டு வெற்றியும் பெறுவான். அத னுல் அவன் தன்னம்பிக்கையில் உறுதி பெறு வான்.

56. துன்ப துயரங்கள் ஒருவனுக்குச் சிறந்த ஆசானுக விளங்குகின்றன. துன்பம் எப்படிப்பட்டது என்று அனுபவித்து அறிப வன்தான் மற்றவர்கள் துன்புறுவதைக் கண்டு இரக்கம் கொள்ளக்கூடும்.

57. பொதுநல ஸ்தாபனம் ஒன்று அமைக்க விரும்புவாயானுல் தனி நபர் யாரையும் முற் றிலும் சார்ந்திருப்பது ஆகாது. அந்த ஸ்தாப னம் உருவாவதற்குப் பொதுமக்கள் எல்லா ருடைய பங்கும் இருப்பது அவசியம்.

58. எச்செயலைச் செய்வதாயிருந்தாலும் முத லில் இறைவனைப் பிரார்த்தித்துக்கொள். செய்யும் தொழிலே தெய்வ வழிபாட்டுக்கு நிகர் எனக் கருதுவது மிகச் சிறந்தது.

59. குரு சகோதரர்களுக்கிடையில் அபிப் பிராய பேதமும் மனக்கசப்பும் இருப்பதாக நினைக்க வேண்டியதில்லை; அவை தாமாக மறைந்துவிடும். உன் மனதில் எந்தவிதமான குற்றமும் இல்லையானுல் அஞ்சுவதற்கு ஏது மில்லை; உண்மைக்கே யாண்டும் வெற்றி.

60. இல்லறத்தான் ஒருவன் நல்ல வருவாய் தரும் தொழில் ஒன்றை மேற்கொள்ளவேண் டும். பணம் தேடுவது நேர்மையான வழியில் இருக்கவேண்டும். நேர்மை பிறழ்வதே எல் லாத் துன்பங்களுக்கும் துரதிருஷ்டத்துக்கும் வேராகும்.

61. மற்றவர்களுடன் எப்போதும் ஒத்துப் போகத் தெரிந்துகொள். ஆயினும் உன் இலட்சியத்தினின்று இம்மியளவும் பிசகலா காது.

62. உரிய காலத்தில் தான் மரம் கனிகளைக் கொடுக்கும்; பொறுமையின்றி அவசரப் படுவ தால் ஒரு பயனும் ஏற்படப் போவதில்லை.

63. நீ இளையவனுயிருக்கிருய்; இயல்பா கவே உன் உள்ளத்தில் ஆசாபாசங்கள் எழத் தான் செய்யும். நீ அன்னை காளியின் புதல் வன் என்று இடையருது எண்ணினுல், காமக் குரோதங்கள் உன் மனதைவிட்டு அகன்று விடும். வீரமே உருவெடுத்தவனுகவும் அதே சமயம் சாந்தமும் அன்பும் உடையவனுகவும் நீ இரு.

64. மாதாகோவிலுக்குச் சென்ருலும் மசூ

திக்குச் சென்றாலும் ஆலயத்திற்குச் சென்றாலும் எங்கும் உன் இஷ்ட தேவதையின் திருவுருவையே கண்டு பழகு. எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருப்பவன் உன் அன்பிற்குரிய அதே இறைவன் தான்!

65. நீ படித்ததையெல்லாம் உன் நடைமுறை வாழ்க்கையில் செயலுக்குக் கொண்டுவரவேண்டும். வெறும் ஏட்டுப் படிப்பு ஒன்றுக்கும் உதவுவதில்லை.

66. வெறும் பாண்டித்தியத்தால் ஆவது என்ன? பண்டிதர்கள் சொல் ஜாலங்களில் விருப்பமுடையவர்களாய் உயர்ந்த தத்துவங்களைப் பேசிக்கொண்டு வானத்தில் உயரே சஞ்சரிக்கும் பருந்தைப் போன்றிருப்பார்கள். சந்தர்ப்பம் வாய்க்கும்போது காம காஞ்சனம் என்னும் கழிவுப்பொருள்மீதுதான் அவர்கள் கவனம் செல்லும்.

67. உன் உயிரே போவதாயிருந்தாலும் சரி உண்மையினின்று அணுவளவும் பிசகாதே. திரிகரணங்களிலும் வாய்மையைக் கடைப்பிடிக்காதவன் ஆன்ம சாதனத்தில் வெற்றியடையமாட்டான்.

68. நாகமஹாசயர் சத்தியத்தின் மைந்தராகவே திகழ்ந்தார். வியாபாரத்தில் நேர்மையைக் கடைப்பிடிக்க முடியாது என்பதெல்லாம் வெறும் பகட்டு. ஒரு கடைக்காரன் நாகமஹாசயரிடம் இரண்டணா மதிப்புள்ள பொருளை நாலணா பெற்றுக்கொண்டு கொடுத்தான். அருகிலிருந்த மனிதன் 'இந்த ஆள் இவ்வளவு ஏமாந்தவராய் இருக்கிறாரே?' என்று ஆச்சரியப்பட்டான். அவர் நாகமஹாசயர் என்று தெரிந்ததும் அந்தக் கடைக்காரன் ஏமாற்றியதைக் குறித்து அவனுடன் சண்டைக்குப் போய்விட்டான் அந்த மனிதன். மறுநாள் மீண்டும் அதே கடைக்கு நாகமஹாசயர் சென்றார். கடைக்காரன் ஐந்தணா மதிப்புள்ள பொருளை இரண்டணா விலைக்குக் கொடுக்க முன்வந்தான். நாகமஹாசயர் 'இந்தப்பொருள் இன்னும் அதிக விலை பெறும்; சரியானவிலையைக் கூறுங்கள்' என்றார்! மிகவும் மனம் நெகிழ்ந்துபோன கடைக்காரன் அவருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கினான்.

69. சத்தியத்தை முறை பிறழாமல் கடைப்பிடிப்பவனுக்கு எல்லா நற்குணங்களும் புலனடக்கமும் தாமே வந்து வாய்க்கின்றன.

70. ஒரு சமயம் ஒரு மனிதன் கடவுளின்பால் பிரேமை பக்தி பூணத் தீர்மானித்தான். ஒரு வணிகன் அச்சமயத்தில் ஒரு கூடையைச் சுமந்துகொண்டு அவ்வழியே வந்தான். பலர் அவன் பிரேமையை விற்றுக்கொண்டு வந்ததைப் பார்த்து அதை வாங்க முன் வந்தார்கள். அவன் கூறினான்: "யார் யாருக்கு எவ்வளவு பிரேமை தேவை என்று நான் தெரிந்துகொள்ளவேண்டும்." இவ்வாறு கூறிக்கொண்டே கூரிய கத்தி ஒன்றை எடுத்துக்கொண்டு, "உங்கள் தலையை என்னிடம் கொடுத்தீர்களானால் அதை நிறுத்துப் பார்த்து உங்களுக்கு வேண்டிய அளவு பிரேமையைத் தருவேன்" என்று அவ்வியாபாரி சொன்னான். பிரேமை பக்திக்குத் தரவேண்டிய விலை உங்கள் தலையே ஆகும். பரிபூரணத் தியாகம் தான் அதற்கான விலை.

71. கடவுளின் மைந்தர்களாகத் தோன்றிய மஹாபுருஷர்கள் அனைவரும் எல்லா இலட்சியங்களுக்கும் உறைவிடமாயிருந்தார்கள் என்றாலும், ஒவ்வொருவரும் ஒவ்வோர் இலட்சியத்தையே பெரிதும் போற்றி வந்தனர். ஸ்ரீ சைதன்யர் பேரன்பே உருவெடுத்தவராகவும், ஸ்ரீ சங்கரர் ஞானப்பிழம்பாகவும், பகவான் புத்தர் தியாகத்தின் சிகரமாகவும், ஸ்ரீ கிருஷ்ணர் பற்றற்ற கர்மத்தின் திருஉருவமாகவும் மிளிர்ந்தார்கள்.

72. தேங்கிக் கிடக்கும் நீர்தான் நாற்றமெடுக்கும்; யாண்டும் ஓடிக்கொண்டிருக்கும் நீரில் மாசுபடிவதில்லை. குறுகிய மதவெறி கூடாது. மற்றவர்களுடைய நம்பிக்கைக்கு ஒருபொழுதும் இடையூறு செய்யக் கூடாது.

73. கிரீஷ்சந்திரகோஷ் தம் உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் அர்ப்பணித்து முழுச் சரணாகதி அடைந்தார். உன்னிடம் ஒரு சிறிதளவாவது அகங்காரம் இருக்கும் வரை இத்தகைய சரணாகதி சாத்தியமில்லை. பெருங்காற்றில் அகப்பட்டுச் சாய்ந்த சருகு போல் வாழ்ந்திருக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்; எங்கும் எவ்விடத்திலும் மனச் சாந்தியுடன் வாழ வேண்டியது அவசியம்.

74. தென்றல் காற்று வீசத்தொடங்கும்

வரை ஒருவனுக்கு விசிறி தேவைப்படுகிறது. அதேபோன்று மெய்ஞ்ஞானம் கிடைக்கும் வரை சாஸ்திர ஆராய்ச்சியும் அவசியமாகிறது.

75. தன் கடமைகளை ஒதுக்கித் தள்ளும் இல்லறத்தானும், தன் உறுதிமொழியினின்று பிசகும் பிரம்மச்சாரியும், ஆசைகளால் அமைதியற்றுத் தவிக்கும் சந்நியாசியும் வெளிவேஷக்காரர்களாவார்கள்.

76. நிராசை என்னும் புயற்காற்றில் ஆசையென்னும் மரங்கள் வேரோடு சாய்ந்து போகட்டும். மரத்தின் உச்சியில் உள்ள கூட்டினின்று பறந்து செல்லும் பறவைகளைப் போன்று சுயநலம், பொறாமை, வெறுப்பு, அகங்காரம் எல்லாம் உன் இதயத்தினின்றும் பறந்தோடட்டும்! புயலுக்குப் பின் அமைதி ஏற்படுவதுபோன்று உன் உள்ளத்திலும் சாந்தி நிலவுவதாகுக.

77. தங்கத்தை உருக்குவதற்காகப் பொற்கொல்லன் கால்களால் துருத்தியை இயக்குகிறான், கைகளால் விசிறுகிறான், வாயினால் தீயை ஊதிவிடுகிறான். உருகிய தங்கத்தை அச்சில் வார்த்த பிறகுதான் நிச்சிந்தையாகப் புகை குடிக்கத் தொடங்குகிறான். அங்ஙனம் உடலாலும் மனத்தாலும் இறைவனின் பேரன்பையும் பெருங் கருணையையும் வேண்டிப் பாடுபடு.

78. பருவத்தில் பயிர் செய்துவிடவேண்டும்; உனக்கு வயதாகிவிட்டால் உன் கோபதாபங்களைக் கட்டுப்படுத்திக்கொள்ள மிகவும் சிரமப்படுவாய். கடுகு மூட்டைபோன்று சிதறிவிட்ட மனதை ஒன்றுபடுத்துவது மிகக் கடினம்.

79. வெள்ளைத் துணிக்கு எளிதில் சாயம் தோய்த்துவிடலாம்; ஏற்கனவே சாயம் ஏற்றப்பட்டுள்ள துணிக்கு வேறு நிறச் சாயம் ஏற்றுவது மிகக் கடினம். அங்ஙனம், உலக ஆசைகள் நிரம்பியுள்ள மனதைச் சுத்தம் செய்வது எளிதன்று. இளமையில் ஆசைகள் வலிவுற்றிருந்த போதிலும் மனமும் அதே அளவு உறுதிபெற்று விளங்குகிறது. ஆகையால்தான் இப்பொழுதே நீ உன் மனமாகிய ஆடையை இறைவனின் அன்பாகிய சாயத்தில் தோய்த்து எடுத்துக்கொள்ளவேண்டும்.

80. காவி உடை அணிந்துகொண்டு சாஸ்திரங்களைப் படிப்பதும் புனிதஸ்தலங்களுக்கு யாத்திரை செல்வதும்தான் ஒரு சந்நியாசி செய்யக் கூடியவைகளா? குறிப்பிட்ட ஓரிடத்தில் அமர்ந்துகொண்டு ஆத்ம சாதனங்கள் புரிந்துகொண்டிருப்பது அதைவிடச் சிறந்தது. கப்பலின் பாய்மரத்திலிருந்த பறவை கரையைத்தேடி நாற்றிசைகளிலும் பறந்து அலுத்துப்போனது போல் இல்லாமல் கப்பலிலேயே அமைதியுற்றிருக்க ஆத்ம சாதகன் கற்றுக்கொள்ள வேண்டும்.

81. 'செய் அல்லது செத்துமடி' என்பது உன் கோட்பாடாயிருக்கட்டும். ரோம் நகர் ஒரே நாளில் கட்டி முடிக்கப்பட்டதன்று. உயர்ந்த பண்பு ஒரே நாளில் உருவாகிவிடாது; உன் ஒவ்வொரு செயலும் எண்ணமும் உன்னை உருவாக்குகின்றன. எனவே நீ எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

82. நூலிழை ஒன்று பிரிந்திருந்தால் கூட அதை ஊசியில் கோக்க முடிவதில்லை. அங்ஙனம், உன் உள்ளத்தில் சிறிதளவு ஆசை இருந்தாலும் கூட நீ சமாதிநிலையை அடைவது சாத்தியமில்லை. ஆசையின்மையே முக்தி எனப்படுகிறது.

83. உன் குருவிடமிருந்து மந்த்ர தீக்ஷை பெற்றுக்கொண்டு ஜபத்திலும் தியானத்திலும் நீ முற்றிலும் ஆழ்ந்துவிடலாம். ஆயினும் மனிதகுல க்ஷேமத்திற்காகவும் அவர்களுக்கு உண்மையைப் போதிப்பதற்காகவும் நீ சாஸ்திர ஆராய்ச்சியின் மூலம் ஞானத்தைப் பெறுவது அவசியமாகிறது.

84. உலகம் சுயநலமே வடிவெடுத்துள்ளது என்று உனக்குத் தோன்றலாம்; அது உண்மையாகவும் இருக்கலாம். நீ சுயநலமற்றவனாயிருக்கிறாயா என்பதுதான் முக்கியமானது.

85. நீ பக்தனாக இருக்கலாம்; முட்டாளாக இருக்கக் கூடாது. உன் புத்தியைப் பயன்படுத்தி விசாரம் செய்து பார்; உண்மை என்று உணர்வதை ஏற்றுக்கொள்.

86. ஆண்டவனைச் சென்றடைவதற்கான மூன்று வழிமுறைகள் சேவை, வழிபாடு, பணிவு. இம்மூன்றும் கைவரப் பெற்றவன் மூவுலகங்களையும் வெற்றி கொள்கிறான்.

87. மற்றவர்களிடம் நீ காணும் குறைபாடு

கள் நாளடைவில் உனக்கே உரியவையாகின் றன. பாடம் கற்றுக்கொள்ளத்தான் நீ பிறந் திருக்கிறாய்; மற்றவர்களைப் பற்றிக் குறை கூறுவதற்கு நீ யார்?

88. உன் காலத்தையெல்லாம் கர்மத்தி லேயே செலவிட்டாயானால் வாழ்க்கை சார மற்றதாகிவிடும். விஷயம் தெரிந்தவர்களோடு சாஸ்திர ஆராய்ச்சி செய். ஞானம், பக்தி இவற்றைப் போலவே விசார புத்தியும் அவசி யம். பரிசுத்தமாக இரு; உண்மையையே யாண்டும் கடைப்பிடி.

89. 'இந்த இப்பிறவியிலேயே நான் பரி பூரணத்துவம் அடைவேன்; பற்றற்ற நிலையை அடைவேன்; ஜீவன் முக்தனாவேன். என்னால் ஆகக்கூடாதது என்ன இருக்கிறது' என்று மனப்பூர்வமாக நம்புவாயாக!

90. உன் குருவாகிய நன்னீர் ஊற்று உன் கைக்கெட்டும் தூரத்தில் இருக்கும்போது நீ ஏன் தண்ணீருக்காகக் கிணற்றை வெட்டிக் கொண்டிருக்கின்றாய்?

91. மனிதகுலத்துக்குச் சேவை செய்யவும் போதிக்கவும் நீ விரும்புகின்றாய். யார் உன் னைக் கவனிக்கப் போகிறார்கள்? குருடன் இன் னொரு குருடனுக்கு வழிகாட்ட முடியுமா? முத லில் ஞானத்தையும் முமுக்ஷுத்துவத்தையும் பெறுவாயாக. பரிசுத்தமான அன்பு உன் னிடம் இருக்குமானால் உனக்குச் சாந்தியும் ஆனந்தமும் எளிதில் கிட்டுகின்றன.

குரு சகோதரர்களின் கண்ணோட்டத்தில் சுவாமி பிரேமானந்தர்

சுவாமி நிகிலானந்தரின் அனுபவம் பின் வருமாறு: "*1915-16*ஆம் ஆண்டு குளிர்காலத் தில் சுவாமி பிரம்மானந்தரும் சுவாமி பிரேமா னந்தரும் டாக்கா நகருக்கு விஜயம் செய்தனர். அவர்களுடன் சுவாமி சங்கரானந்தர், சுவாமி மாதவானந்தர், விவேகானந்த சுவாமிகளின் இளைய சகோதரர் மகேந்திரநாத தத்தர் ஆகியோரும் சென்றனர். அப்பொழுது நான் டாக்கா கல்லூரியில் மூன்றாம் ஆண்டு மாணவ னாக இருந்தேன். நாங்கள் மாணவர்களாகச் சேர்ந்து கல்லூரி விடுதியின் உணவுக் கூடத் தில் ஒரு சொற்பொழிவு மேடையை அமைத் தோம். கல்லூரியின் சரித்திரப் பேராசிரியர் ஸ்ரீ அஸ்வினி குமார் முகர்ஜி தலைவராகப் பொறுப்பேற்றுக்கொண்டார். நான் பேச்சா ளர்கள் தங்கியிருந்த இடத்திற்குச் சென்று சுவாமி பிரேமானந்தரைச் சந்தித்தேன். அவர் சுவாமி பிரம்மானந்தர் அமர்ந்திருந்த மாடிக்கு என்னை அழைத்துச் சென்றார். அவருடைய பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து விட்டுச் சுவாமி பிரேமானந்தர் புறப்பட்டார். சுவாமி பிரம்மானந்தர், 'சகோதரனே, ஏன் கவலைப் படுகின்றாய்? எல்லாம் நல்லபடியாகவே நடக் கும்' என்று ஆசி கூறினார்.

அஸ்வினி பாபு சில நிமிடங்களுக்கொரு முறை தம் கடிகாரத்தைப் பார்த்துக்கொள்ளும் பழக்கத்தில் ஊறியிருந்தார். வகுப்பறையில் பாடம் நடத்தும்போதும் அவர் இந்தப் பழக் கத்தை விடமுடியாதவராயிருந்தார். முதன் முதலில் பேசியவர் சுவாமி பிரேமானந்தர். அவர் ஓரிரு நிமிடங்கள் தான் பேசியிருப்பார்; தலைவர் தம் கடிகாரத்தை எடுத்து அதை உற்றுப்பார்த்தார். அதைக் கவனித்த சுவாமி தாம் பேச்சை நிறுத்தவேண்டிய நேரம் வந்து விட்டதுபோலும் என்று நினைத்துக்கொண் டார். ஆனால் அவர் இப்போதுதான் பேச்சைத் தொடங்கியிருந்தார். தலைவராகிய அஸ்வினி பாபுவிடம் தாம் பேச்சை நிறுத்த வேண்டுமா என்று கேட்டார். அவர் மன்னிப் புக் கேட்டுக்கொண்டு சுவாமி தொடர்ந்து பேசலாம் என்று கூறினார். அவர் பேசி முடிப்பதற்குள் அஸ்வினி பாபு பலமுறை அவ்வாறு கடிகாரத்தை எடுத்துப் பார்த்துக் கொண்டார். கடைசியில் சுவாமி பிரேமா னந்தர் கூறினார்: 'ஐயா, மேனாட்டுப் பேச் சாளர்களைப் போன்று நான் மணிக்கணக்குப் பார்த்துப் பேசக்கூடியவன் அல்லேன். நான் கற்றறியாத சாதாரண மனிதன். உங்கள் ஆங்கில நடையலங்காரமெல்லாம் எனக்குத் தெரியாது. என் குருநாதர் தான் என் னுள்ளிருந்து பேசுகின்றார். நீங்கள் பொறு மையாக என் பேச்சைக்கேட்க முடியாததால் நான் இத்துடன் நிறுத்திக்கொள்கிறேன்.' தாம் பேசத்தொடங்கியபொழுது அவர் மிகவும் பரவசமுற்ற நிலையில் இருந்தார்; தலைவரின் செய்கையால் அவருடைய ஆர்வம் குறைந்து போய் உடல் நோயே ஏற்பட்டுவிட்டதுபோல் சோர்ந்து போனார். (தொடரும்)

பக்தியை வளர்ப்போம்

(ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 15—8—1984 அன்று விருதுநகரில் நிகழ்த்திய சொற்பொழிவு)

மனிதனை விட விலங்குகளும், பறவைகளும் நன்றாகச் சுகஜீவனம் செய்கின்றன. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். மனிதன் நோய் வாய்ப்படுவது போன்று பறவைகளும் விலங்குகளும் நோய்வாய்ப்படுவதில்லை. அவைகளுக்கு ஆஸ்பத்திரி இல்லை. டாக்டர் கிடையாது. இருந்தாலும் ஆனந்தமாக வாழ்கின்றன. ஆனால் சுகஜீவனம் பண்ணுவது மட்டும் உயிர்களின் குறிக்கோள் அன்று. நாம் மானுடராகப் பிறந்திருப்பது கடவுள் வழிபாட்டிற்காக என்று பரமஹம்சர் சொல்லுகின்றார். கடவுள் வழிபாடு மிகச் சுலபமானது.

இறைவனுடைய நாமத்தைச் சொல்வதற்கு ஜபயக்ஞம் என்பது பெயர். யாகம், வேள்வி வேட்பது இவைமிகக் கடினமானவை. ஆனால் அவை யாவினும் மிகச் சுலபமாயிருப்பது ஜபயக்ஞம் என்று சொல்லப்படுகின்ற இறைவனுடைய திருநாமத்தை ஓதுதல். யார் வேண்டுமானாலும் நாமத்தைஓதலாம். சிறுவர்கள், சிறுமியர்கள், முதியவர்கள், கற்றவர்கள், கல்லாதவர்கள் யார்வேண்டுமானாலும் ஓதலாம்.

பரமஹம்ஸர் சொல்லுகின்றார் — தாயை 'அம்மா' என்று அழைப்பது சிறு குழந்தைகள் அனைவருக்கும் பொதுவானது. அது போன்று கடவுளைக் கூவிஅழைப்பது மனிதர் எல்லார்க்கும் பொதுவானது. அவனுடைய நாமத்தை ஓதிக்கொண்டு வரவர ஆத்ம பரிபாகம் அடைகின்றோம். எந்தப் பாங்கிலே என்று கேட்கலாம். பெட்ரோல் இருந்தால் தான் நமது கார் ஓடுகின்றது. பெட்ரோல் இல்லாவிட்டால் கார் நின்றுவிடுகிறது. அதே போன்று ஆசையின் விளைவாக நாம் பிறவியைப் பெருக்கிக் கொண்டே போகின்றோம். ஆசைகள் எல்லாம் இறைவனுடைய திருநாமத்தை ஓத ஓதத் தாமாக அடிபட்டுப் போகின்றன. கடைசியாக இறைவனுடைய நாமத்தை ஓதி அந்த மயமாக ஆகின்ற போது, "ஸ்தித்வாऽஸ்யாம் அந்தகாலேऽபி ப்ரஹ்ம நிர்வாணம் ருச்சதி". அந்திம காலம் வர வர இறைவனுடைய நாமம் மட்டும் எஞ்சி நிற்கின்றது. கடைசியாக அந்த எண்ணத்தில் இருக்கின்றவர்கள் பரம்பொருளை அடைகின்றார்கள். இன்னொரு பிறவி எடுப்பது இல்லவே இல்லை. இது மிகச் சுலபமாக இருக்கின்றது. "எத்தனையோ உலக அலுவல்கள் இருக்கின்றன. அவற்றுக்கிடையில் கடவுளை நினைக்க நேரமில்லை'' என்று பலர் கூறுகின்றனர். அவர்கள் கூறுவது உண்மையன்று.

பரமஹம்சர் பகர்வதாவது:— தச்சனுடைய மனைவி அவல் வியாபாரம் பண்ணுவதைக் கண்டதில்லையா? அவள் மடியிலே குழந்தையை வைத்துக்கொண்டு பாலூட்டிக் கொண்டிருக்கிறாள். ஒருகையால் அவல் குத்துவதைத் தள்ளிக்கொண்டிருக்கிறாள். அதற்கிடையில் வாடிக்கைக்காரர்களோடு வரவு செலவு பண்ணுகிறாள். இத்தனை அலுவல்களுக்கிடையில் குத்துகின்ற உலக்கை, கையில் படாது பார்த்துக்கொள்கின்றாள். அதே போன்று உங்களுக்கு விருப்பம் இருக்குமாகில் உலகக் கிருத்தியங்களை நீங்கள் செய்து கொண்டிருக்கலாம். அதற்கிடையில் கடவுள் நாமத்தையும் ஓதிப் பழகலாம். ஓதுதலிலே பல படித்தரங்கள் இருக்கின்றன. வாய்விட்டு உரக்க இறைவன் நாமத்தைச் சொல்லுவது ஸ்தூல ஜபம் எனப்படும். கூட்டுப் பிரார்த்தனையில் நாமத்தை உரக்கச் சொல்லுதல் சிறந்த முறையாகிறது. தனிமையாகப் பிரார்த்தனை செய்யும்பொழுது நாமத்தை உரக்கச் சொல்ல வேண்டுமென்பதில்லை. அடங்கிய குரலில் உதடு மட்டும் அசைகின்ற பாங்கில் இறைவன் நாமத்தை ஜபித்து வரலாம். நாம ஜபம் செய்வது இது ஒரு முறையாகும். உதடும் அசையாமல் ஓசையும் வெளிவராமல் மனதுக்குள்ளேயே நாமத்தை ஜபிக்கலாம். இத்தகைய ஜபத்துக்குச் சக்தி மிக உண்டு. இது ஜபத்தில் தலைத்தரமானது. மனது மற்றவற்றை எல்லாம் மறந்துவிட்டு இறைவனுடைய நாமத்தைமட்டும் சிந்தித்துக்கொண்டு இருக்குமாகில் விரைவில் மனது பண்பாடு அடைகிறது. உலகக் கிருத்தியங்களைச் செய்துகொண்டிருப்பதற்கிடையில் மனதின் ஒரு பகுதி இறைவன் நாமத்தை உச்சரிப்பதில்

ஈடுபடலாம். மனதால் செய்கின்ற ஜபம் மற்றவர்களுக்குத் தெரியவேண்டும் என்பது அவசியமில்லை.

மற்றொரு நிகழ்ச்சி—நாரதர் கடவுள் பக்தி யில் தலை சிறந்தவராக இருக்கின்றார். ஓயாது இறைவனுடைய நாமத்தை ஓதுவது அவரு டைய போக்கு. அத்தகைய நாரதரிடம் மஹா விஷ்ணு ஒரு தடவை பகர்ந்தார். ''நாரதரே! என்னுடைய பரம பக்தன்—ஏழைக் குடியான வன் ஒரு கிராமத்தில் வாழ்ந்து வருகின்றான். அந்தக் கிராமத்தில் அவனைச்சென்று பார்த்து வாரும்." குக்கிராமத்தில் ஏழைக் குடியானவன் எப்படித் தன்னைவிடப் பெரிய பக்தனாக இருக்க முடியும் என்றுநாரதர்சந்தேகப்பட்டார்.குடியா னவன் வாழ்ந்த கிராமத்துக்கு நாரதர்போய்க் கவனித்துப் பார்த்தபோது, அவன்பூமியை உழு வதைத்தவிர இறைவனுடைய நாமம் எதையும் சொல்லவில்லை. மூன்று நாட்கள் கவனித்துப் பார்த்தார் நாரதர். படுக்கப் போகும்போது 'நாராயணா' என்று அக்குடியானவன் சொன்னான். படுக்கையைவிட்டு எழுந்திருந்தபோது 'நாரா யணா' என்று சொன்னான். மற்ற வேளைகளி லெல்லாம் உலகக் கிருத்தியங்களில் ஈடுபட்ட வனாக இருந்தான். நாரதர் திரும்பிவந்து மஹா விஷ்ணுவிடம் பகர்ந்ததாவது: "பிரபு, நான் நீங்கள் குறிப்பிட்ட குடியானவனைப் போய்ப் பார்த்தேன். அவன் நிலத்தில் வேலை செய்வ திலேயே கண்ணுங்கருத்துமாக இருந்தான். படுக்கையை விட்டு எழுந்திருக்கும் பொழுது, படுக்கைக்குப் போகும் பொழுது ஆகிய இரண்டு வேளைகளில் மட்டும் 'நாராயணா' என்று தங்கள் நாமத்தைக் கூறினான். மற்ற வேளைகளில் அவன் தங்களுடைய நாமத்தை உச்சரிக்கவில்லை. அக்குடியானவனை என்னை விடப்பெரிய பக்தன் என்று நீங்கள் கூறுவது தான் எனக்கு விளங்கவில்லை." பகவான் அப் பொழுது ஒன்றும் பேசவில்லை. மற்றொரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தார். ஒரு பெரிய கூட்டத்தில் நாரதர் கையில் பால் கிண் ணத்தைக் கொடுத்துத் தம்மைச் சுற்றி வரும் படி மஹாவிஷ்ணு சொன்னார். நாரதர் சுற்றி வந்து பால் கிண்ணத்தைக் கொண்டுவந்து வைத்தார். "தாங்கள் கூறியபடி தங்களைச் சுற்றி வந்து பாத்திரத்தைக் கொண்டுவந்து விட்டேன்" என்று நாரதர் கூறினார். ''பால் கிண்ணம் கையில் இருந்தபோது என்னைப் பற்றி எவ்வளவு நேரம் நினைத்தீர்கள்'' என்று மஹாவிஷ்ணு கேட்டார். ''பாலைப்பற்றிய எண் ணம்தான் இருந்தது. உங்களைப் பற்றி நினைக்க நேரமில்லை'' என்றார் நாரதர். "பெரிய குடும்ப பாரத்தைத் தூக்கி அந்த ஏழைக் குடியான வன் மீது வைத்திருக்கின்றேன். அதற்கிடை யில் காலையும் மாலையும் என்னை மறவாது அவன் நினைக்கின்றான். ஒரு கிண்ணம் பால் கைக்கு வந்தவுடன் என்னை நீர் மறந்துவிட் டீரே! நீர் என்ன பெரிய பக்தரா?" என்று கேட்டார். நாரதருக்குப் புத்தி வந்தது.

நாம் விரும்பினால் இறைவனுடைய நாமத்தை ஓதலாம். அலுவல்களுக்கிடையில் நாமத்தை ஓதுவது சுலபமாக வந்தமைகின்றது. ''நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவா யவே." இப்படி அலுவல்களையும் பார்த்துக் கொண்டு, நாமத்தையும் உச்சரித்து வருவோ மானால் மானுட ஜன்மத்தை நன்கு பயன் படுத்துகிறோம். எடுத்த மானுட ஜன்மத்தில் மனிதன் அடைகின்ற பேறுகள் அனைத்திலும் இறைவனுடைய அன்புக்குப் பாத்திரமாக ஆவது தலைசிறந்ததாக இருக்கின்றது. உற்றார் உறவினர்களை எல்லாம் விட்டுப் பிரிந்து போகின்றோம்; உலகுக்குத் தனியாக வந்தோம். தனியாக இதை விட்டுப்போகின்றோம். நாம் பெறுகின்ற அன்பு தான் நம்மைத் தொடர்ந்து வருகின்றது. இந்தக் கோட்பாட்டை ஞாப கத்தில் வைத்துக்கொண்டு நாள்தோறும் பக்தியைப் பெருக்கிவருவோமாக!

நீர்க்குமிழி போன்றது இப்பிரபஞ்ச வாழ்வு. எப்போது முடியுமோ நமக்குத் தெரியாது. ஆகையினால் கண்ணுங் கருத்துமாக நாள் தோறும் உலகக் கிருத்தியங்களுக்கிடையில் கடவுள் பக்தியை வளர்த்து வருவோமானால் அதுதான் பெரியபேறு ஆகின்றது. நம்மோடு வருவது நாம் செய்கின்ற தெய்வ பக்தி தான். ஆகையினால் அவனருளால் அவன் தாள் வணங்கி அவனை அடைவதற்காக மானுட ஜன்மத்தை நன்கு பயன்படுத்துவோமாக. உள்ளத்தின் உள்ளே குடிகொண்டிருக்கின்ற இறைவன் நம்மை நல் வழியில் தூண்டி வரு வாராக.

குறிப்புகள்

புயல்காற்று :

உரலுக்கு ஒருபுறம் இடி; மத்தளத்துக்கு இருபுறங்களும் இடி என்பது பழமொழி. இன்றைக்கு உலகுக்கோ, எல்லாப் புறங்களிலும் இடியாக இருக்கிறது. எங்குத் திரும்பினாலும் பொறிபுலன்களைப் பாழ்படுத்துகின்ற விஷயங்கள் நிறைந்திருக்கின்றன. மனிதனைச் சதா உலக இன்பத்தில் மூழ்கி இருக்கும்படி புறச் சூழ்நிலைகள் தூண்டி வருகின்றன. நிற்கினும், கிடப்பினும், நடக்கினும் மனிதனுடைய மனம் போகத்துக்கே இழுக்கப்படுசிறது.

டிரான்சிஸ்டர், டேப் ரிகார்டர், டெலிவிஷன், வீடியோ ஆகிய நவீனக் கருவிகள் மனிதனுடைய இந்திரியங்களை ஓய்வு ஒழிச்சலின்றி செயல் படும்படித் தூண்டி வருகின்றன. அணுகுண்டை அழிவுத்துறைக்குப் பயன்படுத்தத் திட்டமிடுவது போன்று இந்த நவீனக் கருவிகளை மனதைப் பாழ்படுத்தப் பயன்படுத்தி வருகிறார்கள். புயல்காற்று இயற்கையில் பெருஞ் சேதத்தை விளைவிப்பது போன்று உலகில் நிகழும் நிகழ்ச்சிகள் நாட்டு மக்களிடத்துப் பேரழிவை உண்டுபண்ணுகின்றன.

எப்பொழுதும் மனிதன் கண்ணின் மூலமாகவோ காதின் மூலமாகவோ சிற்றின்ப விஷயங்களுக்கு வசப்பட்டிருப்பதில் விருப்பம் கொண்டிருக்கின்றான். காம நுகர்ச்சியை வளர்க்கக்கூடிய உயர்ந்த கருத்தில்லாத பாடல்களை டிரான்சிஸ்டர் மூலமாகவும், டேப் ரிகார்டர் மூலமாகவும் கேட்டுக்கொண்டே இருக்க விரும்புகின்றான். வேலை செய்துகொண்டிருக்கும் பொழுதும், படுத்திருக்கும் பொழுதும் டிரான்சிஸ்டரைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு அதன் மூலம் வேண்டாத விஷயங்களைக் காதுகொடுத்துக் கேட்டுக் கொண்டிருக்கின்றான். பிரயாணத்தின் பொழுதும் மோட்டார் வண்டிகளில் டேப் ரிகார்டரும், வீடியோவும் மனிதனுடைய கண்ணுக்கும் காதுக்கும் ஓயாது வேலை கொடுத்துக் கொண்டிருக்கின்றன. இதன் விளைவாக மனிதனுடைய கண்ணும் காதும் விரைவில் கெட்டுப் போவது திண்ணம். அதற்கெல்லாம் மேலாக மனிதனுடைய மனம் படுகுழியில் வீழ்ந்து வருகின்றது. இதைச் சிந்திப்பவர்கள் இல்லை. தாற்காலிகமாகக் கிடைக்கும் சுகத்துக்கு அடிமைப்பட்ட மனிதன் உடலுக்கும் உள்ளத்துக்கும் வரும் நிரந்தரமான கேட்டைப் பற்றி அறியாதவனாக இருக்கின்றான்.

"இந்திரிய வய மயங்கி இறப்பதற்கே காரணமாய் அந்தரமே திரிந்து போய் அரு நரகில் வீழ்வேனைச் சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட" என்று மாணிக்கவாசகர் பிரார்த்தனை செய்கின்றார். இப்பிரார்த்தனையை இன்றைய சமுதாயத்தைக் குறித்து நாம் செய்ய வேண்டிய நிலையில் இருக்கின்றோம். பத்திரிகைகள் மூலமாகவும், திரைப்படக் காட்சிகள் மூலமாகவும் வெளிவரும் செய்திகளோ மிக மட்டமானவைகளாக இருக்கின்றன. அவைகளின் மூலமாக மக்களுடைய மனதில் காம விகாரமும் விலங்குத் தன்மையுமே ஓங்கி வருகின்றன. இவ்விதம் நவீனக் கருவிகளாகிய டிரான்சிஸ்டர், டேப் ரிகார்டர், டெலிவிஷன், வீடியோ, சினிமா, பத்திரிகை என்னும் புயல்காற்று மிகக் கோரமாக ஒருபுறம் வீசிக்கொண்டிருக்கின்றது.

மற்றொருபுறம் அரசியல் கட்சிகள் பதவி என்னும் மோகத்தில் மயங்கி மக்களுடைய மனதில் சண்டப்பிரசண்டங்கள் மூலமாகப் பெரிய குழப்பத்தை உண்டுபண்ணி ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டு அழிந்து போகும்படிச் செய்து வருகின்றன. இது மற்றொரு புயல்காற்று.

சமயத்தின் உயர் தத்துவத்தை அறிந்து கொள்ளாது, ஆள்திரட்டுவதையும், நாட்டை அடிமைப்படுத்துவதையும் உள்நோக்கமாகக் கொண்டு மதமாற்றம் செய்யும் செயலில் கிறித்தவர்களும், முகமதியர்களும் தீவிரமாக இறங்கி இருக்கின்றார்கள். மதத்தின் பெயரால் இத்தகைய புயற்காற்று மற்றொருபுறத்தில் தீவிரமாக அடித்துக்கொண்டிருக்கின்றது.

இப் புயல்காற்றுகளுக்கெல்லாம் தட்பிப் பிழைக்கவேண்டிய நிலையில் இன்றைக்கு மக்கள் இருக்கின்றார்கள். மக்கள் இந்நிலையை உணர்ந்து நல்லதை வளர்ப்பதிலும், அமைதியைக் காப்பதிலும் மனதைத் திருப்புவார்

களாக. கேட்டை எதிர்த்து வெற்றிகொள்ளும் உடல் உறுதியையும் மன உறுதியையும் பெற்றுத்திகழ்வார்களாக. உண்மை யாது என்பதை உணர்ந்து அறநெறியில் செல்வதற்கு மேலாம் வழியைக் காட்டித்தர வேண்டுமென்று மனப்பூர்வமாகத் தெய்வத்தினிடத்தில் தஞ்சம் புகுவார்களாக. எல்லாம்வல்ல இறைவன் மக்களுக்கு விரைவில் நல்வழி காட்டித் தருவாராக.

பக்திப்பயிர் வளர்க்கும் பனிமலைகள் :

தமிழகத்தில் தேயிலை, தேக்கு, உருளைக் கிழங்கு, உன்னதமான மலர்ச் செடிகள், மிளகு, மின் உற்பத்தி என்று பொருட் செல்வத்தை வாரி வழங்கும் இயற்கைச் செல்வங்கள் ஒருங்கே கொழிக்கும் இடம் நீலகிரிமலைத் தொடர்களாகும். வருடத்தின் பெரும்பகுதி பனி போர்த்து உறங்கும் இத்தொடர்களில் ஒரு பெருங்கவர்ச்சி உண்டு. நகர்ப்புறங்களிலும், கிராமப்பகுதிகளிலும் எங்கும் கானுதை ஆழ்ந்த அமைதியையும், தவம் புரிவதற்கு ஏற்ற தெய்வீகமான சூழலையும், கண்ணில் ஒற்றிக் கொள்ளலாம் போன்ற தூய்மையையும், கள்ளங்கபடமறியாத பெரும்பான்மையான மக்கள் பண்புடன் பழகும் நேர்த்தியையும், ஆர்வத்துடன் ஆன்மீகப் பணிகளில் ஈடுபடும் இளைய தலைமுறையினரையும் இங்கே காணும் பொழுது இறைவனது தோற்றத்தையே கண்ணாரக் கண்டது போல் உள்ளம் விம்மிதம் உறும்; நெஞ்சத்தில் நன்றியுணர்வு ஊற்றெடுக்கும்; உற்சாகத்தில் உடலும் துள்ளும். விவேகானந்தர் நிர்மாணிக்கத் துடித்த நவபாரதம் இதுவன்றோ என்று எண்ணி எண்ணி மகிழும் அதே வேளையில் நாடு எங்கிலும் இந்த நல்ல நிலை பரவி நனி சிறந்து விளங்குகின்ற நாள் வர இன்னும் எத்தனைக் காலம் ஆகுமோ என்னும் ஏக்கமும் நம் மனதை வாட்டும்.

நம் தபோவனத்தை நிறுவி ஆன்மீகம் என்னும் அருட்கனிகளைத் தமிழகமெங்கணும் தைலதாரை போல் இடைவிடாது கொடுத்து வரும் கற்பகத்தரு ஆரம்ப நாட்களில் இந்த நீலகிரி என்னும் புண்ணிய பூமியில் தான் வேர் ஊன்றிப் பின்னர் நிழல் தரும் விருட்சமாய் நெடிதுயர்ந்து வளர்ந்தது. அன்று அச்சான்றோர் ஒவ்வொரு ஹட்டிக்கும் அடிக்கடி விஜயம்செய்து பக்தி என்னும் நாற்றங்காலை நட்டு அதனை அரும்பாடுபட்டுப் பாதுகாத்து வந்தார்கள். அதன் பலனையே இன்று நாம் நேரிடையாகக் காணுகின்றோம்.

சென்ற ஆகஸ்டு மாதம் திருப்பராய்த்துறை தபோவனத்துச் சுவாமிகள் ஒருவர் தலைமையில் அன்பர்கள் குன்னூர், கோடேரி, தேனாடு, ஒசஹட்டி ஆகிய ஊர்களுக்கும் மற்றும் முதுமலைக் காடுகளுக்கும் சென்று வந்தனர். அது வாழ்க்கையில் மறக்க இயலாத ஆன்மீக அனுபவமாக அடி மனத்தில் ஆழப் பதிந்தது. முதல் நாள் பிற்பகல் கோடேரியில் சுவாமிகளுக்குப் பல வீடுகளில் பாத பூஜை செய்து வரவேற்றுப் பஜனை மண்டபத்துக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு ஸ்ரீ ராம பட்டாபிஷேகப் படத்துடன் பரமஹம்சர், அன்னையார், சுவாமிஜி மஹராஜ் ஆகிய மூவர் திருவுருவப் படங்களும் வைத்து நாள் தவறாமல் பஜனையும், பூஜையும் புரிந்து வருகின்றார்கள். எதிரே உள்ள விநாயகர் கோவிலும், இந்தப் பஜனை மண்டபமும் ஊருக்குத்தக்கவாறு அளவில் சிறியனவாக இருப்பினும் மிகவும்தூய்மையும், துப்புரவும் கொண்டு துலங்கின. ஸ்ரீ விவேகானந்த யுவ சேவாசங்கம், ஸ்ரீ சத்தியசாய் சமிதி ஆகிய இரண்டு அமைப்புக்கள் இங்குச் செயல்பட்டு வருகின்றன. ஊர் மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் இளம் வயதினரான ஆண்களும், பெண்களும், சிறுவர்களும் இந்த அமைப்புக்களின் வழியே ஆன்மீகத் தொண்டுகள் பலவும் புரிந்து வருகின்றனர். "Like a tree, we each must find a place to grow and branch out'' என்ற கோட்பாடு இங்கே செயல் முறைத் திட்டமாக அமைந்துள்ளது. மாணவ மணிகள் நாள்தோறும் காலை, மாலை இருவேளையும் ஒருங்கு கூடிப் பிரார்த்தனையும், பஜனையும் நடத்துகின்றனர். வாரந்தோறும் அருகாமையிலுள்ள ஊனமுற்றோர் பள்ளிக்கும், குன்னூர் மருத்துவமனைக்கும் விஜயம் செய்து அங்குள்ளோருடன் ஆடியும், பாடியும், பேசியும், மற்ற உதவிகள் புரிந்தும் அவர்களைக் களிப்பில் ஆழ்த்துகின்றனர். அருகாமையிலுள்ள ஹட்டிகளுக்கும், கோயில்களுக்கும் சென்று சுற்றுப் புறத்தைத் துப்புரவு செய்கின்றனர். உயர்ந்த நூல்களைப் படித்துத் தாங்கள் புரிந்துகொண்டவற்றையும், தங்கள் அனுபவங்களையும் ஒரு குழுவாக

அமர்ந்து பரிமாறிக்கொள்கின்றனர். பூஜைகள் முடிந்த பின் தக்கபடி பிரசாத விநியோகமும் செய்கின்றனர். ஆம்! விவேகானந்தரின் கனவு இங்கு நனவாக மாறிக் காட்சி தருகின்றது. இத்தகைய உன்னதமான சேவைகள் மற்ற ஊர்களுக்கும் பரவி இக்கால இளைஞர்களின் ஒற்றுமைக்கும், ஆக்கபூர்வமான பணிகளுக்கும், ஆன்மீக எழுச்சிக்கும் வழி வகுக்குமாறு எல்லாம் வல்ல எம்பெருமான் திருவுள்ளம் பற்றும் நாள் என்நாளோ?

சென்ற ஆண்டுகளில் சுவாமிகள் தமது ஊருக்கு வரவில்லையே என்று மிகவும் வருந்திய தேனடு மக்கள் இம்முறை மிகவும் பிடிவாதத்துடன் நின்று தங்கள் காரியத்தைச் சாதித்துக்கொண்டனர். அவர்களின் அன்பு மழையில் அன்பர்கள் நனைந்தனர். ஊர்மக்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் ஏதேனும் ஒரு வகையில் உறவினர்களாக இருந்தனர். அவர்கள் இதனை ஒரு குடும்ப நிகழ்ச்சியாகவே கருதி ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். படகர் பாஷையில் தங்கள் குலதெய்வத்தைக் குறித்துப் பாடல்கள் பாடிக் கோத்தராட்டம் என்னும் நடனம் ஆடினர். அது அம்மன் ஊர்வலம் வரும் விமரிசையை விளக்கும் நீண்ட பாடல். அம்மன் தன் அடியார்கள் புடைசூழ வலம் வருகையில் தங்கக் காசுகளை அள்ளி வீசுகின்றாளாம். இறைமை குடிகொண்டுள்ள இடத்தில் இயற்கையின் செழுமையும் சிறப்பாகவே துலங்கும் என்பதையே இவ்வாறு எளிமையுடன் விளக்குகின்றார்கள். பெண்கள் பாடிய பாடலில் 'ஓம்சக்தி ஓ அவ்வா' என விளித்து 'எங்களைப்பெற்ற அம்மன் சாரதையும் ஆவாள்' என்று உரிமை கொண்டாடினார்கள். 'ஓ பகவான்' என்று ஊர்முழுதும் சேர்ந்து பாடியபோது பக்திப் பரவசநிலை உண்டாயிற்று.

முன்னிரவு ஒசஹட்டியில் சத்யசாய் சமிதியின் பஜனை மண்டபத்தின் எதிரே ஊர்மக்கள் கூடி ஆன்மீகம் என்னும் பாயசத்தை ஆர்வத்துடன் அருந்தினார்கள். நீலகிரியில் ஆரவாரம் எதுவுமின்றிப் பொருளாதாரப் புரட்சியும் கல்விப் புரட்சியும் காந்தீயவழியில் நிகழ்ந்து வருகின்றன. தொழிலாளிகளுக்கு வருடம் முழுவதும் மலைத்தோட்டங்களிலும், வன விளைபொருள் தொழில்களிலும் வேலை இருந்துகொண்டே இருக்கும். இவர்களின் குழந்தைகள் பள்ளிப்பருத்திலேயே தங்கள் எதிர்காலத்தைக் குறித்துத் திட்டவட்ட முடிவுசெய்து அதை நோக்கி மிகவும் உறுதியாக முன்னேறுகின்றார்கள். பட்டங்கள் பல பெற்று மேல்நாடுகளில் பெரும் செல்வத்துடனும், செல்வாக்குடனும் திகழ்வோரைப் பெரும்பான்மையான குடும்பங்களில் காணலாம். இது நீலகிரியில் உள்ள எல்லா ஊர்களுக்கும் பொருந்தும். இருப்பினும் செல்வம் வந்ததால் பக்தியை அவர்கள் கைவிட்டுவிடவில்லை. இதுவே நீலகிரியில் நம் தபோவனத்துச் சான்றோர் நிகழ்த்திய அற்புதம் ஆகும்.

"பாலைவனத்தில் அல்லாடி, அலமந்து, அயர்ந்துபோய்ச் சோலைவனமாகிய நீலகிரிக்கு நாங்கள் வந்துள்ளோம். எங்கள் ஊர்களில் பேருந்துகளில் பயணம் செய்யும்போதும் சிறிதுநேரம் அமைதியாய் இருக்க இயலுவதில்லை. பொருளற்ற பாங்கில் பாடல்களையும், திரைப்படங்களையும் பேருந்துகளிலும் போட்டுக் காட்டிப் பொழுதைக் கொல்லுகின்றார்கள். பண்பை வளர்க்கும் பகுதி ஒன்றும் இவற்றில் இருப்பதில்லை. ஆனால் ஓயாத ஓலமும், இரைச்சலும் வழிநெடுக நம்மைத் துரத்துகின்றன. தேன் பிலிற்றும் மலர்களை வண்டுகள் நாடிச் சூழ்வதுபோல் நாங்கள் உங்களை வந்தடைந்தோம்" என்று குறிப்பிட்டபோது ஊர்மக்கள் கரவொலி எழுப்பித் தங்கள் களிப்பை வெளிப்படுத்தினார்கள்.

மறுநாள் குன்னூரில் ஒருநாள் அந்தர்யோகம் நிகழ்ந்தது. அதில் சுமார் இருநூறு பேர்கள் கலந்துகொண்டனர். யோகம், பக்தி, ஞானம் ஆகியன பற்றிக் காலையும், மாலையும் விரிவுரைகள் நிகழ்த்தப் பெற்றன. அவற்றில் உபநிடதக் கருத்துக்கள், கீதா சுலோகங்கள், திருவாசகம், தாயுமானர் பாடல்கள் ஆகியன வழக்கம்போல் ஆங்காங்கே விரவிக்கிடந்தன. நாமஜபம், தியானம், மௌனம் ஆகியவற்றைத் தமது இயல்பான பழக்கங்களாகக் கொண்டுள்ள நீலகிரி மக்கள் அன்று தபோவனம் அன்பர்களும் கண்டு பரவசமுறுமாறு இவற்றில் ஆழ்ந்து ஈடுபட்டனர். ஸத்ஸம்பாஷணையில் உண்மைகளைத் தெரிந்துகொண்டு உள்ளத்

தெளிவு பெறவேண்டும் என்ற உயரிய நோக்கத்துடனே உற்சாகமாக வினைக்கள் தொடுத்துத் தங்கள் ஐயங்களைத் தீர்த்துக் கொண்டார்கள். வருடத்திற்கு மூன்றுமுறை யாவது தங்கள் ஊரில் அந்தர்யோகம் நடத்தியே தீரவேண்டும் என்று அன்பு வேண்டுகோள் விடுத்தார்கள்.

அன்று மாலை குன்னூர் விநாயகப்பெருமான் திருக்கோவிலில் ஒரு சிறப்பு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. குழந்தைகளுக்குத் தொடர்ச்சியாக 108 பாடல் வகுப்புகள் நடத்திய அன்பர் ஒருவர் அன்று கௌரவிக்கப்பட்டார். இப்பணியில் தொடர்ந்து ஊக்கத்துடன் ஈடுபடப் போவதாக அவர் நன்றியுரையில் தெரிவித்தபோது நமது மனதிற்குத் தெம்பாகவும், பெருமிதமாகவும் இருந்தது. ஆலய வழிபாட்டில் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுங்குமுறைகளும், அவற்றினால் ஏற்படும் நற்பயன்களும் குறித்து அன்று அருளுரை வழங்கப்பட்டது.

நீலகிரி ஊர்களுக்கென்று பொதுவாக அமைந்துள்ள சில விசேஷப் பண்புகள் அங்குச் செல்வோரின் கவனத்தை ஈர்ப்பது திண்ணம். இயற்கையன்னை வஞ்சனையில்லாமல் வாரிவழங்குதல் போலவே அங்குப் பரம்பரையாய் வசித்துவரும் மக்களும் பரந்த மனப்பான்மையும், எளிமையான பழக்க வழக்கங்களும் கொண்டுள்ளனர். எந்த ஊரிலும் கூட்டத்திற்கு ஏற்பாடு என்ற பெயரில் பணத்தை அலங்காரங்கள் போன்றவற்றில் வீணடிக்கும் ஆடம்பரமான செயல்கள் எதுவும் நிகழ்வதில்லை. ஆயின் இதய பூர்வமான ஆர்வம் அணைகடந்த வெள்ளம்போல் பொங்கித் ததும்புவதைக் கண்கூடாகக் காணலாம். ஒவ்வொரு ஊரிலும் பஜனை, பிரார்த்தனை, பூஜை ஆகியவற்றைக் கூட்டாகப் பொது இடங்களில் ஒருங்குகூடி ஒழுங்காகச் செய்கின்றார்கள். அதில் பரபரப்பு ஏதும் இல்லை. ஆனால் மன நிறைவை அளிக்கும் முழுமையான ஈடுபாடு உள்ளது. குழந்தைகள், பெண்கள், சிறுவர், சிறுமியர், ஆண்கள் என்ற அனைவரும் ஒருங்குகூடி நிகழ்ச்சிகள் நிறைவு எய்தும்வரை பொறுமையாகவும், அமைதியாகவும் இருக்கின்றனர். வயது வித்தியாசம் பாராமல், கூச்சம் என்பது இல்லாமல் அனைவரும் கரதாளமிட்டு உரக்கக்குரல் எழுப்பி இறைவனின் திவ்ய நாமாக்களைச் சொல்லிப் பஜனைப் பாடல்களை இசைக்கின்றனர். அருளுரைகளை ஆர்வத்துடன் செவிமடுக்கின்றனர். குழந்தைகள் எவ்வித இடைஞ்சலையும் ஏற்படுத்துவதில்லை. அவர்களுடைய பஜனைப் பாடல்களின் கீதம் நெஞ்சையும், உள்ளுறையும் ஆன்மாவையும் ஒருங்கே குளிர்விக்கும். இரவு எவ்வளவு நாழிகை ஆனாலும் நிகழ்ச்சிகளை நிறைவு செய்த பின்னரே தத்தம் இல்லங்களுக்கு ஏகுதல் அவர்கள் பண்பு. வரவேற்புரை, சிறப்புரை, தலைமையுரை, நன்றியுரை என்றெல்லாம் பொழுதை வீண்விரயம் செய்வதில்லை. உடன் வருகின்ற அன்பர் படக மொழியில் ஊர் மக்களுக்குப் பயன்படும் விளக்கங்களை அளிக்கின்றார். கடவுள் பக்தி என்பதை ஒரு கடமையாகச் செய்யாமல் உண்பது, உறங்குவது, உழைப்பது போல் இதுவும் தங்கள் வாழ்வின் ஒரு பகுதி என்றவாறு அவர்கள் ஒழுகிவருகின்றார்கள்.

மூன்றாம் நாள் அன்று அன்பர்கள் முதுமலை வனவிலங்குகள் சரணாலயத்திற்குச் சென்றார்கள். இந்தச் சரணாலயத்தில் பரமனின் பிரதாபங்கள் அனைத்தையும் விரிவாகக் கண்டு அறியலாம். இங்கு உறையும் பல்வேறு வகையான விருட்சங்களும், விலங்குகளும் பரம்பொருளின் இயல்பான சொரூபங்களே. மனிதன் வரைமுறையின்றிக் காடுகளை அழிப்பதால் தங்கள் வாசஸ்தலங்களை இழக்கும் பிராணிகள் மனிதப் பிறப்பெடுத்து நகரங்களில் விலங்கு இயல்புகளோடு நடமாடுகின்றன. இந்தத் தவிர்க்க முடியாத விளைவு மனித நாகரிகத்தையும், பண்பாட்டையும் அடியோடு அழித்தொழிப்பதற்கு முன்னால், இதனைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளை நாம் மேற்கொள்ளவேண்டும். மிருகங்கள் நாட்டில் புகுந்து வேட்டையாடினால் அவற்றை அடக்கியோ, கொன்றொழித்தோ சமுதாயத்தை நாம் பாதுகாக்கவேண்டும். ஆனால் அவைகளுக்கென்று இறைவனால் சிருஷ்டிக்கப்பட்டுள்ள காடுகளில் அவற்றின் சுபாவப்படி அவை இயங்கும்போது மனிதன் அங்குச் சென்று காடுகளை அழித்தும், உயிர்களை வதைத்தும்

இயற்கையின் சமநிலையைப் பாழ்படுத்துவது மன்னிக்க இயலாத பெரும்பாபமாகும். காடுகள் அழிந்தால் பருவமழை தவறும். விஷக் கிருமிகள் நகரங்களில் பரவலாம். சுவாசிப்பதற்குத் தூயகாற்றும் நாளடைவில் இல்லாமற் போகும். குடிநீர்ப் பஞ்சத்தின் கொடுமையும் அதிகரிக்கும். அகில், சந்தனம், தேக்குபோன்ற அருமையான மரங்கள் கிடைத்தற்கரியனவாகிப் போகும். எனவே வனங்களை வளர்ப்பதால் வளமான வாழ்க்கையை நாம் பெறலாம். நீர், காற்று, வனவளம் போன்ற இயற்கைச் செல்வங்களை நாம் அசுத்தப்படுத்தாமல் உபயோகிக்க வேண்டும். பின்பு, உபயோகத்திலிருக்கும்பொழுது, அவற்றின் அளவும் குறையாமல் இருக்குமாறு கருத்தோடு கவனித்து வருதல் நம் கடமையாகும்.

அன்று முதுமலையில் வாகனத்தில் சிலரும், யானைகள் மீது ஏறி அமர்ந்து சிலரும் வனத்தைச் சிறிது நேரம் சுற்றிப் பார்த்தனர். யானைப்பாகர்களுக்குக் கட்டுப்பட்ட யானைகள் அன்பர்களைச் சுமந்து ஆற்றிலும், மேட்டிலும் ஏறி இறங்கின. அவற்றின்மீது அமர்ந்து, பழகாத காட்டானைகளின கூட்டத்தை அன்பர்கள காணலுற்றனர். பழக்கப்பட்ட யானைகள் சாட்சி மாததிரமாய்த் தங்கள் போக்கில் புல் மேய்ந்துகொண்டு தங்கள்மீது அமர்ந்திருப்பவர்களைச் சுமந்து சென்றன. இறைவனின் சிருஷ்டி விசித்திரத்தை என்னவென்று சொல்வது! ஆற்றின் இறங்குதுறையில் அவற்றின் எடையையும், முதுகின் மீது பெரும் பாரத்தையும் சுமந்தபடி மிகவும் பதவிசாகவும் செங்குத்தான ஏற்றங்களில் நிதானம் இம்மியும் பிசகாமலும் அவை காலெடுத்து வைத்தன. ஆங்காங்கே மான்கள் கூட்டங்கூட்டமாய்த் துள்ளியோடின. அழகான விழிகளினால் மருண்ட பார்வை பார்த்துத் தங்கள் உடலின் புள்ளிகள் பளீரிடும்படி மாயமாய் ஓடி மறைந்தன. இளம் மான் கன்றுகள் அருகிலேயே நின்று உற்று நோக்கின. நெடிதுயர்ந்த மரங்களில் அளவில் பெரிய அணில்கள் பூனைகளைப் போன்ற உடல்களுடன் கிளைக்குக் கிளை தாவிச் சென்றன. சிங்கவால் குரங்குகள் சப்தமின்றி ஆங்காங்கே உலாவின. மயில்களும், பலவகை வண்ணங்களில் பலவகைப் பறவைகளும் எங்கும் பறந்து திரிந்தன. காட்டெருமைகள்தாம் அன்று காணக் கிடைக்கவில்லை. எங்கும் ஆழ்ந்த அமைதி கோலோச்சியது.மாலைநேரத்து ஆதவனின் ஒளிக்கதிர்களை மேற்றிசையில் மேகங்கள் சூழ்ந்து மறைத்தன. வானத்துக் கங்கை நம்மை வாழ்விக்கவென்று வான் மழையாய்ப் பொழியலானாள். அக்கணத்தில் ஜீவர்கள் தத்தம் எண்ணங்கள் அழிந்து பரபோத நினைவில் ஆழ்ந்தன. அந்தத் தனிமையில் பிரார்த்தனை, ஜபம் முதலியவற்றுக்கும் மேலான ஆனந்த நிலையை அனுபவித்துத் தங்களை மறந்த நிலையில் தெய்வ சாந்நித்தியத்தின் அணுக்கத்தை அடைந்தனர்.

செயற்கையான வசதிகள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகரிக்கின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு இயற்கைச் சூழலின்மீது தணியாத தாகம் ஏற்படுவது மேலைநாடுகள் எல்லாவற்றிலும் மிகவும் சகஜமாகும். வாரந்தோறும் கடைசி இரணடு நாட்களும் மேற்கு நாட்டு மக்கள் கடற்கரை, மலையடிவாரம், நதிப்படுகை, வனக்காப்பகங்கள் என்று இயற்கையன்னையின் சொருபங்களையே நாடித்தேடி ஓடித் தாகந் தீர்கின்றனர். இதனை நினைவிற்கொண்டாவது இயற்கையன்னை நமக்குக் கரவாது வழங்கியிருக்கும் வற்றாத செல்வங்களை நாம் வகையோடும், முறையோடும் பேணிப் பாது காத்து வருவோமாக.

பாரத நாட்டையும், குறிப்பாகத் தமிழ் நாட்டையும் சமீப காலமாகப் பாழ்படுத்தி வரும் புயல் காற்றுப்பற்றிய குறிப்பு இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் உள்ளது. கூனியும், சகுனியும் தங்களைஆதரித்த கைகேயிக்கும், துரியோதனனுக்கும் நல்லது செய்வதுபோலப் போக்குக் காட்டிக் கடைசியில் மீளமுடியாத படுகுழியில் வீழ்த்தி விட்டார்கள். அதுபோன்று இந்தப் புயல் காற்றும் வெளிப்பகட்டுக் காட்டிச் சமூகத்தைச் சீரழித்து வருகிறது.இந்தப் புயல் காற்றில் பலவகைகள் உண்டு. ஆடம்பர வாழ்க்கை என்பது அவற்றில் ஒன்று. " அதிகமாகச்சம்பாதிக்க வேண்டும்; அதிகமாகச் செலவழிக்கவேண்டும்; எப்படி வேண்டுமானாலும் சம்பாதிக்கலாம்; எப்படியெல்லாமோ செலவு செய்யலாம்; அதுதான் இன்பம்; அதுதான் பிறவி எடுத்ததன்பயன் " என்றெல்லாம் என்

ணுவதும், செயல்படுவதுமே இக்காலத்தின் விதியாக இருக்கின்றது. ஜப்பான் முதலிய நாடுகளில் அரும்பாடுபட்டு உழைக்கிறார்கள்; பெரும் செல்வத்தைத் திரட்டுகிறார்கள்; அதை மிகவும் ஆடம்பரமான பொழுதுபோக்குகளில் ஈடுபடுத்தி உலக இன்பங்களை அனுபவிக்கிறார்கள். நம் நாட்டு இளைஞர்களும் இதையெல்லாம் பார்த்தும், கேட்டும் இந்தப் போக்கிலேயே வாழ்நாளைக் கழித்துவிடத் துணிகிறார்கள். ஆனால் உண்மையில் எண்ணிப்பார்த்தால் இத்தகைய வாழ்க்கையில் வசதிகள் சற்று அதிகம் என்பதைத் தவிர விலங்குகள் வாழுகின்ற வாழ்க்கைக்கும், இதற்கும் அதிக வேறுபாடுகள் இல்லை. எனவே மிருகங்களுக்கு இல்லாத சிந்திக்கும் தகுதியைப் பெற்றுள்ள நாம், நமது சிந்தனை சக்தியினால் இப்பிரபஞ்சத்தையும், இதனைப்படைத்தவனையும் புரிந்துகொள்ளும் வகையில் நமது வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முன்வரவேண்டும்.

இந்த வகையில் நீலகிரி மக்கள் சிறந்த அதிருஷ்டசாலிகள் என்றே சொல்லவேண்டும். அவர்கள் வசிக்கும் பகுதிகளில் செயற்கைத் தன்மைகள் மிகவும் குறைவு; இயற்கை வசதிகளோ மிகவும் அதிகம். எனவே அவர்கள் யாண்டும் கள்ளங்கபடு அறியாதவர்களாக இயற்கையன்னையின் செல்வப் புதல்வர்களாக இருந்து வருகிறார்கள். அரசியல், இனக்கலவரம், மதப்பூசல்கள், ஜாதிப் பிரச்னைகள், ஆடம்பரமான செலவுகள் போன்ற மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட தீமைகள் தம்மைத் தாக்காதவாறு கவனமாகப் பாதுகாத்துக்கொள்கிறார்கள். இருப்பினும் பரிசுச் சீட்டுக்களை வாங்குதல், குடலையும், சுவாசகோசத்தையும் அரிக்கும் புகையிலையைப் பலவகைகளில் உபயோகித்தல், லாகிரி வஸ்துக்களைக் குடித்தல், இறைச்சி முதலியவற்றை மீதூண் உண்ணல் போன்றவற்றிற்கு அடிமைப்பட்டிருப்பவர்கள் அவைகளிலிருந்து விடுதலை பெற்று விடுவார்களேயானால் அவர்களைப் பார்க்கிலும் கொடுத்து வைத்தவர்கள் வேறு யாரையும் நாம் காண இயலாது. இயற்கையோடு இயைந்த வாழ்க்கையில் இத்தகைய செயற்கை முறைகள் அறிவையும், உடலையும், ஒழுக்கத்தையும் ஒவ்வொன்றாகப் பாழ்படுத்துவனவாகும். எனவே இவற்றிலிருந்து விடுபடுமளவுக்கு நீலகிரி போன்ற தூய்மையான பகுதிகளில் பரம்பரையாய் வாழ்வதற்கு மனிதன் உரிமை பெற்றவன் ஆகிறான். தபோவனத்துடன் தொடர்பு கொண்ட பிறகு தாம் அவ்வாறு விடுதலை பெற்றதையும், இன்று தமக்கு உடலும், உள்ளமும் தூய்மையாய் இருப்பதால் அந்தரங்கத்தில் ஆன்மீக இன்பம் பெருகுவதையும் ஓர் அன்பர் உணர்ச்சியுடன் விவரித்தார்.

நீலகிரி நிகழ்ச்சிகளை நிறைவு செய்தபோது இந்தியாவின் எதிர்காலத்தைக்குறித்து நல்லதொரு நம்பிக்கையும், பூரண மனநிறைவும் உண்டாயின. நல்லொழுக்கமும், பரவித்தையில் நாட்டமும், ஊர் ஒற்றுமையும், உள்ளத்தில் உற்சாகமும், உழைப்பில் ஆர்வமும் இல்லாமையே இன்று நாட்டில் காணப்படும் எல்லாப் பிரச்னைகளுக்கும் முழுமுதற் காரணங்களாகும். ஆன்றோர்களின் தவப்பயனால் நீலகிரி மக்கள் பெறற்கரிய இப்பேறுகளைக் குறைவறப் பெற்றுத் திகழ்கிறார்கள். இச்செல்வங்கள் மேன்மேலும் ஓங்குவதோடு மற்ற ஊர்களுக்கும் பரவி விவேகானந்தரின் எண்ணங்களைச் செயற்படுத்தும் ஆண்மையும், தீரமும் மிக்க இளைஞர்களையும் ஆற்றலும், ஆர்வமும் மிக்க யுவதிகளையும் உருவாக்குவனவாகுக. அவர்களின் ஓயாத உழைப்பினால் உன்னதம் மிக்க புதிய பாரதம் விழிப்புற்று எழுவதாகுக!

செய்திகள்

நிகழ்பவை:

3-10-84 புதன் கிழமையன்று சரஸ்வதிபூஜையாகும்; அன்று பகல் பன்னிரண்டு மணி நேரம் ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்கள் அகண்டநாம பஜனை செய்வார்கள். அன்று இரவு சுமார் 7 மணிக்கு ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்கள் குழுக்களாகச் சேர்ந்து சரஸ்வதிபூஜையைச் சிறப்பாகக் கொண்டாடுவார்கள்.

ஸ்ரீ சாரதா ஸமிதி, 1c. மடம் சந்து

லக்ஷ்மீ நாராயணபுரம் அக்ரஹாரம், மதுரை-625 001.

29-9-84, 30-9-84 ஆம் தேதிகளில் சக்தி வழிபாடு

அன்புடையீர்,

செப்டம்பர் மாதம் 29, 30 ஆகிய இரு தினங்களில் மேற்கண்ட விலாசத்தில் உள்ள ஸ்ரீ சாரதா ஸமிதியில் கீழ்க்கண்ட முறைப்படி சக்தி பூஜை அந்தர்யோகம் நடைபெறும். தாய்மார்கள் மட்டும் இரண்டு நாள் இங்கு தங்கியிருந்து கலந்துகொள்ளலாம். உணவுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 7-00 வீதம் செலுத்தவேண்டும். கலந்துகொள்ள விரும்புகிறவர்கள் கடிதம் மூலம் அறிவித்துவிட்டு நேரில் தொகையைச் செலுத்தலாம். அன்பர்கள் நிகழ்ச்சிகளில் மட்டும் கலந்துகொள்ளலாம். அன்பர்கள் முன்கூட்டி தெரிவித்தால் பகல் உணவு மட்டும் ஏற்பாடு செய்யப்படும். அதற்கு ரூ. 3-00 செலுத்தவேண்டும். அமைதியைக் காக்க 12 வயதுக்கு கீழ்ப்பட்ட சிறுமிகளும் கைக் குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும் இதில் சேர்த்துக்கொள்ளபட மாட்டார்கள். விருப்பமுள்ளவர்கள் இதில்கலந்துகொண்டு அம்பாளின் திருவருளுக்குப் பாத்திரமாவார்களாக.

முதல் நாள் நிகழ்ச்சி நிரல்

காலை

மணிமுதல்	மணிவரை	
8-30	8-45	பிரார்த்தனை தேவி மஹாத்மியம்
8-45	9-45	ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம அர்ச்சனை (1முதல் 500 வரை)
9-45	10-45	உபந்யாசம்
10-45	11-00	மௌனம்
11-00	12-15	ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம அர்ச்சனை (501 முதல் 1000 வரை)
12-15	3-00	பூஜை, உணவு, ஓய்வு

மாலை

மணிமுதல்	மணிவரை	
3-00	3-15	நாம ஜபம்
3-15	4-00	உபந்யாசம்
4-00	4-15	தியானம், ஆரதி, மங்களம்
5-00	5-30	ஸ்ரீ இராம நாம பஜனை
5-30	6-30	ஸ்ரீமத் இராமாயணத் துவக்கம்
6-30	7-00	ஸ்ரீமத் சுவாமிஜி அருளுரை

இரண்டாம் நாள் நிகழ்ச்சி நிரல்

காலை

மணிமுதல்	மணிவரை	
6-00	7-00	அர்ச்சனை
7-00	7-30	தியானம்
7-30	8-00	நாமஜபம்
8-00	9-00	அர்ச்சனை
9-00	9-30	நாமஜபம்
9-30	10-30	அர்ச்சனை
10-30	11-00	நாமஜபம்

மணிமுதல்	மணிவரை	
11-00	11-30	நாமஜபம்
11-30	12-00	நாமஜபம்
12-00	12-30	நாமஜபம்
12-30	1-00	நாமஜபம்
1-00	1-30	நாமஜபம்
1-30	2-00	நாமஜபம்
2-00	2-30	நாமஜபம்

மாலை

மணிமுதல்	மணிவரை	
2-30	3-30	உபந்யாசம்
3-30	4-00	நாமஜபம்
4-00	4-30	நாமஜபம்
4-30	5-00	பஜனை
5-00	6-15	அர்ச்சனை
6-15	6-30	ஆரதி
6-30	6-40	தியானம்
6-40		மங்களம்

குறிப்பு: திருவேடகம் விவேகானந்த கல்லூரி காரியதரிசி திரு K. ராமமூர்த்தி அவர்கள் 29ஆம் தேதி மாலை 5-30 முதல் 6-30 முடிய இராமாயண உபந்யாசம் செய்வார்கள். ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தஜி அவர்கள் இதில் கலந்துகொள்வார்கள். இனி தொடர்ந்து இங்கு ஒவ்வொரு ஞாயிறு அன்றும் மாலை 5-30 முதல 6-30 முடிய திரு K. ராமமூர்த்தி அவர்களால் இராமாயண சொற்பொழிவு நடைபெறும்.

திருப்பராய்த்துறை, ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
அந்தர்யோகம்

1984ஆம் ஆண்டு நவராத்திரி பூஜையின் கடைசி மூன்று தினங்களாகிய அக்டோபர் மாதம் 1, 2, 3 ஆகிய தேதிகளில் கீழ்க்கண்ட வாழ்க்கை முறைப்படி இங்கு அந்தர்யோகம் நடைபெறும். இதில் கலந்துகொள்ள விரும்பும் அன்பர்கள் செப்டம்பர் மாதம் 30ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை இரவே நேரில் நாள் ஒன்றுக்கு ரூ. 8-00 வீதம் ரூ. 24-00 உணவுக்காகச் செலுத்திப் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளவேண்டும். தாய்மார்களுக்கும் இதில் இடம் உண்டு. பன்னிரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும், கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும், நடைமுறையைப் பின்பற்ற இயலாதவர்களும் இதில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

வாழ்க்கை முறை

காலை	6	மணி முதல்	7	மணி வரை	தியானம்
,,	8	,,	9	,,	பஜனை
,,	9	,,	10	,,	லலிதா நாம விளக்க உபந்யாசம்
,,	11	,,	12	,,	அர்ச்சனை
மாலை	2	,,	3	,,	லலிதா நாம விளக்க உபந்யாசம்
,,	5	,,	6	,,	அர்ச்சனை
,,	6	,,	7	,,	தியானம்
இரவு	8	,,	9	,,	பஜனை

தியானம், லலிதா நாம விளக்க உபந்யாசம், அர்ச்சனை, பஜனை இந்த நிகழ்ச்சிகள் நடைபெறும் நேரங்கள் போக பாக்கியிருக்கும் 16 மணி நேரத்தில் இடைவிடாது நாமஜபம் நடந்துகொண்டிருக்கும். அந்தர்யோகத்தில் கலந்துகொள்ளும் அன்பர்கள் ஒவ்வொருவரும் காலையில் ஒருமணி நேரமும் மாலையில் ஒரு மணி நேரமும் அகண்ட நாம பஜனையில் கலந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இரவு 10 மணி முதல் காலை 4 மணி வரையில் மாணவர்கள் செய்யும் நாம பஜனையில் அன்பர்கள் தங்களுக்கு வசதிப்பட்டால் கலந்துகொள்ளலாம். தாய்மார்கள் இரவு 10 மணிமுதல் காலை 6 மணி வரை நடைபெறும் நாம ஜபத்தில் கலந்துகொள்ள மாட்டார்கள்.

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.